# சிறிலங்காவிலுள்ள

# பாரிய மனிதப் புதைகுழிகளும்

# வெற்றியடையாத அகழ்வுப் பணிகளும்

யூன் 2023



JDS Journalists for Democracy in Sri Lanka

FOD No More Disapperances

CHRD

INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT

“மாத்தளையிலுள்ள மனிதப் புதைகுழி பற்றிய தகவல்கள் தலைப்புச் செய்திகளில் வந்தபோது, என் தம்பி உட்பட பாதிக்கப்பட்ட அனைவருக்கும் ஏதேனும் நீதி கிடைக்கும் என்று நம்பினோம். குறைந்தபட்சம் அவர்களுக்கு உண்மையில் என்ன நடந்தது என்றேனும் தெரியவரும் என்று நாம் எதிர்பார்த்தோம். என்னுடைய அம்மாவுக்கு நல்ல வயது, இன்னமும் உயிருடன்தான் இருக்கின்றார். ஆயினும் தன்னுடைய மகனை இழந்த நாள்முதல் அனுபவித்து வரும் வேதனையிலிருந்தும் பாதிப்பிலிருந்தும் அவரால் ஒரு போதுமே மீண்டுவர முடியவில்லை. நாம் காவல்துறையிடம் சென்று, என்னுடைய தம்பியும் அவ்விடத்தில் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிப்பதாக வாக்குமூலம் வழங்கினோம். இது நடந்து பல ஆண்டுகள் கடந்து விட்டன, ஆயினும் எதுவுமே நடைபெறவில்லை. பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் ஒட்டுமொத்த வேதனையையும் தங்கள் தேவைக்குப் பயன்படுத்திய பின்னர் அரசியல் கட்சிகளும் ஊடகங்களும் இறந்தவர்களைக் கைவிட்டுவிட்டன. இக்குற்றச்செயல்களுக்குப் பொறுப்பானவர்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் எவ்விதமான ஒரு சிறு சவாலைக்கூட எதிர்கொள்ளாமல் அதிகாரத்தில் மேல் மட்டத்தில் உயர் பதவிகளில் குந்தியிருக்கின்றார்கள். ஆனால் சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டவர்கள் இன்னமும் புதைக்கப்பட்டுள்ளவர்களாகவும் மறக்கப்பட்டவர்களாகவுமே இருக்கின்றார்கள். இந்த வலியினை அனுபவிப்பவர்கள் நாமேயன்றி, வேறு எவரும் கிடையாது.”

**பந்துல இடமெகம,**

**1989 இல் காணாமல்போன ஆனந்த இடமெகமவின் சகோதரர்,**

**03 மே 2023 இல் நடந்த நேர்காணல்.**

# சிறிலங்காவிலுள்ள பாரிய மனிதப் புதைகுழிகளும் வெற்றியடையாத அகழ்வுகளும்

‘‘நான் அகழ்வுப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கையில் களைப்படைந்து, நிறுத்திவிடலாம் என்ற எண்ணம் எனக்கு ஏற்படும்போது, அப் புதைகுழியில் புதைக்கப்பட்டிருந்தவர்களில் நானும் இருந்திருந்தால் எப்படி இருக்கும் என்று நினைப்பேன். என்னை வெளியில் எடுக்கும் பணியை நிறுத்துவதை நான் விரும்பியிருக்கமாட்டேன்.’’

**மைக்கல் ஒன்ராஜ்ஜெ எழுதி 2000 ஆம் ஆண்டு வெளிவந்த அனிலின் ஆவி என்றும் நாவலில் (Anil’s Ghost) அனில் திஸ்ஸேரா கூறியிருந்தது.**

## சுருக்கம்

**இ**க்கூட்டறிக்கையானது சிறிலங்காவில் நடந்த மோதலின் பல்வேறு காலப்பகுதியைச் சேர்ந்த பாரிய மனிதப் புதைகுழிகளை சிறிலங்கா எவ்வாறு கையாண்டது என்பதை ஆய்வு செய்கின்றது. பல்லாயிரக்கணக்கான சடலங்கள் நாடாளாவிய ரீதியிலுள்ள புதைகுழிகளில் இன்னமும் புதையுண்டுதான் கிடக்கின்றன. கடந்த மூன்று தசாப்தங்களில், 20 மனிதப் புதைகுழிகள் பகுதியாக அகழ்வு செய்யப்பட்டுள்ளன. இற்றைவரை, எந்தக் குடும்பத்திற்கும் தங்களது அன்புக்குரியவர்களது மனித எச்சங்கள் கிடைக்கவில்லை.

சிறிலங்காவில் அமைக்கப்பட்ட ஏராளமான விசாரணை ஆணைக் குழுக்களில் ஒன்றுகூட பாரிய மனிதப் புதைகுழிகளை விசாரணை செய்வதற்கான ஆணையைக் கொண்டிருக்கவில்லை. மாறாக, உண்மையை வெளிக்கொண்டு வரும் முயற்சிகள் தடைப்பட்டுள்ளன. நீதிபதிகளும், தடயவியல் நிபுணர்களும் திடீர் இடமாற்றங்களுக்கு ஆளாக்கப் பட்டுள்ளனர், நீதிமன்ற உத்தரவுகளை நிறைவேற்றுவதை காவல்துறை தாமதப் படுத்தியுள்ளது, குடும்பங்களின் சட்டவாளர்கள் புதைகுழிகள் உள்ள இடங்களுக்குப் போவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது, தற்போதும் உயிருடன் உள்ள சாட்சிகளைக் கண்டறிவதற்கு எந்தவொரு முயற்சியும் எடுக்கப்படவில்லை, மரணத்திற்கு முந்தைய எந்தவொரு தரவுகளும் சேகரிக்கப்படவில்லை, யாரேனும் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டிருந்த ஒரு சில அரிதான வழக்குகளிலும், அக்குற்றவாளிகளுக்கு பின்னர் மன்னிப்பு வழங்கப்பட்டது. போதுமான சட்டக்கட்டமைப்பு இல்லாமை, ஒத்திசைவான கொள்கையின்மை மற்றும் போதுமான வளங்கள் இன்மை என்பன சேர்ந்த அரசியல் ஆர்வமின்மையின் விளைவே இதுவாகும். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களைப் பொறுத்த வரையில் இது ஒரு தீர்க்கப்படாத துன்பியல் சம்பவமாகும்; இழப்புக்களைச் சந்தித்தவர்கள் தங்கள் அன்புக்குரியவர்களைக் கண்டு பிடிக்காமலேயே வாழ்ந்து – சாகவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப்படுகின்றனர்.

கட்டுமானப் பணிகள் நடந்தபோது தற்செயலாக புதைகுழிகள் வெளிப்பட்டதையடுத்து, அல்லது – விதிவிலக்காக – 1999இல், யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள செம்மணி போன்ற, புதைகுழிகள் பற்றிய தகவல்கள் படைத்துறையைச் சேர்ந்தவர்களால் வழங்கப்பட்டதையடுத்து அதிகாரிகள் மீது ஏற்பட்ட நிர்ப்பந்தம் காரணமாகவே, இற்றைவரை நடந்த பெரும்பாலான அகழ்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த அகழ்வுப் பணிகளிலிருந்த குறைபாடுகளை இவ்வறிக்கை ஆய்வு செய்வதுடன், மாத்தளைப் புதைகுழி மற்றும் மன்னாரில் கண்டுபிடிக்கப்பட்ட இரு புதைகுழிகள் ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகள் தொடர்பாகவும் ஆராய்கின்றது. இதில் 2013இல் மாத்தளையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளில் 155 சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. இதைவிட 2013 இல் மன்னாரிலுள்ள ஒரு இடத்தில் மேற்கொள்ளப்பட்ட புதைகுழியில் 81 சடலங்களும் 2018 இல் கண்டுபிடிக்கப்பட்ட இன்னொரு புதைகுழியில் 318 சடலங்களும் மீட்கப்பட்டன. இவ்வறிக்கையின் பின்னிணைப்பில் CHRD, FoD , JDS மற்றும் ITJP ஆகியவற்றுக்குத் தெரிந்த இதர பாரிய மனிதப் புதைகுழிகளின் அகழ்வுப் பணிகள் நடந்த இடங்களின் விபரங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட போது, குறிப்பாக, சித்திரவதை மற்றும் துன்புறுத்தல் குற்றச்சாட்டுக்களுக்கு மேலதிகமாக, 2016ஆம் ஆண்டின் சட்டத்திற்குப் புறம்பான, ஏதேச்சதிகார, முழுமையான விசாரணைகளற்ற கொலைகளை செயற்றிறனுடன் தடுத்தலும் விசாரணை செய்தலும் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் மீளாய்வு செய்யப்பட்ட கையேடு (2016 Revised United Nations Manual on the Effective Prevention and Investigation of Extra-Legal, Arbitrary and Summary Executions) (மின்னெசோற்றா நெறிமுறை (Minnesota Protocol) என்றும் அறியப்படும் இவ்வாவணம் புதைகுழிகளின் அகழ்வுப் பணிகள் தொடர்பான வழிகாட்டல்களையும் உள்ளடக்கியுள்ளது), மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வழிகாட்டல்கள், காணாமல் போன ஆட்கள் தொடர்பான சர்வதேச ஆணைக்குழுவின் (International Commission on Missing Persons-ICMP) பாரிய மனிதப் புதைகுழிகளின் பாதுகாப்பும் விசாரணையும் தொடர்பான 2020 போர்ண்மௌத் நெறிமுறை (2020 Bournemouth Protocol on Mass Grave Protection and Investigation) ஆகிய ஆவணங்களில் விளக்கப்பட்டுள்ள சர்வதேச நியமங்கள் மற்றும் நல்ல நடைமுறைகளைக் கடைப்பிடிக்கத் தவறியமையை இவ்வறிக்கை கோடிட்டுக் காட்டுகின்றது. சிறிலங்காவில் நடந்த அகழ்வுப் பணிகளின் பிரதான குறைபாடுகளில் ஒன்று குடும்பங்களின் பங்குபற்றல் இல்லாமையாகும். திருப்திகரமாக நடந்திராத, குற்றவியல் விசாரணைகள் நடந்த வழக்குகளில்கூட, குடும்பங்கள் பெரும்பாலும் அலட்சியப்படுத்தப்பட்டன.

இன்று வரை, ஒரு சில அகழ்வுப்பணிகள் மட்டுமே, அதில் புதைக்கப்பட்டிருந்தவர்கள் காணாமல் போனதற்கும் கொல்லப் பட்டதற்கும் பொறுப்பாக இருந்தவர்கள் மீது வழக்குத் தொடர்ந்து தண்டனை வழங்கப்படுவதுடன் மட்டுமன்றி, பாதிக்கப் பட்டவர்களை அடையாளம் காண்பதற்கும் அல்லது அவர்களது மரணம் நிகழ்ந்த புறச்சூழல்களின் தெளிவுபடுத்தல்களுக்கும் இட்டுச்சென்றன.

பாரிய மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்ட, அகழ்வுப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பிரதேசத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் காணாமல் போனவர்களின் உறவினர்களிடம் இருந்து மரணத்திற்கு முன்னதான தரவுகளைச் சேகரித்துக் கொள்ளும் எந்தவொரு கட்டமைப்போ, செயற்பாடோ அல்லது நடைமுறையோ கூட இல்லை. இவ்வாறாக தகவல்களைச் சேகரிப்பதன் நோக்கம், கண்டுபிடிக்கப்படும் மனித எச்சங்களை அடையாளம் காண்பதும், அவற்றை உறவினர்களிடம் ஒப்படைப்பதுமே ஆகும். ஆனால் இவ்வாறான எந்தவொரு மரணத்திற்கு முன்னதான தரவுகளும், உதாரணத்திற்கு மன்னாரிலோ அல்லது மாத்தளையிலோ, சேகரிக்கப் படவேயில்லை. 1999 இல் நடந்த செம்மணி அகழ்வின்போது, கண்டெடுக்கப்பட்ட இரண்டு மனித எச்சங்களை அவற்றிலிருந்த உடைகளை வைத்து, அவர்களது குடும்பங்கள் அடையாளம் கண்டுகொண்டன. 1996 ஓகஸ்ற் 19 ஆம் திகதி இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டு, காணமல்போன வாகனத் திருத்துமிட பணியாளர்களே அவர்களாவர். இவர்களில் ஒருவரது கண்கள் அவர் அணிந்திருந்த மேலாடையைக் கொண்டே கட்டப் பட்டிருந்து; மற்றையவருடைய கைகள் அவர் அணிந்திருந்த உள் மேலாடையைப் பயன்படுத்திப் பின்பக்கமாகக் கட்டப்பட்டிருந்தது. அப்படியிருந்தும் கூட, அவர்களது எச்சங்கள் அவர்களது குடும்பங்களிடம் ஒருபோதுமே ஒப்படைக்கப் படவில்லை.

சிறிலங்காவின் சட்டக்கட்டமைப்பு போதுமானதாக இல்லை என்று பல ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்களாலும், வலிந்து அல்லது விருப்பத்திற்கு மாறாக காணாமல் ஆக்கப்பட்டோார தொடர்பான பணிக்குழு, (Working Group on Enforced or Involuntary Disappearances) மற்றும் உண்மை, நீதி, இழப்பீடு, மீள்–இடம்பெறாமல் நடைபெறாமல் இருப்பதற்கான உத்தர வாதங்களை மேம்படுத்துவதற்கான சிறப்புத் தூதுவர் (The Special Rapporteur on truth, justice, reparation and guarantees of non-recurrence) போன்ற ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு அமைப்புக்களாலும் சுட்டிக் காட்டப்பட்டது. உதாரணத்திற்கு, நல்லிணக்கப் பொறிமுறைகளுக்கான ஆலோசனைப் பணிக் குழுவின் (Consultation Task Force on Reconciliation Mechanisms) 2016 ஆம் ஆண்டின் இடைக்கால அறிக்கையில் சந்தேகத்திற்கிடமான புதைகுழிப் பிரதேசங்களில் கடந்த காலங்களில் நடந்த விசாரணைகளின்போது இருந்த குறைபாடுகளாக 'தன்னிச்சையான நடைமுறைகள், சம்பந்தப்பட்ட தரப்பினரிடையே இணைந்து செயற்படும் தன்மையின்மை, மற்றும் சட்ட மருத்துவ அதிகாரியை ஈடுபடுத்த வேண்டும் என்ற கட்டாயம் இல்லாமல் இருந்தமை' போன்றவை கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

விசாரணைச் சட்ட வரைபும் நியம செயற்பாட்டு நடைமுறைகளும் 2015 முதல் தயாரிக்கப்பட்டுவரும் அதே நேரத்தில், அவை இன்னமும் இறுதி செய்யப்படவுமில்லை. அல்லது இவ்வரைபுகள் வெளியிடப்படவோ அல்லது சம்பந்தப்பட்ட தரப்பினருடைய ஆலோசனையைப் பெற்றுக் கொள்வதற்கு அனுப்பி வைக்கப்படவோ இல்லை. (2016 இல் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட) காணாமல் போன ஆட்கள் தொடர்பான அலுவலகம் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்றது. அத்துடன் அகழ்வுப் பணிகளைக் கண்காணிப்பதற்கான அதிகாரமும் அவ் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பில் நீதி மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சுடன் கலந்துரையாடல்களை 2018 இல் ஆரம்பித்தது. எனினும், CHRD, FoD , JDS இனாலோ அல்லது ITJP இனாலோ அதன் பிரதியைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் 2023 ஏப்ரலில் இதன் பிரதியை வழங்குமாறு FoD கேட்டுக்கொண்ட போதிலும் அதனால் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

காணாமல் போன ஆட்கள் தொடர்பான அலுவலகம் அமைக்கப் பட்டமையானது சில நம்பிக்கைகளை ஏற்படுத்தியிருந்தாலும் கூட, அதன் ஆணையினை நிறைவேற்றவும், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் நம்பிக்கையினை பெற்றுக்கொள்ளவும் அவ்வமைப்புத் தவறியுள்ளது. காணாமல் போன ஆட்கள் தொடர்பான அலுவலகத்தின் அண்மைய வருடாந்த அறிக்கையானது (2021) பாரிய மனிதப் புதைகுழிகள் மீதான அதன் வகிபாகம் தொடர்பில் மிகக்குறைந்த தகவல்களையே கொண்டுள்ளது. முறையான விண்ணப்பம்

அனுப்பப்பட்ட போதிலும், இது தொடர்பான மேலதிகமான விபரங்கள் வழங்கப்படவில்லை.

அகழ்வுப் பணிகளில் உள்ள இன்னுமொரு பெரிய பிரச்சினை அதில் காணப்படும் அரசியல் தலையீடாகும். ஒரு அரசியல்வாதி அல்லது அவர்களுக்கு நெருக்கமானவர்கள் சம்பந்தப்பட்ட குற்றச்செயல்களில் ஈடுபட்டிருந்தால், அவர்கள் அகழ்வுப் பணிகளைக் குழப்புவதை இலக்காக் கொண்டு பல்வேறு தலையீடுகளைச் செய்கின்றார்கள். 2014இல் மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடிப் பகுதி தொடர்பான விசாரணை ஆரம்பத்தில், அவை தமிழீழ விடுதலைப் புலிகளால் கொலை செய்யப்பட்டவர்களுடையதாக இருக்கலாம் என்ற அனுமானத்தில் விரைவாக நடைபெற்றது. எனினும், 2004ஆம் ஆண்டில் தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து பிரிந்து, சிறிலங்கா பாதுகாப்புப் படைகளுடன் இணைந்து செயற்பட்டு, 2018 இல் மகிந்த ராஜபச்சவின் அரசாங்கத்தில் உத்தியோகபூர்வமாக இணைந்து கொண்ட, விநாயகமூர்த்தி முரளிதரன் (கேணல் கருணா) இதில் சம்பந்தப்பட்டிருந்தார் என்பதை இப்புதைகுழி தொடர்பான விசாரணைகள் வெளிக்காட்டப் போகின்றன என்பதை அரசு புரிந்துகொண்ட போது, அவை இடை நிறுத்தப்பட்டன. நீதிமன்றத்தில் முதலாவது முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டு கிட்டத்தட்ட 10 ஆண்டுகள் கடந்த போதிலும் கூட, அகழ்வுப் பணிகள் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை.

அரசியல் தலையிட்டின் பிரதான உதாரணமாக, (1989 யூலை முதல் 1990 ஜனவரி வரை மாத்தளை மாவட்டத்தின் இராணுவ ஒருங்கிணைப்பு அதிகாரியாகவும் பின்னர் சிறிலங்காவின் ஜனாதிபதியாகவும் இருந்த) அப்போதைய பாதுகாப்புச் செயலரான கோத்தபாய ராஜபக்ச மாத்தளையில் நடந்த அகழ்வுப் பணிகளில் கொண்டிருந்த வகிபாகத்தினைக் குறிப்பிடலாம். மாத்தளை மாவட்டம் உள்ளடங்கும் மத்திய மாகாணத்தின் அனைத்து காவல் நிலையங்களிலுமிருந்த, ஐந்து வருடத்திற்கு முந்தைய சகல பதிவுகளையும் கோப்புக்களையும் அழித்து விடும்படி உத்தரவிட்டப்பட்டதாகச் சொல்லப்பட்டுகின்றது. சிறிலங்கா கையொப்பமிட்டுள்ள, வலிந்து காணாமல் ஆக்கப்படுவதிலிருந்து மக்களைப் பாதுகாப்பது தொடர்பான சர்வதேச ஒப்பந்தத்தின் (International Convention on the Protection of People from Enforced Disappearances) சரத்து 12(4) இல் கூறப்பட்டுள்ளது போன்று, விசாரணை நடவடிக்கைகளைத் தடைசெய்யும் செயற்பாடுகளில் இருக்கும் வகிபாகம் தொடர்பாக கோத்தபாய ராஜபக்சாவிற்கும் இதர மூத்த காவல்துறை அதிகாரிகளுக்கும் எதிராக சிறிலங்கா அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேநேரத்தில் அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் (கோத்தபாயாவின் சகோதரர்) ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவினை உருவாக்கினார். இது மாத்தளை நீதிமன்றத்தில் விசாரணை நடந்த அதே நேரத்தில் தன்னுடைய விசாரணையையும் நடாத்தியது. இந்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு கண்டுபிடிக்கப்பட்ட எச்சங்களின் மாதிரிகளை வெளிநாட்டுக்கு காலநிர்ணயத்திற்கான கார்பன் கதிரியக்கப் பரிசோதனைகளுக்கு (Carbon Dating) அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டது. சிறிலங்காவில் மேற்கொள்ளப் பட்ட தடயவியல் ஆய்வுகள் அந்த மனித எச்சங்கள் 1980களின் பிற்பகுதியைச் சேர்ந்தவை என்று தெரிவித்தன. ஆனால் இதற்கு முரணாக வெளிநாட்டிற்கு அனுப்பப்பட்டு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் இவை 1950 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியைச் சேர்ந்தவை எனத் தெரியவந்தன. (இவ்விரு ஆய்வுகளும் மனித எச்சங்கள் சித்திரவதைக்கு உட்பட்டுக் கொல்லப்பட்டதற்கான ஆதாரங்கள் இருந்ததைக் கண்டறிந்தன.) 1980களின் இறுதிப் பகுதியில் மாத்தளை மாவட்டத்தில் பொறுப்பாக இருந்த அதிகாரிகளை பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தத் தவறியமை தொடர்பாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான ஐ.நா. பணிக்குழு உட்பட ஐக்கிய நாடுகள் சபையின் நான்கு விசேட அமைப்புக்கள் 2013 ஜனவரியில் சிறிலங்கா அரசாங்கத்திற்குக் கடிதம் எழுதின.

சிறிலங்காவின் தடயவியல் நிபுணத்துவம் வரையறுக்கப் பட்டதாகவே தொடர்ந்தும் இருக்கின்றது. அத்துடன் அகழ்வுப் பணிகளில் கண்டு பிடிக்கப்படும் எந்தவொரு எச்சங்களையும், ஆதாரங்களையும் பரிசோதனைகளுக்கு வெளிநாடுகளுக்கே அனுப்பி வைக்கப்பட வேண்டியுள்ளது. இதர நாடுகளுடன் ஒப்பிடுகையில், நிபுணர்கள் தங்களது அறிக்கைகளை நீதிமன்றங்களுக்குச் சமர்ப்பிப்பதில் கணிசமான தாமதம் நிகழ்கின்றது. உதாரணமாக, 2019 யூன் 30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட வேண்டிய மன்னார் சத்தோச அகழ்வு தொடர்பான அறிக்கை, மே 2023 வரை சமர்ப்பிக்கப்படவே இல்லை. தோண்டப்பட்ட இடத்திலிருந்து மீட்கப்பட்ட சில கலைப்பொருட்கள் விசாரணைக் குழுவிடம் இன்னமும் வழங்கப் படாததே இந்தத் தாமதத்திற்குக் காரணம் என்று சொல்லப்பட்டது. எனினும், இத்தாமதத்திற்கு வழங்கப்பட்டுள்ள காரணங்கள் தொடர்பாக இந்த அகழ்வுப்பணிகளை நெருக்கமாகக் கண்காணித்து வரும் அமைப்புக்கள் தமது சந்தேகத்தினையும் ஐயத்தினையும் வெளிப்படுத்தியுள்ளன.

இந்த அகழ்வுப்பணிகள் சம்மந்தப்பட்ட வழக்குகளில், சந்தேக நபர்கள் கைதுசெய்யப்படும் மிக அரிதான நிகழ்வில்கூட, வழக்குகள் கைவிடப்படுவதற்கும், அதன் மூலமாக சந்தேக நபர்கள் பிணையில் செல்ல அனுமதிக்கப்படுவதற்கும் அல்லது நிலுவையிலுள்ள நடவடிக்கைகள் முன்னுருரிமைப்படுத்தப் படாமைக்கும் சட்டமா அதிபர் அலுவலகம் மையமாக இருந்து செயற்பட்டுள்ளது. உதாரணமாக, யாழ்ப்பாண மாவட்டத்தின் செம்மணியில் 1998 இல் அகழ்வுமேற்கொள்ளப்பட்ட பாரிய மனிதப் புதைகுழிகள் தொடர்பில், 15 பேர் காணாமல் ஆக்கப்பட்டதற்கு பாதுகாப்புப் படைவீரர்களே காரணம் என்று ஐவர் கொண்ட ஆணைக்குழு அடையாளம் கண்டதுடன், நான்கு இராணுவ அதிகாரிகளும் கைது செய்யப்பட்டார்கள். ஆனால், அவ்விசாரணைக் குழுவின் அறிக்கை ஒருபோதுமே வெளியிடப் படவில்லை. மாறாக, சட்டமா அதிபர் அலுவலகத்தின் கட்டளையின் பேரில், 2000 யூலையில் அச்சந்தேக நபர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர். பின்நாட்களில் அவர்கள் அனைவருக்கும் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன.

இதுபோன்று 1995இல் நடந்த கொழும்பின் போல்கொடா ஏரியிலும் அருகிலுள்ள இதர வாய்க்கால்களிலும் கண்டுபிடிக்கப்பட்ட 21 சடலங்கள் தொடர்பில், அவர்களைக் கொலை செய்தார்கள் என்று சந்தேகத்தின் பேரில் குற்றம்

சாட்டப்பட்ட சிறப்பு அதிரடிப்படை அதிகாரிகளுக்கு எதிரான வழக்கில், சட்டமா அதிபர் அலுவலகம் நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறியபோது, கொழும்பு தலைமை நீதிபதி அவ்வழக்கினைத் தள்ளுபடி செய்தார். சட்டமா அதிபர் அலுவலகம் வருகைதராமை 'நீதிக்கு ஏற்படுத்தப்பட்ட இடையூறு' என நீதிபதி தெரிவித்தார். பின்னர், இந்த அதிகாரிகளுக்கு எதிராக போதுமான ஆதாரங்கள் இல்லை என்று தெரிவித்த சட்டமா அதிபர் அலுவலகம், மாறாக அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு பரிந்துரை வழங்கியது.

உண்மை, நீதி, இழப்பீடுகள் மற்றும் திரும்பவும் நடைபெறாது என்பதற்கான உத்தரவாதங்கள் தொடர்பான ஐ.நா.விசேட தூதுவர் 2019 இல் சிறிலங்காவிற்கு மேற்கொண்ட பயணத்தின் பின்னர் பின்வருமாறு கூறினார்:

“நடுத்தர வருமானம் கொண்ட சிறிலங்கா போன்ற இத்தகைய நாடுகளில் இவ்வாறான பிரச்சினைகள் இருப்பது அசாதாரணமானது”

அத்துடன்:

“அரச கட்டமைப்புக்களால் இழைக்கப்படும் குற்றங்கள்' இன்னொரு வார்த்தையில் சொல்லப்போனால், திட்டமிட்ட மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட அரச கட்டமைப்புக்கள் சம்பந்தப் படுவதும், சர்வதேச மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களின் பாரதுரமான மீறல்கள் மற்றும் முறைகேடுகளைக் கொண்டிருப்பதுமான குற்றச்செயல்கள் தொடர்பில் விசாரணை செய்து, வழக்குத் தொடர்வது மட்டில் தன்னுடைய நிபுணத்துவத்தினை அவரசமாக மேம்படுத்த வேண்டிய தேவை சிறிலங்காவுக்கு உள்ளது”

என்றும் கூறினார்.

**இவ்வறிக்கையினை எழுதிய அமைப்புக்கள் சிறிலங்கா அரசாங்கத்திற்கு விடுக்கும் முக்கிய பரிந்துரைகள் கீழே உள்ளன:**

1. பாரிய மனிதப் புதைகுழிகளை எவ்வாறு நிருவகித்தல், அகழ்வுகளை மேற்கொள்ளுவதற்கென விசேட சட்டத்தினையும் கொள்கையினையும் இயற்றுதல். இதில் அடையாளம் காணுதல், பாதுகாத்தல், மற்றும் பின்னர் விசாரணை மேற்கொள்ளுதல் ஆகியனவும் உள்ளடங்கவேண்டும். புதைகுழிகளிலிருந்து அல்லது நிலத்திலிருந்து எடுக்கப்படும் எலும்புக்கூடுகளின் எச்சங்கள் பாதுகாப்பாகக் களஞ்சியப்படுத்துவதும் அதன் பாதுகாப்பு மற்றும் இடமாற்றங்களைக் கண்காணிக்கும் படிமுறைகள் (chain of custody) மாற்றப் படாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதும் பாதுகாத்தலின்கீழ் உள்ளடக்கப்படல் வேண்டும்;

2. முன்மொழியப்பட்டுள்ள சட்டக் கட்டமைப்பு, கொள்கை, மற்றும் பாரிய மனிதப் புதைகுழிகள் மீதான நியம செயற்பாட்டு நடைமுறைகள் என்பன தொடர்பாக, ஐக்கிய நாடுகள் சபை மற்றும் இதர சர்வதேச வல்லுனர்கள் உட்பட, வெளிப்படையான ஆலோசனை செயற்பாடு ஒன்றினை மேற்கொண்டு, நியம செயற்பாட்டு நடைமுறைகள் உள்ளிட்ட மேற்கொள்ளப்பட்டும் கட்டமைப்பு அல்லது கொள்கையானது மின்னெசோற்றா மற்றும் போர்ண்மௌத் நெறிமுறைகளில் உள்ள தொடர்புபட்ட விதிமுறைகளுடன் முழுமையாக இணைந்துபோகின்றன என்பதை உறுதிப்படுத்தல்;

3. பாரிய மனிதப் புதைகுழிகள் தொடர்பானது உள்ளிட்ட நாட்டிலுள்ள தடயவியல் ஆய்வுத்திறனை மேம்படுத்தல். 'தேவையான நிபுணத்துவம் கிடைக்கும் வரை' அகழ்வுப் பணிகளை இடை நிறுத்துவதற்காக காணாமற்போனவர்கள் மீதான அகில இலங்கை ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் வேண்டும். மரபணு விபரக்குறிப்பு, கணணி மயப்படுத்தப்பட்ட முகமீள் உருவாக்கம் மற்றும் முகஅடையாளம் காண்தல், காணொளி மூலமான முகவுருக் கட்டமைப்பு ஒப்பீடு, மற்றும் உடற்கூற்றளவையியல்சார் ஆய்வுகள் உள்ளட்ட வசதிகள் கொண்ட மனித அடையாள மையத்தினை (Human Identification Centre) உருவாக்கி, நோயியல் நிபுணர்களுக்கும் இதர விஞ்ஞானிகளுக்கும் பயிற்சிகள் வழங்குதல்;

4. சட்டமா அதிபர் அலுவகத்தை மீள்கட்டமைப்புச் செய்தல், சுயாதீன வழக்குத்தொடரும் சேவையொன்றினை உருவாக்கி, அகழ்வுப் பணிகளின் முடிவுகள் தொடர்பான வழக்குகள் விசாரணைகள் சுயாதீனமாகவும் பக்கச்சார்பற்ற முறையிலும் இடம்பெறுகின்றன என்பதை உறுதிப்படுத்தல்.

**மேலும் இவ்வறிக்கையினை எழுதிய அமைப்புக்கள், காணாமல்போன ஆட்கள் தொடர்பான அலுவலகத்திடமும் சர்வதேச சமூகத்திடமும் (குறிப்பாக சர்வதேச செஞ்சிலுவைக் சங்கம் மற்றும் காணாமல் போன ஆட்கள் தொடர்பான சர்வதேச ஆணைக்குழு ஆகியவற்றிடமும்) நடவடிக்கை எடுக்கும்படி கூட்டாகக் கோரிக்கை விடுக்கின்றன. அதிலும் குறிப்பாக பின்வரும் நடவடிக்கைகளை கோரி நிற்கின்றன:**

1. பாரிய மனிதப் புதைகுழிகள் இருக்கக்கூடிய இதர இடங்களில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு தொழில்துறை ரீதியில் சிறப்புத் தேர்ச்சி வாய்ந்த நிபுணர்களைக் கொண்ட அணியினை உருவாக்குதல், அவர்களது தடயவியல் ஆய்வுத்திறனை மேம்படுத்துவதுடன், மரபணுப் பரிசோதனை உள்ளிட்ட போதுமான வளங்கள் அவ்வணியிடம் உள்ளன என்பதை உறுதிப்படுத்தல்;

2. புதைகுழிகள் இருக்கக்கூடிய அனைத்து இடங்களையும் ஆராய்ந்து, அவற்றின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக போர்ண்மௌத் நெறிமுறையில் கூறப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்கு அமைவாக தகவல்தளம் ஒன்றினை உருவாக்குதல்;

3. பதவிக்காலத்தின் பாதுகாப்பு, சேவையின் தரம், ஆளணி நிர்வாகம், பதவி உயர்வுகள் மற்றும் பதவி நீக்கங்கள் உள்ளிட்ட நீதித்துறையின் ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பான விடயங்கள் என்பவற்றுடன் சர்வதேச குற்றச்செயல்கள் மீதான பயிற்சியும் வழங்கி நீதித்துறையின் சுயாதீனத்தை வலுப்படுத்தல்.

# உள்ளடக்கம்


அறிமுகம் ........ 11

1. சர்வதேச, தேசிய ரீதியிலான சட்டக் கட்டமைப்புக்கள் ........ 14

1.1 சர்வதேச நியமங்கள் ........ 15

பொருத்தமான சர்வதேச மனித உரிமைகள் சட்டம் ........ 15

பொருத்தமான சர்வதேச குற்றவியல் சட்டம் ........ 19

பொருத்தமான வழக்கத்திலுள்ள சர்வதேச மனிதாபிமானச் சட்டம் ........ 20

1.2 சிறிலங்காவின் தேசியச் சட்டங்கள் ........ 21

2. அகழ்வுப் பணிகளில் திரும்பத் திரும்ப நிகழ்ந்த தவறுகள் ........ 29

2.1 குடும்பங்களின் பங்களிப்பும் பாதுகாப்பும் ........ 30

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களை அல்லது அவர்களது சட்டத்தரணிகளைத் தடுத்தல் ........ 30

நீதிபதியின் உத்தரவுகள் பொதுமக்களைச் சென்றடைவதைத் தடுத்தல் – நீதிபதிகளை இடம்மாற்றுதல் ........ 31

குடும்பங்களை அரைகுறையாக நேர்காணல் செய்தல் அல்லது நேர்காணல் மேற்கொள்ளாமை ........ 31

இறப்புக்கு முன்னரான தரவுகள் இன்மையால் குறைவடையும் மனித எச்சங்களை இனம்காணும் வாய்ப்புகள் ........ 31

உளவியல் மற்றும் சமூக ஆதரவின்மை ........ 32

சடலங்களை அடையாளங்கண்டு, உறவினர்களிடம் ஒப்படைக்காமை ........ 32

2.2 பொருத்தமான சட்ட, கொள்கை மற்றும் செயற்பாட்டுக்கான கட்டமைப்பில் தெளிவின்மை ........ 33

அடையாளம் காணப்படாத உயிருடன் இருக்கும் சாட்சிகள் ........ 34

வெளிப்படைத்தன்மையின்மை ........ 35

2.3 அரசியல் தலையீடுகள் ........ 36

2.4 சாட்சியப் பாதுகாப்பும் பகுதி முகாமைத்துவமும் ........ 38

2.5 தொடர்ச்சியான இடமாற்றங்கள் ........ 39

2.6 தொழில்நுட்ப அமைப்பு ........ 42

2.7 வளங்களை மட்டுப்படுத்தல் ........ 45

2.8 சட்டமா அதிபர் அலுவலகத்தின் வகிபாகம் ........ 46

3. தீர்மானங்களும் பரிந்துரைகளும் ........ 48

3.1 கடந்தகால அகழ்வுகளை நெறிப்படுத்துவதற்கான பரிந்துரைகள் ........ 50

3.2 OMP இற்கும் ICRC மற்றும் ICMP உள்ளிட்ட சர்வதேச சமூகத்தினருக்குமான எதிர்கால அகழ்வுகள் தொடர்பான பரிந்துரைகள் ........ 53

பின்னிணைப்பு :

இன்றுவரை மனித எச்சங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்ட இடங்களின் பட்டியல் ........ 54

*"மாத்தளையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுடன் யாரும் பேசவில்லை, அத்துடன் இவ்வழக்கு மீளவும் 'கிடப்பில் போடப்பட்டுள்ளதால்' அகழ்வுப்பணிகள் அவர்களுக்கு ஏற்படுத்திய நம்பிக்கைகளும் மறுபடியும் காணாமல்போயுள்ளன. இதனைத்தான் நாம் வேறு இடங்களிலும் பார்த்திருக்கின்றோம்."*[1]

[1] 2023 ஏப்ரல் 5 அன்று நடந்த பிறிற்றோ பெர்ணான்டோவுடனான நேர்காணல்

# அறிமுகம்

1983ஆம் ஆண்டிற்கும் 2009ஆம் ஆண்டிற்கும் இடையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கானோரின் சடலங்களைக் கொண்ட பாரிய மனிதப் புதைகுழிகள் ஆயிரக்கணக்கில் இல்லாவிட்டாலும், நூற்றுக்கணக்கிலாவது சிறிலங்காவில் காணப்படுகின்றன. இதுவரை வெறும் இருபது பகுதிகளில் மட்டுமே அகழ்வுப்பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. [2] நாட்டின் தென்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகள் பரந்தளவிலான வன்முறைகள் இடம்பெற்றமையை வெளிக்கொண்டு வந்தன. குறிப்பாக மக்கள் விடுதலை முன்னணியின் (JVP) ஆயுதக் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக 1987 ஆம் ஆண்டிற்கும், கிளர்ச்சி முறியடிக்கப்பட்ட 1990 ஆம் ஆண்டிற்கும் இடையில் அரசாங்கப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களை இவை வெளிக்கொண்டு வந்தன. 1983–2009 இடைப்பட்ட காலப்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான ஆயுத மோதலின் போது பாதுகாப்புப் படையிரால் திட்டமிட்டும் பரந்தளவிலும் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்களின் அப்பட்டமான நினைவுபடுத்தலாக நாட்டின் வடக்கிலும் கிழக்கிலும் மேற்கொள்ளப்பட்ட இதர மனிதப் புதைகுழிகளின் அகழ்வுப்பணிகள் காணப்படுகின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடியிலுள்ளது போன்ற ஏனைய பாரிய மனிதப் புதைகுழிகள் விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்ட மக்களின் இன்னமும் அகழ்ந்தெடுக்கப்பட வேண்டிய எலும்புக் கூடுகளின் எச்சங்களைக் கொண்டுள்ளன.

2013 இல் மாத்தளையிலும்[3], அல்லது 2018 இல் மன்னாரிலும் இடம்பெற்றது போன்று, கட்டுமானப் பணிகள் நடந்தபோது தற்செயலாக பாரிய மனிதப் புதைகுழிகள் வெளிப் பட்டதையடுத்து, அல்லது – விதிவிலக்காக – 1999 இல், யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள செம்மணி போன்ற, பாரிய மனிதப் புதைகுழிகள் பற்றிய தகவல்கள் பாதுகாப்புப்படை உறுப்பினர்களால் வழங்கப்பட்டதையடுத்து, [4] அதிகாரிகள் மீது ஏற்பட்ட நிர்ப்பந்தம் காரணமாகவே இற்றைவரை நடந்த பெரும் பாலான அகழ்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. தங்களது அன்புக்குரியவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு விடுவார்கள் என்ற நம்பிக்கையினை காணாமற்போனவர்களின் குடும்பங்களுக்கு ஒவ்வொரு அகழ்வும் ஏற்படுத்தியது. எனினும், இற்றைவரை, சிறிலங்கா அரசின் அணுகுமுறையால் ஒருசில மனித எச்சங்களே அடையாளம் காணப்பட்டதுடன், காணாமல் போனதற்குப் பொறுப்பானவர்களில் சிலர் மட்டுமே நீதியின்முன் நிறுத்தப்பட்டார்கள்.

இப் பாரிய மனிதப் புதைகுழிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளின் குறைபாடுகளை இவ்வறிக்கை ஆய்வு செய்கின்றது, இதில் 155 சடலங்கள் மீட்கப்பட்ட மாத்தளை பாரிய மனிதப் புதைகுழியும், மன்னார் மாவட்டத்தில் 2013 இல் 81 சடலங்கள் மீட்கப்பட்ட புதைகுழியும், 2018 இல் 28 சிறுவர்களது உட்பட 318 பேருடைய சடலங்கள் மீட்கப்பட்ட மற்றுமொரு புதைகுழியும் உள்ளடங்கும். இன்றுவரை CHRD, FoD , JDS மற்றும் ITJP ஆகிய அமைப்புக்களுக்குத் தெரிந்த புதைகுழிகளின் பட்டியல் ஒன்று இவ்வறிக்கையின் பின்னிணைப்பில் உள்ளது. இவற்றில், (செம்மணி போன்ற) சட்டவிரோதமாகப் புதைக்கப்பட்ட இடங்களின் அகழ்வுப் பணிகளும், தடயவியல் ஆய்வுகளும், (பொல்கொட போன்ற) ஏரிகள், குளங்களில் மீட்கப்பட்ட சடலங்கள் பற்றியும், அத்துடன் எலும்புக்கூடுகள் தற்போதும் காணப்படும் புதைகுழிகளின் விபரங்களும் உள்ளடக்கப்

[2] குவாட்டமாலாவில் 36 வருடங்கள் நடந்த உள்நாட்டுப் போரின் பின்னர், 1996 ஆம் ஆண்டிற்கும் 2012 ஆம் ஆண்டிற்கும் இடையில் 6,000 இற்கும் மேற்பட்ட அகழ்வுப் பணிகள் நடைபெற்றன. https://www.ictj.org/news/guatemalas-claudia-paz-crimes-past-and-present-justice-must-be-done. முன்னாள் யூக்கோஸ்லாவியாவில், மோதல் காரணமாக காணாமற்போனதாக முறைப்பாடு செய்யப்பட்ட 40,000 பேரில் 27,000 (70%) இற்கும் மேற்பட்டவர்களது சடலங்கள் மீட்கப்பட்டன. https://www.icmp.int/news/sida-director-general-carin-jamtin-visits-icmps-western-balkans-program/. ஸ்பெய்ன் நாட்டில், உள்நாட்டுப்போருடன் தொடர்புடைய குறைந்தது 2,000 புதைகுழிகள் கண்டு பிடிக்கப்பட்டன. ஆனால், இன்னும் பல அடையாளம் காணப்படாமலேயே இருக்கின்றன. José-Paulino Fernández-Álvarez and others, 'Discovery of a mass grave from the Spanish civil war using ground penetrating radar and forensic archaeology', Forensic Science International, vol 267 (Oct 2016), p e10–e17

[3] மே 2022 இல் ITJP யினால் வெளியிடப்பட்ட 1989 இல் நடந்த பெரும் அட்டூழியங்களில் கோத்தபாய ராஜபக்சவின் வகிபாகம் என்னும் ஆவணம், https://itjpsl.com/reports/gotabaya-rajapaksa-the-sri-lankan-presidents-role-in-1989-mass-atrocities

[4] அனைத்துலக மன்னிப்புச் சபை, சிறிலங்கா: செம்மணி அகழ்வுப்பணி – உண்மை மற்றும் நீதியை நோக்கிய சாதகமான முதற்படி, 1999, யூன் 22., https://www.amnesty.org/ar/wp-content/uploads/2021/06/asa370171999en.pdf


பட்டுள்ளன.[5] முக்கியமான சர்வதேச குற்றங்கள் மற்றும் இதர பாரதூரமான மனித உரிமை மீறல்கள் தொடர்பில், அவை எப்போது இழைக்கப்பட்டன அல்லது எந்த மோதலில் இழைக்கப்பட்டன என்பதையெல்லாம் தாண்டி, பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்துவதற்கு இயலாத நிலையில் அல்லது விரும்பாத நிலையில் சிறிலங்கா அரசாங்கம் உள்ளது என்பதற்கு வலுச்சேர்ப்பதாகவே அகழ்வுப் பணிகளில் ஏற்பட்ட பல தோல்விகள் அமைகின்றன.

2009 இல் வடக்கிலும் கிழக்கிலும் நடந்த போர் முடிவுக்கு வந்தபோது காணாமல் போனவர்கள் மற்றும் கொல்லப் பட்டவர்களது எச்சங்கள் உட்பட, இன்னும் பல பாரிய மனிதப் புதைகுழிகள் தோண்டியெடுக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் இன்னமும் இருப்பதாகவே தெரிகின்றது. கடந்தகால அகழ்வுப் பணிகளிலிருந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கும், எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் அகழ்வுப்பணிகள் உண்மை, நீதி, மற்றும் பரிகாரங்களுக்கான குடும்பங்களின் உரிமையினை முழுமையாக நிலைநிறுத்துவதற்குமான நேரம் இதுவேயாகும்.[6]

[5] இப்பட்டியல் முழுமையானதல்ல. (1993 பிற்பகுதி முதல் – 1994 ஆரம்பம் வரையில் கண்டி மாவட்டத்தின் பூயபிட்டியவில் நடந்த அகழ்வுப்பணி போன்ற) இன்னும் பல மனிதப் புதைகுழிகள் இருப்பது இவ்வமைப்புக்களுக்குத் தெரியும், ஆனால், பின்னிணைப்பில் அவற்றையும் சேர்த்துக் கொள்வதற்கு உறுதிப் படுத்தப்பட்ட போதுமான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியமல் உள்ளது. உண்மையில், மாத்தளை மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களிலுள்ள 1971 ஜே.வி.பி. கிளர்ச்சிக் காலத்தைச் சேர்ந்த புதைகுழிகள் தொடர்பாக சில நம்பகரமான இடங்களிடம் இருந்து தகவல்கள் கிடைத்துள்ளன, ஆயினும் போதுமான உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் இன்மையால் அவற்றையும் பின்னிணைப்பில் சேர்த்துக்கொள்ளவில்லை.

[6] 2005 ஆம் ஆண்டு பொதுச் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட, சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் பாரதூரமான மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கடுமையான மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான தீர்வு மற்றும் இழப்பீடுக்கான உரிமை பற்றிய ஐ.நா. அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் வழிகாட்டுதல்களின் கீழ், திருப்தி என்பதில் 'காணாமல் போனவர்களின் இருப்பிடங்களை, [...] கொல்லப்பட்டவர்களின் உடலங்களை தேடுல், மற்றும் மீட்டெடுத்து, அடையாளம் கண்டு, பாதிக்கப்பட்டவர்களது விரும்பம், அல்லது குடும்பங்களதும் சமூகங்களதும் கலாச்சார நடைமுறைக்கு அமைவாக உடல்களை மீள் அடக்கம் செய்தல்' என்பன உள்ளடக்கப்படல் வேண்டும். https://www.ohchr.org/en/instruments-mechanisms/instruments/basic-principles-and-guidelines-right-remedy-and-reparation இலுள்ள கோட்பாடு 22(c)ஐப் பார்க்கவும்

# சிறிலங்காவிலுள்ள மனிதப் புதைகுழிகள்



# 1.சர்வதேச, தேசிய மட்டத்திலான சட்டக் கட்டமைப்புக்கள்

## 1.1 சர்வதேச நியமங்கள்

பாரிய மனிதப் புதைகுழிகளைக் கையாழும்போது அது தொடர்பாக இருக்கின்ற மிகப்பெரிய சாவல்களில் ஒன்று, பாரிய மனிதப் புதைகுழிக்கென சர்வதேச வரைவிலக்கணம் என்று எதுவுமே இல்லை; அல்லது குறைந்தது எத்தனை பேர் புதைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பது உட்பட சட்டரீதியான எந்தவொரு கருத்தொற்றுமையும்கூட கிடையாது. சிலருக்கு ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் புதைக்கப்பட்டிருந்தால் அது பாரிய மனிதப் புதைகுழியாகக் கொள்ளலாம்; [7] மற்றயவர்களுக்கு ஒன்றைவிட அதிமான சடலங்கள் இருந்தாலே அது பாரிய மனிதப் புதைகுழிதான். [8] இருப்பினும், 'பல மனிதர்களின் எச்சங்களைக் கொண்ட,[9] பெரும்பாலும் ஒன்றுடன் ஒன்று கலக்கப்பட்ட நிலையில் புதைக்கப்பட்ட அகழி, குழி, ஒழுங்கமைக்கப்பட்ட அல்லது பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, அத்துடன் பல்வேறுபட்ட உடல் எண்ணிக்கைகளையும் கொண்ட அடக்கம் செய்யப்பட்ட இடங்களே' பாரிய மனிதப் புதைகுழிகள் என தடயவியல் வல்லுனர்கள் வரையறுத்துள்ளனர்.[10]

சட்டத்திற்குப் புறம்பான, முழுமையான விசாரணைகளற்று நடைபெறும் அல்லது ஏதேச்சதிகாரமான கொலைகள் தொடர்பான சிறப்புப் பிரதிநிதி, அக்னஸ் கல்லமார்ட் அவர்கள்[11] 2016ஆம் ஆண்டின் சித்திரவதை மற்றும் துன்புறுத்தல் குற்றச்சாட்டுக்களுக்கு மேலதிகமாக, சட்டத்திற்குப் புறம்பான, ஏதேச்சதிகார, முழுமையான விசாரணைகளற்ற கொலைகளை செயற்றினுடன் தடுத்தலும் விசாரணை செய்தலும் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் மீளாய்வு செய்யப்பட்ட கையேடு (மின்னெசோற்றா நெறிமுறை [12] என்றும் அறியப்படும் இதில் புதைகுழிகளின் அகழ்வுப் பணிகள் தொடர்பான வழிகாட்டல்களும் உள்ளடங்கியுள்ளன), மற்றும் காணாமல் போன ஆட்கள் தொடர்பான சர்வதேச ஆணைக்குழுவின் பாரிய மனிதப் புதைகுழிகளின் பாதுகாப்பும் விசாரணையும் மீதான 2020 போர்ண்மௌத் நெறிமுறை [13] ஆகிய ஆவணங்களில் கூறப்பட்டுள்ள விளங்கங்களைப் பயன்படுத்தி, பின்வரும் வரைவிலக்கணத்தைப் பரிந்துரைத்துள்ளார்: 'மரணம் மற்றும் /அல்லது சடலத்தை அப்புறப்படுத்திய முறை தொடர்பான சூழ்நிலைகளில் சந்தேகம் ஏற்பட்டு, அவை சட்டபூர்வமாக நடந்தவையா என்பதை நிர்ணயிப்பதற்கு விசாரணைக்கு உத்தரவிட வேண்டிய நிலைமை ஏற்படும் புதைகுழிப்பகுதியே பாரிய மனிதப் புதைகுழியாகும்'. [14] இந்த வரையறையானது

[7] Haglund, William D, Melissa Connor, and Douglas D Scott. 'தற்கால புதைகுழிகளின் தொல்லியல்' வரலாற்று ரீதியான தொல்லியல் 35. இலக்கம் 1 (2001): 57–69

[8] 2016ஆம் ஆண்டின் சித்திரவதை மற்றும் துன்புறுத்தல் குற்றச்சாட்டுக்களுக்கு மேலதிகமாக, சட்டத்திற்குப் புறம்பான, ஏதேச்சதிகார, முழுமையான விசாரணைகளற்ற கொலைகளை செயற்றினுடன் தடுத்தலும் விசாரணை செய்தலும் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் மீளாய்வு செய்யப்பட்ட கையேடு, பந்தி 110, 2017

[9] Pass, Allan D, and Ayn Embar-Seddon, Forensic Science, Book 1, 2nd ed, 'Mass Graves', Salem Press, 2015

[10] José-Paulino Fernández-Álvareza, David Rubio-Melendia, Antxoka Martínez-Velasco, Jamie K Pringle, Hector-David Aguilera, ஸ்பெய்ன் நாட்டில் உள்நாட்டுப்போர் நடைபெற்ற காலத்தைச் சேர்ந்த மனிதப் புதைகுழிகளை தரையில் ஆழஊடுருவும் கதிரியக்க ரேடார் மற்றும் தடயவியல் அகழ்வாராய்வு ஆகியவற்றைப் பயன்படுத்தி கண்டுபிடித்தல், சர்வதேச தடய அறியில் பதிப்பு 267, ஒக்ரோபர் 2016, பக்கம் e10-e17

[11] சட்டத்திற்குப் புறம்பான, முழுமையான விசாரணைகளற்று நடைபெறும் அல்லது ஏதேச்சதிகாரக் கொலைகள் தொடர்பான சிறப்புப் பிரதிநிதியின் அறிக்கை, ஒக்ரோபர் 2020, UN Doc A/75/384, https://digitallibrary.un.org/record/3888738?ln=en

[12] 2016ஆம் ஆண்டின் சட்டத்திற்குப் புறம்பான, ஏதேச்சதிகார, முழுமையான விசாரணைகளற்ற கொலைகளை செயற்றினுடன் தடுத்தலும் விசாரணை செய்தலும் தொடர்பான மின்னெசோற்றா நெறிமுறைகள் (2016), ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானியர் அலுவலகம், நியூயோர்க் /ஜெனிவா, 2017 https://www.ohchr.org/sites/default/files/Documents/Publications/MinnesotaProtocol.pdf

[13] Klinkner, M and Smith, E (forthcoming), 'மனிதப் புதைகுழிகளின் பாதுகாப்பிற்கும் விசாரணைகளுக்குமான வழிகாட்டிகள்' திட்ட இணையத்தளம் https://www.bournemouth.ac.uk/research/projects/mass-grave-protection-truth-justice

[14] Klinkner, M and Smith, E (forthcoming), 'மனிதப் புதைகுழிகளின்

பூகம்பம் அல்லது சுனாமி போன்ற இயற்கைப் பேரிடர் அல்லது தொற்றுநோய் தொடர்பில் அமைக்கப்பட்ட பாரிய மனிதப் புதைகுழிகளை உள்ளடக்கவும் அனுமதிக்கின்றது. இவ்விரு சந்தர்ப்பங்களும் அரச மற்றும் /அல்லது அரச சார்பற்ற அமைப்புக்களினது பொறுப்புக்களையும் செயற்பட வைக்கின்றன.[15] மரணம் நடந்தமைக்கான காரணங்கள் மற்றும் சூழமைவுகளுக்கு அப்பாற்பட்டு, இதர சவஅடக்கம் செய்யப்படும் இடங்களிற்கும் பாரிய மனிதப்புதைகுழிகளின் வேறுபாட்டினை, அதாவது பாரிய மனிதப் புதைகுழிகள் எனப்படுவது என்னவெனில் 'கடைசி உரிமைகள்' மற்றும் இறுதிச் சடங்குகளின் மீறல்களே என்பதை இவ்வரைவிலக்கணம் தெளிவாகக் காட்டுகின்றது என கல்லமார்ட் கூறுகின்றார். [16] இதனை வேறுபடுத்திக் காட்டும் அம்சம் என்னவெனில், சாவின்போதும் அதன் பின்னரும், குறிப்பாக சடலங்கள் மறைக்கப்பட்டனவா மற்றும் எவ்வாறு மறைக்கப்பட்டன உள்ளிட்ட அவர்கள் சடலத்தைக் கையாழும் விதமேயாகும்.

'பாதிக்கப்பட்டவர்' என்ற சொற்பதமானது, 'சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் அல்லது சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் பாரதுரமான மீறல்கள் மூலமாக, தனியாகவோ அல்லது கூட்டாகவோ உடல் ரீதியான அல்லது உளவியல் ரீதியான காயம், உளவியல் ரீதியான பாதிப்பு, பொருளாதார இழப்பு அல்லது அவர்களது அடிப்படை உரிமைகள் கணிசமாகக் குறைக்கப்பட்டமை உள்ளிட்ட துன்பத்திற்கு ஆளாக்கப்பட்ட ஆட்களையே' குறிக்கின்றது.[17] சர்வதேசச் சட்டங்களிற்கு இணங்க, பாதிக்கப்பட்டவர் என்பதன் வரையறையில், பெரும் மனிதப் புதைகுழிகளில் உள்ளவர்களை ('முதல்நிலை' அல்லது 'நேரடியாகப்' பாதிக்கப்பட்டவர்கள்) மட்டுமன்றி, அவர்களது குடும்பங்களையும், ஏன் தேவைப்பட்டால் அவர்களது சமூகங்களையும் கூட (இரண்டாம் நிலை அல்லது மறைமுகமாகப் பாதிக்கப்பட்டவர்கள்) உள்ளடக்குகின்றது. குறிப்பிட்ட ஒரு பெரும் புதைகுழி தொடர்பில் பாதிக்கப்பட்ட ஒருவருடைய பல்வேறுபட்ட சட்டப் பாதுகாப்பினை இவ்வேறுபாடு அடிப்படையாகக் கொண்டுள்ளது.

பெரும் மனிதப் புதைகுழிகளின் நேரடியாக அல்லது மறைமுகமாக பாதிக்கப்பட்டவர்களுக்கும் சர்வதேச குற்றங்களாக இருக்கக்கூடியவை உட்பட, மனித உரிமைகளின் பாரிய மீறல்களுடன் தொடர்புபட்ட பாதிக்கப்பட்டவர்களுக்கும் பாதுகாப்புக்களை பல சட்டக் கட்டமைப்புக்கள் இணைந்து வழங்குகின்றன. இதுவரை சர்வதேச சட்டம், சர்வதேச மனித உரிமைகள் சட்டம், சர்வதேச மனிதாபிமானச் சட்டம், சர்வதேச குற்றவியல் சட்டம் ஆகியவை பாரிய மனிதப் புதைகுழிகளைப் பாதுகாப்பதற்கு அவற்றின் விசாரணைக்கும் தனித்தனியாகவும் அல்லது ஓரளவு ஒன்றுடன் ஒன்று இணைந்தும் பாதுகாப்பு வழங்குகின்றன. மிக முக்கியமாக, சர்வதேச சட்டமானது பெரும் மனிதப் புதைகுழிகளை, மனித எச்சங்களை, அங்கே காணப்படும் ஏதேனும் ஆதாரங்களை சேதப்படுத்தக்கூடாது என்ற கடப்பாட்டினை சிறிலங்கா அரசின்மீது சுமத்துகின்றது. மேலும் முடிந்தால், சடலங்களை அகழ்ந்தெடுத்து, அவற்றை அடையாளம் கண்டு, உரிய குடும்பங்களிடம் ஒப்படைக்க வேண்டிய கடப்பாடும் உள்ளது. அத்துடன், சிறிலங்காவின் உள்நாட்டு சட்டக் கட்டமைப்பும் கோட்பாட்டளவில் சட்டப் பாதுகாப்பினை வழங்குகின்றது.

## பொருத்தமான சர்வதேச மனித உரிமைகள் சட்டம்

சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழ், பாரதூரமான மனித உரிமைகள் மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களும் உயிர் தப்பியவர்களும் தமது உண்மையைக் கண்டறியும் உரிமையினைக் கொண்டிருக்கின்றார்கள். உண்மையைக் கண்டறிவதற்கான உரிமை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுடனேயே கடந்த காலங்களில் ஆரம்பத்தில் தொடர்புபட்டிருந்த போதிலும்,[18] காலப் போக்கில், சித்திரவதை, நீதிக்குப் புறம்பான கொலைகள் உட்பட பாரதூரமான மனித உரிமை மீறல்களின் இதர பகுதிகளுக்கும் இந்த உண்மையைக் கண்டறிவதற்கான உரிமை விரிவுபட்டுள்ளது. அத்துடன், தங்களது அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிந்து கொள்வதற்கான சட்டவழியினை பாதிக்கப் பட்டவர்களுக்கும் உயிர்தப்பியவர்களுக்கம் வழங்குவதால், பாரிய மனிதப் புதைகுழிகளுடன் தொடர்புபட்ட பாதிக்கப் பட்டவர்களுக்குரிய

பாதுகாப்பிற்கும் விசாரணைகளுக்குமான வழிகாட்டிகள்' திட்ட இணையத்தளம் https://www.bournemouth.ac.uk/research/projects/mass-grave-protection-truth-justice

[15] https://www.npr.org/sections/coronavirus-live-updates/2020/04/10/831875297/burials-on-new-york-island-are-not-new-but-are-increasing-during-pandemic குடும்ப உறுப்பினர்களால் அல்லது அன்புக்குரியவர்களால் உரிமைகோரப்படாதவர்களது சடலங்கள் கார்ட் தீவிலுள்ள புதைகுழிகளில் புதைக்கப்பட்டன.

[16] https://drive.google.com/file/d/1n9ZZ5LjI9KkEf7Lfzqv_yB1R9bAy0G8B/view

[17] இந்த வரையறையே, போர்ண்மவுத் நெறிமுறையில் பயன்படுத்தப்பட்டதாகும். அத்துடன், அதிகார முறைகேட்டாலும் குற்றச்செயல்களாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதிக்கான அடிப்படைக் கோட்பாடுகள் மீதான ஐ.நா. பிரகடத்தின் பின்வருவனவற்றில் வரையறையினையும் உருவாக்குகின்றது. பின்னிணைப்பு A,1 மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் பாரதூரமான மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கடுமையான மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான தீர்வு மற்றும் இழப்பீடுக்கான உரிமை பற்றிய ஐ.நா. அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் வழிகாட்டுதல்கள், பின்னிணைப்பு V,8 மற்றும், வலிந்து காணாமல் ஆக்கப்படுதலிலிருந்து அனைவரையும் பாதுகாப்பதற்கான சர்வதேச சட்டத்தின் சரத்து 24(4).

[18] ஐக்கிய நாடுகள் சபையின் வலிந்து அல்லது விரும்பத்திற்கு மாறாக காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பணிக்குழுவின் முலாவது அறிக்கை. UN Doc E/CN.4/1435, ஜனவரி 26, 1981, பந்தி 81

மிக முக்கியமான உரிமைகளாகவும் இது இருக்கின்றது.[19] தண்டனையிலிருந்த விலக்களிப்பப்படுவதை எதிர்த்துப் போராடுவதற்கான கூட்டு/ஓறென்ற்லிச்செர் கோட்பாடுகள் (The Joinet/Orentlicher Principles to Combat Impunity)[20] ஐக்கிய நாடுகள் சபையின் 2006 ஆம் ஆண்டின் அடிப்படைக் கோட்பாடுகள் (UN's 2006 Basic Principles)[21] ஆகியவையே பாரதூரமான வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சட்டப் பரிகாரங்களுக்கு முக்கியமானவையாகும்.[22] எனவே, பாதிக்கப்பட்ட முறைகேட்டிற்கான காரணங்கள் மற்றும் சூழ்நிலைகள் பற்றிய தகவல்களைத் தேடுபவர்களின் உரிமைகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை – பெரும் மனிதப் புதைகுழிகள் தொடர்பான பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கான கடப்பாடு அரசிற்கு இருக்கின்றது, அத்துடன், முறைகேடுகளை விசாரணை செய்வதற்கும், ஆதாரங்களைச் சேகரிப்பதற்கும் தொடர்ச்சியானதும் திட்டமிட்டதுமான முயற்சிகளை மேற்கொள்ளவதற்குரிய நேர்மறையான மற்றும் உறுதியான நடவடிக்கைகள் இதற்குத் தேவைப்படுகின்றது. என்ன நிகழ்ந்தது, ஏன் நிகழ்ந்தது, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அதற்குப் பொறுப்பானர்கள் யார் என்பதைக் கண்டுபிடிப்பது, மற்றும் முறைகேட்டின் வடிவங்களைப் புரிந்துகொள்வதற்கும் இவ்வாதாரங்களைச் சேகரிப்பது தேவையாகின்றது.[23] ஒரு அரசிற்கு, இந்தக் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்குரிய அரசியல் விருப்பம் இல்லாவிட்டால் அல்லது நிறைவேற்ற முடியாமல் இருந்தால், அதற்கு உதவிசெய்ய வேண்டிய பொறுப்பு சர்வதேச சமூகத்திற்கு உண்டு.

வலிந்து காணாமல் ஆக்கப்படுதலிலிருந்து அனைவரையும் பாதுகாப்பதற்கான சர்வதேச சட்டத்தின் சரத்து 24(4) இலும் (Article 24(4) of the International Convention for the Protection of All Persons from Enforced Disappearances-CED) உண்மையைக் கண்டறிவதற்கான உரிமை தொடர்பாக உள்ளது. இது பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் 'காணாமல் போனவரின் நிலைமை, வலிந்து காணாமல் ஆக்கப் பட்டமையின் சூழ்நிலைகள், விசாரணையின் முன்னேற்றமும், முடிவுகள் ஆகியன தொடர்பான உண்மைகளைத் தெரிந்து கொள்வதற்கான உரிமையினையும் வழங்குகின்றது. அத்துடன், இதுதொடர்பாக ஒவ்வொரு அரச தரப்பும் பொருத்தமான நடவடிக்கை எடுக்கவும் வேண்டும்'.[24]

வலிந்து காணாமல் ஆக்கப்படுதலிலிருந்து அனைவரையும் பாதுகாப்பதற்கான சர்வதேச சட்டத்தினை 2016இல் சிறிலங்கா ஏற்றுக்கொண்டது.[25] இந்த வலிந்து காணாமல் ஆக்கப்படுதலில் இருந்து அனைவரையும் பாதுகாப்பதற்கான சர்வதேச சட்டத்தின் கீழ், காணாமல் போனவர்களது உறவினர்கள் உட்பட பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் உண்மையை அறிந்து கொள்வதற்கான உரிமையை உத்தரவாதப்படுத்த வேண்டிய கடப்பாட்டினை அரசாங்கம் கொண்டுள்ளதுடன்,[26] காணாமல் போனவர்களைத் தேடுவதற்கான கடமையும், மரணம் நிகழ்ந்திருந்தால், சடலங்கள் இருக்கும் இடத்தினைக் கண்டறிந்து, மரியாதை செய்து, அவற்றைத் திருப்பி ஒப்படைப்பதுடன்,[27] திருப்தியடையும் ஒரு வழியாக கொல்லப்பட்டவர்கள் அடையாளம் காணப்படுகின்றார்கள் என்பதை உறுதிப்படுத்தும் கடமையும் அதற்கு உள்ளது. மேலும், ஐக்கிய நாடுகள் சபையின் வலிந்து அல்லது விருப்பத்திற்கு மாறாக காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பணிக்குழு, (UN Working Group on Enforced or Involuntary Disappearances - WGEID) உண்மையை அறிந்துகொள்வதற்கான உரிமை தொடர்பான அதன் பொதுக் குறிப்புரையில், 'காணாமற்போன ஆட்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மையையும் அவர்களது இடத்தையும் தெரிந்து கொள்வதற்கு அவர்களது உறவினர்களுக்குரிய உரிமை உண்மையில் மிகச் சரியானதாகும், மாறாக அதனை மட்டுப்படுத்தவோ அல்லது அவமதிப்புக்கு ஆளாக்கவோ முடியாது' என மிகத்தெளிவாக எடுத்துரைத்துள்ளது.[28]

[19] வலிந்து காணாமல் ஆக்கப்படுதலிலிருந்து அனைவரையும் பாதுகாப்பதற்கான சர்வதேச சட்டத்தின் சரத்து 24(2)

[20] தண்டனையிலிருந்து விலக்களிக்கப்படுவதை எதிர்த்துப் போராடுவதற்கான சுயாதீன நிபுணரின் அறிக்கை, மனித உரிமைகள் மீதான ஐ.நா. ஆணைக்குழு, பெப்ரவரி 18, 2005, (UN Commission on Human Rights, 'Report of the independent expert to update the Set of Principles to combat impunity') E/CN.4/2005/102, பின்வரும் இணைய முகவரியில் இருக்கின்றது:
https://www.refworld.org/docid/42d66e7a0.html [மே 9, 2023 இல் பார்க்கப்பட்டது]

[21] ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை, சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கடுமையான மீறல்களும், சர்வதேச மனிதானிமானச் சட்டத்தின் பாரதூரமான மீறல்களாலும் பாதிக்கப் பட்டவர்களுக்கான பரிகாரமும் இழப்பீட்டுக்குமான உரிமை தொடர்பான அடிப்படை கோட்பாடுகளும் வழிகாட்டல்களும்' மார்ச் 21, 2006 இல் நடந்த பொதுச்சபை அமர்வில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. A/RES/60/147, https://www.refworld.org/docid/4721cb942.html [8 யூன் 2023 இல் பார்க்கப்பட்டது.]

[22] Principle 24

[23] J E Mendez and F J Bariffi, 'Truth, Right to, International Protection' (Jan 2011), in R. Wolfrum (ed.), Max Planck Encyclopaedia of Public International Law (online edn)

[24] ibid

[25] https://www.ohchr.org/sites/default/files/disappearance-convention.pdf

[26] CED, Preamble and Articles 18 and 24(2)

[27] ICPED, Article 24(3)

[28] See WGEID, General Comment on the Right to Truth in Relation to Enforced Disappearances, 2010, para 4, https://www.ohchr.org/sites/default/files/Documents/Issues/Disappearances/GC-right_to_the_truth.pdf

சட்டவிரோதமான கொலைகள் தொடர்பான விசாரணைகளில் அவர்களது குடும்பங்கள் பங்குபற்றுவதை ஏதுவாக்கி, அதன் மூலமாக கிடைத்திருக்கக்கூடிய, அல்லது தீர்மானிக்க முடியுமாயின், கொலைக்கான சூழல்கள், நிகழ்வுகள் மற்றும் கொலைக்கான காரணங்கள், சடலங்கள் உள்ள இடங்கள் அவற்றின் நிலைமை, பற்றிய கிடைக்கும் தகல்களைப் பெற்றுக்கொள்கின்றார்கள் என்பதை உறுதிப்படுத்த வேண்டிய கடமை அரசுகளுக்கு உண்டு.[29]

இந்தப் பின்னணியில், பெரும்புதைகுழிகள் இருப்பதை மறுப்பதோ அல்லது மூடிமறைப்பதோ இல்லை என்பதை உறுதிப்படுத்தவேண்டிய மறைமுகக் கடமை அரசுகளுக்கு உள்ளது என சர்வதேச சட்டவல்லுனர்கள் குறிப்பிட்டுள்ளனர். மேலும், இப்புதைகுழிகள் சேதமாக்கப்படவோ அல்லது அழிக்கப்படவோ, அவற்றைத் தேடுவோர் அல்லது அவை பற்றி வெளிப்படையாகக் கதைப்பவர்கள், அச்சுறுத்தப்படவோ, சிறைப்படுத்தப்படவோ அல்லது மௌனமாக்கப்படவோ கூடாது. இச்செயல்கள், வலிந்து காணாமல் ஆக்குதலுக்கு எதிரான சட்டம், நீதிக்குப் புறம்பான கொலைகள் தொடர்பான விசாரணை நடாத்தவேண்டிய கடப்பாடு, உண்மையை அறிந்து கொள்வதற்கான உரிமை, தனிமனித அடையாளத்தை அடக்குதல் அல்லது அழித்தல், உள்ளிட்ட பல்வேறு மனித உரிமை மீறல்களதும் இறந்தவர்களின் கூட்டு கலாச்சார, இன, மத, அரசியல் மற்றும் இதர அடையாளங்களின் மீதான மீறல்களாகவும் அமையும். [30]

அனைவரையும் உள்ளடக்கிய ஆலோசனைச் செயல்முறையின் அடிப்படையில், பாரிய மனிதப் புதைகுழிகளை எவ்வாறு கையாள்வது மற்றும் மேலாண்மை செய்வது என்பன தொடர்பான முடிவுகள் எடுக்கப்படும் வரை, அவை பேணிப் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்தும் கடப்பாடு அரசாங்கங்களுக்கு உண்டு. பாரிய மனிதப் புதைகுழிகள் கண்டிபிடிக்கப்பட்டதான தகவல்கள் முதன்முறையாக வரும்போது, அல்லது அவை பற்றித் தெரியவரும்போது, அவை சேதமாக்கப்படுவதற்கான ஆபத்துக்கள் உள்ளன. இவை, அரச மற்றும் அரசுசாரா தரப்பினரால் தங்களுக்கிருந்த தொடர்புகளை மறைப்பதற்காக வேண்டுமென்றோ அல்லது குடும்ப உறுப்பினர்களால் தங்களது அன்புக்குரியவர்களது எச்சங்களின் ஏதாவது ஆதாரங்களையாவது எடுத்துவிட வேண்டும் என்ற விருப்பத்தில் தவறுதலாகவோ நடக்கலாம். மேலே குறிப்பிட்டுள்ள உரிமைகளையும் கடப்பாடுகளையும் நிறைவேற்றுவதை இச்சேதங்கள் சாத்தியமற்றதாக மாற்றலாம். மனிதப் புதைகுழிகள் உள்ள இடங்களை மண்ணரிப்பு, அழிவு, சூறையாடப்படுதல் ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பதற்கு அரசாங்கங்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.[31]

எனவே, மனிதப் புதைகுழிகளை மரியாதையுடனும், சட்டரீதியாகவும் கையாள்வதில் சிறிலங்காவுக்குள்ள கடப்பாடுகளில், விசாரணை செய்வதற்கான, காணாமல் ஆக்கப்பட்ட அல்லது காணமல் போனவர்களை தேடி அடையாளம் காண்பதற்கான, மற்றும் மனித உடலின் எச்சங்களை அவர்களது குடும்ப உறுப்பினர்களிடம் ஒப்படைப்பதற்கான கடமையும் உள்ளடங்குகின்றது.

ஒரு விசாரணை என்பது, நெருங்கிய உறவினர்களால் விடுக்கப்படும் ஒரு வேண்டுகோள் அல்லது முறையான முறைப்பாட்டில் தங்கியிருக்காமல், தானாகவே தொடங்கப்படல் வேண்டும். [32] மேலும், சமய, கலாச்சார உரிமைகளை மதிப்பதற்கும், அவற்றில் பாகுபாடு காட்டப்படவில்லை என்பதையும் உறுதிப்படுத்தும் கடப்பாடு அரசிற்கு உண்டு. போர்ச்சட்டங்களின் படி சூழ்நிலைகள் அனுமதிக்கும் போதும்,[33] மற்றும் படி எல்லா நேரங்களிலும், இறந்தவர்கள் அவர்கள் சார்ந்த மதச் சடங்குகளின் படி அடக்கம் செய்யப்பட வேண்டும் என்பதும் இதில் உள்ளடங்கும். [34] இது 'மனிதகுலத்தின் இருண்ட பக்கத்திற்கும் பொருந்தும், இதன் நினைவு எதிர்காலச் சந்ததியினருக்கும் கடத்தப்படவும் வேண்டும்.'[35]

இன்றுவரை, மனிதப் புதைகுழிகள் பற்றிய மனித உரிமைகள் மனித எச்சங்களை அகழ்ந்தெடுப்பதிலும் அவற்றை அடையாளம் காண்பதிலுமே பெரும்பாலும் கவனம் செலுத்தியுள்ளன. இத்தகைய அணுகுமுறையினைப் புரிந்து கொள்ளக்கூடியதாக இருப்பிலும், இது மிகவும் குறுகியதாக இருக்கின்றது என்பதே வாதமாகும். சம்பிரதாயமான பழிவாங்கும் நீதியைவிட, அகழ்வுப்பணிகள் நடக்காத நேரத்திலும் கூட இடம்பெறக்கூடிய மீண்டும் நிலை நாட்டப்படும் நீதியானது இன்னும் அதிகமாகவே கோருகின்றது, அத்துடன், நினைவுகூருதல் உட்பட, மேலதிகமான விடயங்கள், நடவடிக்கைள் இதற்கு தேவையாக உள்ளது.

---

[29] Callamard report, op cit, பந்தி 58

[30] Callamard report, op cit, பந்தி 14

[31] Callamard report, op cit, பந்தி 62. ஈராக்கிய மனிதப் புதைகுழி விவகாரப் பணியகம் கொள்கையளவில் ஒரு சுவாரசியமான கட்டமைப்பாகும், இது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் இணைந்து, புதைகுழிகளின் பாதுகாப்பினைப் பொறுப்பெடுப்பதுடன், புதிய புதைகுழிகளைத் தேடி, விசாரணைகளும் ஆய்வு செய்வதற்காகவுமென அமைக்கப்பட்டதே இதுவாகும். https://www.icmp.int/wp-content/uploads/2006/01/The-first-amendments-mass-graves-protection-legislation-number.pdf. ஆனால் நடைமுறையிலோ, வளங்கள் பற்றாக்குறை காரணமாக இம்முயற்சி முடங்கிப்போயுள்ளது. இவர்களது பணியை முடிக்க ௮00 வருடங்கள் எடுக்கும் என Medico-Legal Institute அமைப்பைச் சேர்ந்த நிபுணர்கள் கணிப்பிட்டுள்ளார்கள். A/HRC/38/44/Add.1.

[32] A/HRC/41/CRP.1, பந்தி 260

[33] முதலாவது ஜெனீவா ஒப்பந்தம், சரத்து 17 (3); மூன்றாவது ஜனீவா ஒப்பந்தம், சரத்து 120 (4); நான்காவது ஜனீவா ஒப்பந்தம், சரத்து 130 (1)

[34] CED/C/7, principle 1, பந்தி 4

[35] A/HRC/17/38, பந்தி 8

சிறப்புத் தூதுவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:[36]

* பாரிய மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்டங்களின் மீறல்கள் ஆகியவற்றுக்குரிய ஆதாரங்களாகவும், சுனாமி அல்லது பெருந்தொற்றுநோய் போன்ற இயற்றைப் பேரிடர்களின் பாதிப்புக்களை தடுப்பதற்கு அல்லது குறைப்பதற்கு உரிய கவனத்துடன் செயற்படத் தவறியமை உட்பட உயிர்களைப் பாதுகாப்பதற்கு அரச தவறியதைத் தெரிவிப்பதாகவுமே இந்த மனிதப் புதைகுழிகள் விளங்குகின்றன;
* இறுதிச்சடங்கு மற்றும் அடக்கம் செய்வது உட்பட, 'இறுதி உரிமைகளின்' மீறல்களுக்கும், அங்கு புதைக்கப் பட்டவர்களின் தனித்தனி அடையாளங்களை மூடிமறைப்பதன் மூலம், மரணத்தில் அவர்களை அடையாளம் காண்பதற்குரிய பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருடைய உரிமையினையும், தங்களது அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதைத் தெரியாமல் தவிக்கும் குடும்பங்களது உரிமைகளையும் மீறியமைக்கும் வலுச்சேர்ப்பதாக இம் மனிதப் புதைகுழிகள் அமையக்கூடும்;
* மனிதப் புதைகுழிகள் பெரும்பாலும் மறைக்கப்பட்டு, பின்னர் அழிக்கப்பட்டு, இழிவுபடுத்தல்களுக்கு உள்ளாக்கப்படலாம். அத்துடன், அவைபற்றி வெறுமனே குறிப்பிடுவதே முக்கியமான குற்றமாகவோ அல்லது துன்புறுத்தல்களுக்குரிய மூல காரணமாகவோ ஆக்கப்படலாம். அது மட்டுமன்றி இச்செயல்கள் வலிந்து காணாமல் ஆக்கப்படுதலைப் பாதுகாத்தல், நீதிக்குப் புறம்பான கொலைகளை விசாரணை செய்வதற்கான கடப்பாடு மற்றும், உண்மையைத் தெரிந்து கொள்வதற்கான உரிமை ஆகியவற்றையும் மீறுவதாக அமைகின்றன;
* சட்டவிரோத மரணம் நடந்த சூழ்நிலைகள், மரணத்திற்கான காரணங்கள் மற்றும் சடலங்கள் அகற்றப்பட்ட விதம் ஆகியன தொடர்பில் விசாரணை நடாத்தப்பட வேண்டும் என்பதை இம் மனிதப் புதைகுழிகள் அத்தியாவசியமாக்குகின்றன.

மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்படும் போது, இதற்கு தனித்தனியாக அடையாளம் காண்பது அகழ்வுப்பணியை கோருவது, குற்றம் நடந்த இடம் மீதான விசாரணை, மற்றும் ஆதாரங்களை சேகரித்தல் ஆகியன இதில் சம்பந்தப்படுவதால், அரசுக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கும், அவர்களது குடும்பங்களுக்கும், சமூகத்திற்கும் அவர்களுக்கான தனித்தனியாக நோக்கங்களும் இருக்கும் என்றும் விசேட தூதுவர் தன்னுடைய அறிக்கையில் குறிப்பிடுகின்றார். அதுமட்டுமன்றி, நினைவேந்தல் மற்றும் (மறு)அடக்கம் செய்வது இதில் உள்ளடங்கும்.[37]

மனிதப் புதைகுழிகளின் கண்டுபிடிப்பின் மூலமாக அவற்றினைத் தோண்டியெடுக்கவேண்டும் என்ற விடயத்தினையும் ஏற்படுகின்றது. வினைத்திறன் மிக்கதும் கௌரவமானதுமான அகழ்வுப்பணிகள் மேற்கொள்வதற்கான புறச்சூழல்கள் சரியாக அமையும்போது, அவை முறையாக நடாத்தப்படுமாக இருந்தால், அரசின் மனித உரிமைக் கடப்பாடுகளை புரிந்து கொள்வதில் சக்திவாய்ந்த பங்களிப்பினைச் செய்யும். இருப்பினும், மனிதப் புதைகுழிகளுக்கு இடையூறு விளைவிப்பதைத் தவிர்த்து, குறிப்பாக குற்றம் இழைத்தவர்களும் சாட்சிகளும் உயிருடன் இருக்கும்போதும், குற்றச்சாட்டப்பட்டவர்கள் ஏற்கனவே தடுத்து வைக்கப் பட்டிருக்கும் போதும், நீதியை பெற்றுக்கொள்வற்கு இதர பல வழிகள் உள்ளன. ஆகவே, ஒவ்வொரு தகவல்களையும் பாதுகாப்பதற்கும் கௌரவமான முறையில் மறு அடக்கம் செய்வதற்கும் உரிய திறன் இல்லாவிட்டால், அகழ்வுப்பணிகள் நடைபெறவே கூடாது. உதாரணமாக, மனித எச்சங்களைப் பாதுகாப்பதற்கும், அதன் பாதுகாப்பு மற்றும் இடமாற்றங்களைக் கண்காணிக்கப்படுவதற்குமான படிமுறைகள் நடைமுறையில் இருந்து, முறையான தடயவியல் பரிசோதனைகளை நடாத்துவதற்கும் உரிய திறன்கள் இருந்தால் மட்டுமே ஒரு அரசு அகழ்வுப் பணிகளை நடத்தவேண்டும்.

பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் உரிமைகள், புதைகுழிகளின் இடங்களை முகாமைத்துவம் செய்தல் தொடர்பான ஒரு அரசின் கடமைகளில், விசாரணைகள் மற்றும் வலிந்து காரணாமல் ஆக்கப்படுதல்களுடன் தொடர்பான நடவடிக்கைகளுக்கு அப்பால், பின்வரும் உரிமைகளை புரிந்துகொள்வதும் உள்ளடங்குகின்றன: [38]

### வாழ்வதற்கான உரிமை

- வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான உரிமைகள்: சட்டத்தின் முன் ஒரு தனிநபராக அங்கீகரிக்கப்படுவதற்கான உரிமை, சித்திரவதை மற்றும் இதர கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடவடிக்கை மற்றும் சித்திரவதைகளுக்கு ஆளாக்கப் படாமல் இருப்பதற்கான உரிமை,
- மரணமடையும்போது அவரது சடலத்தைக் கௌரவமான முறையில் நடாத்தப்படுவதுடன் தொடர்புபட்ட 'இறுதி

[36] https://www.bournemouth.ac.uk/research/projects/mass-grave-protection-truth-justice

[37] சட்டத்திற்குப் புறம்பான, முழுமையான விசாரணைகளற்று நடைபெறும் அல்லது ஏதேச்சதிகாரக் கொலைகள் தொடர்பான சிறப்புப் பிரதிநிதியின் அறிக்கை, ஒக்ரோபர் 2020, UN Doc A/75/384, https://digitallibrary.un.org/record/3888738?ln=en

[38] மூன்று பிரதான சட்ட மூலங்கள் பரிசீலிக்கப்பட்டுள்ளன: சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்டம், ஆகியவற்றுடன் சேர்த்து, உருவாக்கப்பட்டுவரும் சர்வதேச இடர்நிவாரணச் சட்டம்.

உரிமைகள்'. பெரும்பாலும் இது இறந்தவருடைய குடும்பத்துடன், சமூகநடப்புடன், கலாச்சார மற்றும் சமய உரிமைகளுடன் தொடர்புபட்டுள்ளது.[39]

**ஆகவே, பாதிக்கப்பட்டவர்களுக்கும், அவர்களது குடும்பங்களுக்கும், இன்னும் சொல்லப்போனால் அவர்களது சமூகத்திற்கும் பின்வரும் உரிமைகள் உள்ளன:**

- விசாரணை நடாத்தப்படுவதற்கான உரிமை
- இழப்பீடு மற்றும் பரிகாரத்திற்கான உரிமை[40]
- மானிதாபிமானத்துடன் நடாத்தப்படுவதற்கான உரிமை
- சமய சுதந்திரத்தையும் நம்பிக்கையையும் பின்பற்றுவதற்கான உரிமை
- கலாச்சார வாழ்வில் கலந்துகொள்வதற்கான உரிமை[41]

இந்த உரிமைகள் அனைத்தையும் ஒன்றாக நோக்கும்போது அது **உண்மையைக் கண்டறிவதற்கான உரிமையாக** மாறுகின்றது, இது குடும்பங்களுக்கும் சமூகத்திற்கும் வழங்கப்பட வேண்டியதாகும், அத்துடன் இது கடந்தகால நிகழ்வுகளைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கான அவர்களிடமிருந்த 'பிரித்தெடுக்கமுடியாத உரிமையினையும்' உள்ளடக்குகின்றது. இது நினைவுகொள்வதற்கான ஒரு கடமையும், தெரிந்து கொள்வதற்கான பாதிக்கப்பட்ட ஒருவரின் உரிமையும் ஆகும்.[42] இழப்பீட்டு உரிமைக்கான முக்கிய கூறுகளில் ஒன்று தகவல்களை உறுதிப்படுத்துவதும், உண்மைகளை முழுமையாகவும் பொதுமக்களுக்கும் வெளிப்படுத்துவதையும் உள்ளடக்குகின்றது.[43]

வலிந்து காணாமல் ஆக்கப்படுதலிருந்து அனைவரையும் பாதுகாப்பதற்கான சர்வதேச சட்டமானது, வலிந்து காணாமல் ஆக்கப்படுதலில் ஈடுபடும், அதற்கான கட்டளைகளை வழங்கும், கோரும், அல்லது நடவடிக்கைக்குத் துணைபோகும், அல்லது செய்ய முயற்சிக்கும் அல்லது உதவும் அல்லது பங்கெடுக்கும் எந்தவொரு நபரையும் அல்லது 'தனக்குக் கீழ் அல்லது கட்டுப்பாட்டில் அல்லது அதிகாரத்தின் கீழ் இருக்கும் வீரர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்படும் குற்றத்தினைப் செய்து கொண்டிருக்கின்றார்கள் அல்லது செய்யவிருக்கின்றார்கள் என்பதைத் தெரிந்திருந்த அல்லது அத்தகவல்களை வேண்டுமென்றே உதாசீனம் செய்த எந்வொரு அதிகாரியையும்' குற்றத்திற்குப் பொறுப்பானவராகக் கொள்ளவேண்டுமென அரசுகளைக் கேட்டுக்கொள்கின்றது. [44]

## பொருத்தமான சர்வதேச குற்றவியல் சட்டம்

மனிதப் புதைகுழிகள் மற்றும் அவற்றின் ஆதாரங்கள், மற்றும் புதைகுழிகளிலுள்ள மனித எச்சங்கள் மீது தலையிடுவது, சர்வதேச குற்றவியல் சட்டத்தின்கீழ் தடைசெய்யப்பட்ட நடவடிக்கைகளுக்கு இட்டுச்செல்வதாய் அமையும். சிறிலங்காவில் இடம்பெற்றது போன்ற உள்நாட்டு ஆயுதப் போரின்போது, போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிராக குற்றங்கள் ஆகியனவும் பொருந்தும். மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் சமாதான காலத்திலும் நிகழலாம். கீழே வழங்கப்பட்டுள்ள மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களும் இவ்விடயத்தில் தொடர்புடையவையாகும்:

- கொலை
- சித்திரவதை
- பாலியல் வல்லுறவும் இதர பாலியல் வன்முறை வடிவங்களும்
- அடையாளம் காணக்கூடிய குழு அல்லது சமூகத்திற்கு எதிரான துன்புறுத்தல்
- பெருந்துன்பத்தை அல்லது இதர உடல் காயங்களை அல்லது உடல், உள நலன்களுக்கு வேண்டுமென்றே பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய ஒரே மாதிரியான இதர மனிதாபிமானமற்ற செயல்கள்

பின்வரும் போர்க்குற்றங்கள் சர்வதேச மட்டத்தில் இல்லாத ஆயுதமோதலில் தொடர்புடையவையாக இருக்கலாம்:

- கொலை
- அவையச்சிதைவு
- கொடூரமாக நடாத்துதல்
- சித்திரவதை
- தனிப்பட்டவர்களது கௌரவத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய கோபச்செயல்கள்.

[39] http://www.lastrights.net/LR_resources/html/LR_mytilini.html

[40] A Sweeney, 'The Elusive Right to Truth in Transitional Human Rights Jurisprudence,' International and Comparative Law Quarterly, vol 67 (Apr 2018) at 368-69

[41] https://unesdoc.unesco.org/ark:/48223/pf0000127160

[42] UN Doc E/CN.4/2005/102, Principles 2-4

[43] ஐ.நா.வின் அடிப்படைக் கோட்பாடுகளும், வழிகாட்டல்களும், பந்தி 22(b)

[44] CED, Article 6

## பொருத்தமான வழக்கத்திலுள்ள சர்வதேச மனிதாபிமானச் சட்டம்

வழக்கத்திலுள்ள சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பில், 2016 இல் 'வழக்கத்திலுள்ள சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களின் ஆய்வு' என்றும் தலைப்பில் நடாத்தப்பட்ட ஆய்வானது,[45] சர்வதேச மற்றும் உள்நாட்டு ஆயுதப் போர்களின் போது பிரயோகிக்கப்படும், இறந்தவர்கள், புதைகுழிகள் மற்றும் காணாமல் போனவர்களைப் பாதுகாப்பதற்காக வடிவமைக்கப்பட்ட விரிவான சட்டங்களைக் கோடிட்டுக்காட்டுகின்றது.[46]

மேலும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், அதன் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் பாதுகாவலர் என்ற தகைமையின் அடிப்படையில், இறந்துபோனவர்களைத் தேடி, அவர்களது எச்சங்களைக் கண்பிடிக்க வேண்டிய ஜெனீவா சட்டங்களின் கையொப்பதாரிகளுக்கு இருக்கும் கடப்பாடு தொடர்பான விரிவான நியமங்களைத் தயாரித்துள்ளது.[47]

இக்கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்குரிய அரசியல் விருப்பம் இல்லாமல் அல்லது அவற்றை நிறைவேற்ற முடியாத நிலையில் ஒரு அரசு இருக்குமாயின், அதற்கு உதவவேண்டிய பொறுப்பு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அல்லது காணாமல் போன ஆட்கள் தொடர்பான சர்வதேச ஆணைக்குழு உள்ளிட்ட சர்வதேச சமூகத்திற்கு உள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கான தன்னுடைய 2015 செப்ரெம்பர் அறிக்கையில், மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் அப்போதைய ஆணையாளர் சைட் ரார்ட் அல் ஹுசைன் மனிதப் புதைகுழிகளின் முறையான பாதுகாப்பினையும் விசாரணையினையும் உறுதிப் படுத்துவதற்கும், குடும்பங்கள் தங்களது காணாமல் போனவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கு உதவுவதற்கும், 'தடயவியல் துறையில், குறிப்பாக, தடயவியல் அகழ்வு மற்றும் ஆராய்ச்சி ஆகிய துறைகளில், சர்வதேச தொழிநுட்ப உதவி' சிறிலங்காவுக்குத் தேவை என வலியுறுத்தினார். [48]

பிரதான சர்வதேச நியமங்களின் மிகச்சுருக்கமே இதுவாகும். இவ்வறிக்கையின் இரண்டாவது அத்தியாயமானது, இன்றுவரை சிறிலங்காவில் இடம்பெற்ற அகழ்வுப்பணிகளில் நடந்த தவறுகளை சர்வதேச நியமங்களுடனும் சரியான தரமான நடைமுறைகளுடனும் ஒப்பிட்டு ஆராய்கின்றது. குறிப்பாக இதில் புதைகுழிகளின் அகழ்வுப் பணிகள் தொடர்பான வழிகாட்டல்களையும் உள்ளடங்கியுள்ள மின்னெசோற்றா நெறிமுறைகள் மற்றும், பாரிய மனிதப் புதைகுழிகளின் பாதுகாப்பும் விசாரணையும் மீதான போர்ண்மௌத் நெறிமுறை ஆகியவற்றிவற்றையும் உள்ளடக்கியே ஆராய்கின்றது. [49]

[45] J M Henckaerts and L Doswald-Beck, 'Customary International Humanitarian Law, vol I: Rules' (Geneva, Cambridge University Press, 2006) [CIHL study]

[46] C. Pilloud and others, 'Commentary on the Additional Protocols of 8 June 1977 to the Geneva Conventions of 12 August 1949' (Geneva, Martinus Nijhoff, 1987)

[47] See https://ihl-databases.icrc.org/ar/customary-ihl/v2/rule112

[48] ஐ.நா. மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் சிறிலங்கா மீதான விரிவான அறிக்கை, செப்ரெம்பர் 28, 2015, பந்தி 73 https://undocs.org/Home/Mobile?FinalSymbol=A%2FHRC%2F30%2F61&Language=E&DeviceType=Desktop&LangRequested=False

[49] See https://www.ohchr.org/en/hr-bodies/hrc/regular-sessions/session30/res-dec-stat

# 1.2 சிறிலங்காவின் தேசியச் சட்டங்கள்

2015 முதல் 2019 வரை பதவியில் இருந்த ஜனாதிபதி மைதிரிபால சிறிசேனவினதும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினதும் பெயரளவிலான 'நல்லாட்சி அரசாங்கம்' அதிகாரத்தில் இருந்தபோதுதான், சம்பந்தப்பட்ட தேசிய சட்டக் கட்டமைப்புக்களில் பெரும்பாலானவை நடைமுறைக்கு வந்தன. அந்த நேரத்தில், முன்னரே தெரிவித்தது போன்று, வலிந்து காணாமல் ஆக்கப்படுதலிருந்து அனைவரையும் பாதுகாப்பதற்கான சர்வதேச சட்டத்திற்கும் அவ்வரசாங்கம் ஒப்புதல் வழங்கியது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் 2015 மார்ச் 30/1 தீர்மானத்தின் இணை அனுசரணையாளராக சிறிலங்கா செயற்பட்டது.[50] இதுவே சிறிலங்காவில் பொறுப்புக் கூறலையும் இன நல்லிணக்கத்தையும் முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான நீதித்துறை சார்ந்த, நீதித்துறை சாராத நடவடிக்கைகள், மற்றும் மனித உரிமைகள், ஜனநாயகம், சட்ட ஒழுங்கு ஆகியவற்றைப் பலப்படுத்துவதுமான விடயங்கள் தொடர்பில் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் சிறிலங்கா மீதான விசாரணையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட பரிந்துரைகளை எழுதுவதற்கு அடித்தளமாக அமைந்தது.[51] இவ்வாறாக, 2015 நவம்பரில், வலிந்து அல்லது விருப்பத்திற்கு மாறாக காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான ஐ.நா.வின் பணிக்குழு, புதிய மனிதப் புதைகுழிகளை அடையாளம் காண்பதற்கு 'துறைசார் நிபுணத்துவம் கொண்ட சிறப்பு அணியினை' உருவாக்குமாறும், விசாரணைகளை மேற்பார்வை செய்யும் நீதிபதிகளுக்கு மேலதிக வளங்களை ஒதுக்கி, மரபணு பரிசோதனை, தடயவியல் அகழ்வு மற்றும் ஆய்வுகளுக்கான வல்லுனர்களைப் பெற்றுக் கொள்ளும்படியும், பரிந்துரைசெய்தது'.[52]

வலிந்து காணாமல் ஆக்கப்படுவதிலிருந்து அனைவரையும் பாதுகாக்கும் சட்டத்தின் சர்வதேச உடன்படிக்கையில் (International Convention for the Protection of All Persons from Enforced Disappearance Act, No 5 of 2018 EDA -(ICPED)) சிறிலங்கா அரசாங்கம் கடந்த 2018 மார்ச் மாதம் கையொப்பமிட்டது. 2018 இன் 5ஆவது இலக்கச் சட்டமான இதில், உள்ளூர்ச் சட்டத்தின் சரத்துக்களும், குறிப்பாக வலிந்து காணாமல் ஆக்கப்படுதலைத் தடைசெய்வது தொடர்பான சரத்துக்களும் உள்வாங்கப்பட்டுள்ளது.[53] இச்சட்டத்தில் அரச அதிகாரிகள் அல்லது அவர்களது மேலதிகாரிகள் யாராவது காணாமலாக்கும் நடவடிக்கைளில் ஈடுபட்டார்கள் என்று நிரூபிக்கப்பட்டால், அவர்களுக்கு 20 ஆண்டுகள் வரையான சிறைத் தண்டனையும், ஒரு மில்லியன் சிறிலங்கா ரூபாய் (3,445 அமெரிக்க டொலர்கள்) அபராதமும் வழங்கப் படுகின்றது. அத்துடன், பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு மில்லியன் ரூபாய்கள் வரை இழப்பீடாக வழங்கும் பொறுப்பினை அவர்கள் ஏற்க வேண்டும் என்றும் நிர்ப்பந்திக்கின்றது.[54] சர்வதேச மற்றும் தேசிய அமைப்புக்களால் சுட்டிக்காட்டப்பட்டது போன்று, வலிந்து காணாமல் ஆக்கப்படுவதிலிருந்து அனைவரையும் பாதுகாக்கும் சர்வதேசச் சட்டத்தின் கீழ், வலிந்து காணாமல் ஆக்கப்படுதலை ஒரு குற்றவியல் குற்றமாக மாற்றுவது, அச்செயலினை மனித குலத்திற்கு எதிரான குற்றமாக வெளிப்படையாக அங்கீகரிக்கத் தவறுவது உட்பட பல்வேறு வழிகளில், போதுமானதாக இல்லை.[55]

பொது மன்னிப்புக்கள், தண்டனை விலக்களிப்புக்கள் அல்லது குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்து வைக்கப்பட வேண்டும் என்ற வரையறைகள் பிரயோகிக்கப்பட முடியாத நிலைமை காணப்படும் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் குற்றச் செயல்களாகவே வலிந்து காணாமல் ஆக்கப்படுதல்கள்

[50] See https://www.ohchr.org/en/hr-bodies/hrc/regular-sessions/session30/res-dec-stat

[51] Report of the OHCHR Investigation on Sri Lanka (OISL), 16 Sep 2015, A/HRC/30/CRP.2, https://digitallibrary.un.org/record/803408?ln=es

[52] நவம்பர் 9–18, 2015 சிறிலங்காவுக்கான தமது விஜயத்தை முடிந்துகொண்டபோது வலிந்து அல்லது விரும்பத்திற்கு மாறாக காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பணிக்குழு வெளியிட்ட ஆரம்ப அறிக்கை, https://www.ohchr.org/en/statements/2015/11/preliminary-observations-working-group-enforced-or-involuntary-disappearances

[53] See https://www.srilankalaw.lk/gazette/2018_pdf/05-2018_E.pdf

[54] EDA, Article 3

[55] உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீள்–நடைபெறாமல் இருப்பதற்கான உத்தரவாதங்களை ஆகியவற்றை மேம்படுத்துவது தொடர்பான ஐ.நா. சிறப்புத் தூதுவர் 2020, யூன் 18 இல் சிறிலங்காவுக்கு மேற்கொண்ட விஜயம் தெடர்பான அறிக்கையின், பக்கம் 43, https://srilankabrief.org/wp-content/uploads/2020/09/A_HRC_45_45_Add.1-EN.pdf மற்றும் காணாமல் போன ஆட்கள் தொடர்பான அலுவலகத்தில் இடைக்கால அறிக்கை, ஓகஸ்ற் 2018, பக்கம் 15–16, http://www.omp.gov.lk/storage/app/uploads/public/5fa/a52/8e4/5faa528e479e0618163564.pdf

கருதப்படுகின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். [56] வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சட்டத்தின்கீழ், காணாமல் ஆக்கப்படுதல்கள் தொடர்ந்து நடைபெறும் குற்றச்செயல்களாக அங்கீகரிக்கப்படுகின்றன. அதனால், ஆட்கள் தொடச்சியாக காணாமல் போயுள்ளமைக்காக (உதாரணத்திற்கு 1980 களில் அல்லது 1990 களில் காணாமல் போனவர்கள்) அச்சட்டம் நடைமுறைக்கு வந்த (2018 மார்ச்) கணத்திலிருந்து இன்றுவரை ஆட்களை பொறுப்புக்கூற வைக்க முடியும். [57]

2019 இல் கோத்தபாய ராஜபக்சா ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர், நடந்து கொண்டிருந்த பல அகழ்வுப் பணிகள் இடை நிறுத்தப்பட்டன. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் 30/1 தீர்மானத்தின் கீழ் ஐ.நா.வுடன் சிறிலங்கா வைத்திருந்த மட்டுப்படுத்தப்பட்ட ஒத்துழைப்பும் நிறுத்தப் பட்டது.[58] சிறிலங்கா அரசாங்கமானது, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் 30/1 தீர்மானத்தின்கீழ் தண்டனையிலிருந்து விலக்களிக்கப்படும் நடவடிக்கையினை தீர்த்து வைப்பதற்கான தனக்கிருக்கும் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தவறியது, மாறாக, மறுப்புக் கதையினைத் தொடர்ந்தும் பேணுவதுடன், ஐ.நா. அமைப்புக்களின் ஆய்வு முடிவுகளை இழிவுபடுத்தும் நடவடிக்கையையும் செய்துவருகின்றது.

சிறிலங்கா, வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட ஆட்கள் தொடர்பான அதன் ஆணைக்குழுவிடம் (Committee on Enforced Disappearances) தனது ஆரம்ப அறிக்கையினை இன்றுவரை சமர்ப்பிக்கவில்லை. இவ்வாணைக்குழு, அரச தரப்பில் அதன் நடைமுறைப்படுத்தலைக் கண்காணிப்பதற்காக அமைக்கப் பட்டதாகும். 2018 இன் நடுப்பகுதியில் இவ்வறிக்கை வரவேண்டியது. வலிந்த காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான ஆணைக்குழுவின் காணாமல் போன ஆட்கள் தொடர்பான தகவல் பரிமாற்றங்களைப் பெற்றுக்கொண்டு, அவற்றைப் பரிசீலிப்பதற்கான தகுதியினை அங்கிகரிப்பதற்கு இன்றுவரை சிறிலங்கா முன்வரவில்லை.

சர்வதேச அழுத்தங்கள் காரணமாக, நல்லாட்சி அரசாங்கம் ஐ.நா.வின் விசேட நடைமுறைகளுடன் இணைந்து செயற்பட்டிருந்தது, 2015 டிசம்பரில், நாட்டுக்கு வரும்படி அவர்களுக்கு நிலையான அழைப்பினை விடுத்தது. உண்மை, நீதி, பரிகாரங்கள், மீள்நடைபெறாது என்பதற்கான உத்தரவாதம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான ஐ.நா.வின் சிறப்புத் தூதுவர் ஐந்து தடவைகள் சிறிலங்காவுக்கு விஜயம் செய்து, ஒரு விரிவான நிலைமாற்று நீதி தொடர்பான ஒரு கொள்கை பற்றிய பரிந்துரைகளை வெளியிட்டார். ஆனால், இவற்றில் பல இன்னமும் நிறைவேற்றப்படாமலேயே உள்ளன.[59] அந்நேரத்தில் அதிகாரத்தில் இருந்த அரசாங்கம், 'செயற்றிறன் மிக்க விசாரணை, வழக்குத் தொடுத்தல் மற்றும் மனித உரிமைகள், மனிதாபிமானச் சட்டத்தின் பாரதுரமான மீறல்களைத் தடைசெய்தல் ஆகியவற்றினைச் செய்வதற்கு விருப்பமற்று அல்லது செய்யமுடியாமல் இருந்ததை வெளிப்படுத்தியதாக' 2021 ஓகஸ்ற்றில் நடந்த மனித உரிமைகள் மாநாட்டிற்கான தன்னுடைய அறிக்கையில், விசேட தூதுவர் சுட்டிக்காட்டினார். அத்துடன், இந்நிலையில் சிறிலங்காவில் நடந்த பாரதூரமான மனித உரிமை மீறல்களதும், சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் பாரிய மீறல்களதும் எதிர்கால பொறுப்புக்கூறல் நடவடிக்கைகளுக்காக, ஆதாரங்களைப் பெற்று அவற்றைச் சேகரித்து வைப்பதற்காகவும், நீதியும் பொறுப்புக்கூறலும் எவ்வாறு வழங்கப்படலாம் என்பது பற்றி சர்வதேச சமூகத்திற்கு பரிந்துரைகளை முன்வைப்பதற்காகவும் அமைக்கப்பட்ட மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் சிறிலங்காவின் பொறுப்புக்கூறல் திட்டத்தினையும் (OHCHR Sri Lanka Accountability Project - OSLAP) அவர் வரவேற்றார்.[60,61]

ஐக்கிய நாடுகள் சபையின் வலிந்து அல்லது விரும்பத்திற்கு மாறாக காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பணிக்குழு 1991, 1992, 1999 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளில் சிறிலங்காவிற்கு பல தடவைகள் விஜயம் செய்தது. 2015 இல் அதனது பயணத்தின் பின்னர், மனிதப் புதைகுழிகளின் அகழ்வுப் பணிகள் தொடர்புடையவை உள்ளிட்ட, அது வழங்கிய பரிந்துரைகளின் நடைமுறைப்படுத்தல்கள் தொடர்பில் விரிவான மீளாய்வு ஒன்றினை 2019 செப்ரெம்பரில், அது சமர்ப்பித்தது. [62]

[56] WGEID General Comment on enforced disappearance as a continuous crime, 2010, see https://www.ohchr.org/en/special-procedures/wg-disappearances/general-comments

[57] See Article 1 (enters into force on day of certification) of EDA, https://www.srilankalaw.lk/gazette/2018_pdf/05-2018_E.pdf

[58] https://www.newsfirst.lk/2020/02/26/unhrc-resolutions-30-1-violates-basic-structure-of-constitution-dinesh-gunawardena/

[59] See https://documents-dds-ny.un.org/doc/UNDOC/GEN/G20/152/58/PDF/G2015258.pdf?OpenElement

[60] https://www.ohchr.org/en/hr-bodies/hrc/sri-lanka-accountability/index

[61] உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீள்–நடைபெறாமல் இருப்பதற்கான உத்தரவாதம் ஆகியவற்றை மேம்படுத்துவது தொடர்பான ஐ.நா. சிறப்புத் தூதுவரின் புரூண்டி, ஐக்கிய இராச்சியம், மற்றும் சிறிலங்கா ஆகிய நாடுகளுக்கான பயண அறிக்கை, ஓகஸ்ற் 5, 2021, பக்கம் 30, https://www.ohchr.org/en/documents/country-reports/ahrc4860add2-follow-country-visits-burundi-united-kingdom-great-britain

[62] உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீள்–நடைபெறாமல் இருப்பதற்கான உத்தரவாதம் ஆகியவற்றை மேம்படுத்துவது தொடர்பான ஐ.நா. சிறப்புத் தூதுவரின் புரூண்டி, மற்றும் சிறிலங்கா ஆகியவற்றின் விஜயங்களின் அறிக்கை, செப்ரெம்பர் 10, 2019,

ஐக்கிய நாடுகள் சபையின் வலிந்து அல்லது விருப்பத்திற்கு மாறாக காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பணிக்குழு (WGEID) 2009 இல் பின்வருமாறு சுருக்கமாகக் கூறியது:

''மனிதப் புதைகுழிகள் தொடர்பில், மன்னார் மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணிகள் தொடர்ந்தும் நடைபெறுவதை பணிக்குழு கருத்தில் கொள்கின்றது. எனினும், மாத்தளை புதைகுழி மீதான மீள் விசாரணை இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை தொடர்பிலும், ஏனைய சந்தேகத்திற்கிடமான மனிதப் புதைகுழிகள் அமைந்துள்ள இடங்கள் பற்றி விசாரணைகளை மேற்கொள்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டவில்லை என்பது தொடர்பிலும், சில புதைகுழிகள் அமைந்துள்ள இடங்களில் நடைபெற்ற கட்டடப் பணிகளின்போதும், இதர நடவடிக்கைகளின் போதும் கண்டெடுக்கப்பட்ட மிகமுக்கமான ஆதாரங்கள் பற்றி அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தப்படவில்லை என்று வெளிவந்த தகவல்கள் தொடர்பிலும் கவலையடைந்துள்ளது. காணாமல் ஆக்கப்பட்ட சிலரது தலைவிதியையும் இருப்பிடங்களையும் அறிந்து கொள்வதற்கு இவை முக்கியமான திறவுகோலாக இருக்கலாம் என்பதால், புதைகுழிகள் இருப்பதற்குச் சாத்தியமான இடங்களைக் கண்டறிவது பற்றிய முயற்சிகளைத் தீவிரப்படுத்தும்படி இப்பணிக்குழு அழைப்பு விடுக்கின்றது. இதுவிடயத்தில், சாத்தியமான இதர புதைகுழிகளின் அமைவிடங்கள் பற்றி விசாரணை செய்வதற்கு அது பற்றி திறன்கொண்ட சிறப்பு அணியொன்றை உருவாக்க வேண்டும் என்றும், தடயவியல் திறன்களை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்றும் தனது பரிந்துரையினை வலியுறுத்துகின்றது.''[63]

---

https://www.ohchr.org/en/documents/country-reports/ahrc4240add1-follow-visits-working-group-enforced-or-involuntary

[63] idem, para 13

### வலிந்து காணாமல் ஆக்கப்படுதல்களை மூடிமறைப்பதற்கு உதவும் சட்டக் கட்டமைப்பு

காணாமல் போனவர்களுக்கு நடந்தது என்ன என்பதை அறிந்துகொள்ளும் முயற்சிகள் தோல்வியடைந்தமை பற்றி ஆராய்வதற்கு முன்னதாக, காணாமல் போதல்களை மூடி மறைக்க, சடலங்களை இரகசியமாகப் புதைத்தல் உட்பட கடந்த காலங்களில் கையாளப்பட்ட செயற்பாடுகளைப் பற்றியும், பொறுப்பானவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனை விலக்களிப்புச் சலுகைகள் பற்றியும் சுருக்கமாகப் பார்க்கலாம்.

ஜனாதிபதித் தேர்தலுக்குச் சில நாட்களுக்கு முன்னதாக, 1998 டிசம்பரில் இழப்பீட்டு (திருத்தச்) சட்டம் நிறைவேற்றப்பட்டது. 1977 ஓகஸ்ற் 1ஆம் திகதிக்கும் 1998 டிசம்பர் 16ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் சட்ட ஒழுங்கு மற்றும் அமுலாக்கப் பணிகளில் ஈடுபட்ட பாதுகாப்புப் படைவீரர்கள், அரசாங்கப் பணியாளர்கள், அரசாங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் சட்ட நடவடிக்கைகளிலிருந்து விலக்களிப்பினை இது வழங்கியது. அவர்களது நடவடிக்கைகள் 'நல்லெண்ணத்துடனும்' பொதுமக்களின் நலன்களுக்காகவும் மேற்கொள்ளப்பட்டன என்று இதற்கு நியாயம் கற்பிக்கப்பட்டது. இதுமட்டுமன்றி, எந்தவொரு நபரும் இக்காலப்பகுதியில் அரசாங்க அதிகாரி ஒருவரின் கீழ் 'நல்லெண்ணத்துடன்' செயற்பட்டதாக கூறித் தப்பிக்கக்கூடிய காப்புறுதியையும் இச்சட்டம் ஏதுவாக்கியது.[64]

ஜே.வி.பி. கிளர்ச்சி உச்ச கட்டத்திலிருந்த 1988 யூலையில், அவசரகால நிலையினை (Emergency Regulation (ER) 55FF) அரசாங்கம் பிரகடனப்படுத்தியது. மரணப்பரிசோதனை செய்யாமலும், உள்ளூர் நீதிபதிக்குத் தெரிவிக்காமலும் பாதுகாப்புப் படையினர் சடலங்களை அப்புறப்படுத்துவதை இது ஏதுவாக்கியது.[65] காணாமற்போனவர்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய கொலைகள் சம்பந்தப்பட்ட தடயங்களும் அவசாரலச் சட்டத்தால் வழங்கப்பட்ட கட்டமைப்பின்கீழ் அழிக்கப்பட்டன. மேலும், இச்சட்டங்கள் நடைமுறையில் உள்ளன என்ற வெறும் தகவலே மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் எவருக்கும் தண்டனையிலிருந்து விலக்களிப்பு வழங்கும் நோக்கத்தினை அரசாங்கம் கொண்டிருக்கின்றது என்ற சமிக்ஞையினை பாதுகாப்புப் படையினருக்கு வழங்கியது. ஜே.வி.பி கிளர்ச்சி ஒடுக்கப்பட்டதன் பின்னர், 1990 மார்ச்சில் இவ் அவசரகால நிலைமை (ER 55FF) விலக்கிக் கொள்ளப்பட்டது.

மேலும் (பல வருடங்களுக்குத் தொடர்ந்து, 1993 யூன் வரை நடைமுறையில் இருந்த) ER71 அவசரகால நிலைமையானது சட்டமா அதிபர் அனுமதிக்கப்பட்டு அல்லது அவரால் தொடங்கப்பட்டால் மட்டுமே 'நல்லெண்ணத்துடன்' மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு நடவடிக்கைக்கும், நீதிமன்றங்களில் குடியியல் அல்லது குற்றவியல் நடவடிக்கையும் எடுக்க முடியும் என்று தெளிவாகக் கூறியது.

1993 யூனிற்குப் பின்னர், முறையான விசாரணைகளை நடாத்துவதை இதர அவசரகால விதிகள் இன்னமும் கடினமாக்கியுள்ளன. உதாரணமாக, ஆயுத மோதலின் விளைவாகவே ஒரு மரணம் நிகழ்ந்தது என்று பாதுகாப்புப் படைவீரர் யாராவது கூறியதன் அடிப்படையில் அவசரகால நடைமுறையின்கீழ் விசாரணை நடாத்தும்படி, அவசரகால ஒழுங்கு விதிகளின் கீழ் காவல்துறை மா அதிபர் கொழும்பு உயர் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுக்கலாம்.[66] அதன் பின்னர், காவல்த்துறையால் வழங்கப்படும் பிரேதப்பரிசோதனை அறிக்கையினையும், இதர ஆதரங்களையும் மட்டுமே உயர் நீதிமன்ற நீதிபதி ஆதரங்களாகப் பதிவிடலாம். இதன் தீர்ப்புகள் சட்டமா அதிபருக்கு மட்டுமே அனுப்பி வைக்கப்படவேண்டியிருந்தது. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கள் பொது மக்களுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும் என்ற எந்த விதிமுறைகளும் இருக்கவில்லை. 1993 யூனிற்கு முன்னதாக, இந்த உயர் நீதிமன்ற வழக்கு விசாரணைகள் கமராவிலும் நடத்தப்பட்டன. காவல்துறையினரையும் பொறுப்பான மற்றையவர்களுக்கும் தண்டனையிலிருந்து விலக்களிப்பதை உத்தரவாதப்படுத்தியதுடன், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமைகளையும் நீதிக்குப் புறம்பான கொலைகளையும் மூடி மறைப்பதையும் இவ்விதிகள் தொடர்ந்தும் ஏதுவாக்கியது. இவ்விசாரணைகளிற்கான அமைக்கப்பட்ட குறுகிய விதிமுறைகள் உயர்நீதிமன்ற நீதிபதிகள் சுயாதீனமாகச் செயற்படுவதில் தாக்கத்தினை ஏற்படுத்தியது மட்டுமன்றி, காவல்துறையினரிடமிருந்து பெறப்படும் ஆதாரங்களைத் தவிர, பாதிக்கப்பட்டவர்கள், அவர்களது குடும்பங்கள் மற்றும் இதர சுயாதீன சாட்சிகள் ஆகியவர்களிடமிருந்து கிடைக்கப்பட்ட ஆதாரங்கள் எதனையும் சேர்த்துக் கொள்ளக்கூடாது என்ற நடைமுறையானது உண்மையைத் தெரிந்துகொள்வதற்கான உரிமையினை அடிப்படையாகக் கொண்ட விசாரணைகளில் பாதிக்கப்பட்டவர்களின் வகிபாகத்தினை மையப்படுத்தும் சர்வதேசச் சட்டங்களின் மீறலாகவே அமைந்தது.

[64] Amnesty International, 'Sri Lanka: When will justice be done?', Jul 1994, https://www.refworld.org/docid/3ae6a9bac.html

[65] கோகன்டர மனிதப் புதைகுழி மீதான விசாரணைக்குறைபாட்டினை காவல்துறையினர் உதாரணமாக அவசரகால நிலைமையினைக் (ERs 55FF) காட்டி நியாயப்படுத்தியதாக மேற்கு, தெற்கு மற்றும் சப்ரகமுவா மாகாணங்களுக்கான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில், தொகுப்பு 2, குறிப்பிடப்பட்டுள்ளது. (பின்னிணைப்பைப் பார்க்கவும்)

[66] https://www.amnesty.org/fr/wp-content/uploads/2021/06/asa370041994en.pdf

2016 இல், நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ், காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலக (தாபித்தலும், நிருவகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டத்தின் கீழ் காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் அமைக்கப்பட்டது. [67] காணாமல் போன ஆட்களினதும் அவர்களின் உறவினர்களினதும் உரிமைகளையும் நலன்களையும் பாதுகாப்பதே இச்சட்டத்தின் குறிக்கோளாக அமைந்திருந்தது.[68] இதற்குப் பொறுப்பானவர்கள் 2018 பெப்ரவரியில் நியமிக்கப்பட்டார்கள். இக் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் ஆரம்பிக்கப்பட்ட முதல் மூன்று வருடங்கள் மிகவும் சுறுசுறுப்பாகச் செயற்பட்டது. இதனால் அதன் ஆணையினை அவ் அலுவலகத்தால் நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கை காணாமல் போனவர்களின் பல குடும்பங்கள் மத்தியிலும் சர்வதேச சமூகத்தின் மத்தியிலும் ஏற்பட்டது. (மற்றையவர்கள் ஆரம்பம் முதலே இதில் சந்தேகம் கொண்டிருந்தார்கள்). ஆனால், இவ்வமைப்பின் தலைவராக இருந்த சலிய பீரிஸ் 2020 ஓகஸ்ற்றில் தன்னுடைய பதவி விலகியபோது அவரிடன் இடத்திற்கு ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி உபாலி அபேயரத்தின நியமிக்கப்பட்டதும் இந்நிலைமை மாறிப்போனது.[69] மற்றைய உறுப்பினர்களின் பதவிக்காலம் 2021 பெப்ரவரியில் தான் முடிவடைந்தது. நீதிபதி அபேயரத்தின 08.01.2015 முதல் 16.11.2019 வரை அரசியல் பழிவாங்கல் தொடர்பான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கான விசாரணை ஆணைக்குழுவிற்கு (Commission of Inquiry to Investigate Allegations of Political Victimisation) தலைமை தாங்கியிருந்தார். பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளை அச்சுறுத்துவதையும் நீதித்துறைச் செயல்முறைகளை வேரறுப்பதையும் இலக்காக் கொண்டு செயற்படும் ஒரு கங்காரு நீதிமன்றமாகவே பலராலும் இது பார்க்கப்பட்டது. அப்போதைய ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சா தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவிற்குத் தலைவராக நீதிபதி உபாலி அபேயரத்தினவை நியமித்ததைத் தொடர்ந்து, பெரும்பாலும் கருத்து முரண்பாடு காரணமாக, பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னதாகவே அவர் பதவி விலகியதாகச் சொல்லப்படுகின்றது. [70]

இவ்வறிக்கை எழுதப்பட்டுக் கொண்டிந்த நேரத்தில் காணாமல் போன ஆட்கள் தொடர்பான அலுவலகத்தின் தலைவராக மகேஸ் கட்டுலன்ட்ட செயற்பட்டுக்கொண்டிருந்தார். [71] ஏற்கனவே அவ்வலுவலகத்தில் முறைப்பாடு செய்திருந்த குடும்பங்களைச் சந்தித்து, அவர்கள் வழங்கிய தகவல்களைச் சரிபார்த்து, அவ்விபரங்கள் மேலதிக நடவடிக்கைகளுக்குக் கொண்டு செல்லப்பட வேண்டுமா அல்லது அவற்றை முடிக்க வேண்டுமா என்று தீர்மானிப்பதற்காக அதன் ஆணையாளர்கள், காணாமல் போன ஆட்கள் தொடர்பான அலுவலகத்தின் பிராந்திய பணிமனைகளுக்கு விஜயம் செய்து வருவதாகச் சொல்லப்படுகின்றது. காணாமல்போன ஆட்கள் தொடர்பான அலுவலகத்தின் பணி தொடர்பான சந்தேகம் குடும்பங்களிடையே எழுந்துள்ளது. [72] காணாமல் போனதாக முறைப்பாடு செய்யப்பட்ட 50 பேர் வெளிநாடுகளில் வசிப்பதாக காணாமல்போன ஆட்கள் தொடர்பான அலுவலகம் உறுதிப்படுத்தியதென அதன் தலைவர் கூறியதாக அண்மையில் ஊடகங்களில் செய்திகள் வெளிவந்ததைத் தொடர்ந்து, இச் சந்தேகம் மேலும் அதிகரித்துள்ளது. [73] குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்துடன் சரி பார்த்த பின்னர், 'காணாமல் போனதாக முறையிடப்பட்ட 93 பேர் வெளிநாடுகளுக்குப் பயணம் செய்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டதாக' காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. [74] இது அவர்களது உறவினர்களால் காணாமல் போனவர்கள் என்று பதியப்பட்ட மக்கள், அவர்கள் உயிருடன் இருந்த காலத்தில் வெளி நாடுகளுக்குச் சென்றதற்கான பதிவுகள் இருப்பதாகச் சொல்கின்றதா அல்லது வெளிநாடுகளுக்குச் சென்று ஒருபோதுமே திரும்பி வராதவர்களைக் குறிப்பிடுகின்றதா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

சந்தேகத்திற்கிடமான புதைகுழிப் பகுதியில் அகழ்வுப்பணி மற்றும் /அல்லது தோண்டியெடுத்தல் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு நீதிமன்ற ஆணையைப் பிறப்பிக்குமாறு நீதவான் நீதிமன்றத்திடம் விண்ணப்பிப்பதற்கும், அவ்வாறான அகழ்வு அல்லது தோண்டியெடுக்கும் பணி நடைபெறுகையில் பார்வையாளராகச் செயற்படுவதற்குமான அதிகாரம் காணாமல் போன ஆட்கள்

---

67 http://www.omp.gov.lk/omp-documents/omp-act

68 OMP Act, Section 13(1)(k)(iii), 10(c)

69 https://www.sundaytimes.lk/200823/news/omp-head-resigns-to-contest-basl-presidency-413469.html

70 48 அடையாள வழக்குகளை COI மீளாய்வு செய்தது. சட்டத்துறை முடிவுகளைத் தலைகீழாக மாற்றி, நீதித்துறையின் முடிவுகளில் தலையிட்டதுடன், நீதித்துறையினதும் சட்டத்தின் ஆட்சியினதும் சுதந்திரத்தினையும் சீர்குலைக்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டது. ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக மூவர் கொண்ட விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டது, ஆனால், அதனை நடைமுறைப்படுத்துவதில்லை என அமைச்சரவை முடிவுசெய்தது. https://srilankabrief.org/the-appointment-of-justice-upali-abeyrathne-as-head-of-the-omp-is-a-direct-insult-and-an-act-of-violence-against-families-of-the-disappeared-sandya-ekneligoda/ and https://www.ohchr.org/en/press-releases/2021/02/sri-lanka-experts-dismayed-regressive-steps-call-renewed-un-scrutiny-and

71 https://twitter.com/ompsrilanka/status/1583332936463491072

72 https://www.themorning.lk/articles/222921 and https://english.theleader.lk/news/2783-omp-chairman-s-claims-denounced

73 https://www.reuters.com/world/asia-pacific/sri-lankans-yearn-answers-relatives-who-disappeared-civil-war-2022-10-26/

74 OMP 2021 Annual Report, p78

பற்றிய அலுவலகத்திடம் உள்ளது. [75] மன்னார் நகரிலுள்ள சத்தோச கட்டட நிலத்தில் அமைந்திருந்த சந்தேகத்திற்கிடமான புதைகுழி தொடர்பான வழக்கில் (மன்னார் நீதவான் நீதிமன்ற வழக்கு இல B/232/2018) இவ்வதிகாரத்தை இவ்வலுவலகம் பயன்படுத்தியது. மேலும் 2020 இன் இறுதிப் பகுதியளவில் ஐந்து வழக்குகளிலும் [76], 2021 இன் முடிவில் மொத்தமாக 11 வழக்குகளிலும் இவ்வலுவலகம் இதனைப் பயன்படுத்தியது.[77]

மனித எச்சங்கள் மீதான விசாரணைகள் 1979 ஆம் ஆண்டின் குற்றவியல் நடைமுறைச்சட்டத்தின் (திருத்தப்பட்ட) அத்தியாயம் 30 இன் (விசாரணை) ஒன்பதாம் பகுதியின் கீழ் (மரணத்திற்கான காரணத்தை அறிந்துகொள்வதற்காக) அல்லது பகுதி 5 இன் கீழ் (குற்றவியல் விசாரணைகள்) நடத்தப்படுகின்றன. இச்சட்டத்தின் கீழ், மனித எச்சம் கண்டுபிடிக்கப்பட்டால் மரணத்திற்கான காரணத்தைத் தெரிந்து கொள்வதற்கும் (பகுதி 370(1)) தேவைப்பட்டால், குற்றவியல் விசாரணையை (பகுதி 370(3)) நடாத்துவதற்கும் அருகிலுள்ள நீதவான் நீதிமன்றத்திற்கு, காவல் நிலையத்திற்கு, சமாதான நீதவானிற்கு அல்லது சம்மந்தப்பட்ட கிராமத் தலைவருக்கு (பகுதி 21) தெரியப்படுத்தவேண்டிய கடப்பாடு இருக்கின்றது. இருந்த போதிலும், சந்தேகத்திற்கிடமான புதைகுழிகள் அமைந்துள்ள இடங்கள் தொடர்பாக வினைத்திறன்மிக்க விசாரணைகளை எவ்வாறு நடாத்துவது என்பதற்கான வழிகாட்டல்கள் எதுவும் இந்தச் சட்டங்களில் இல்லை. உதாரணமாக, அடையாளம் காணப்படாத அனைத்து மனித எச்சங்களும் அடையாளம் காணப்பட வேண்டும் என்பது தொடர்பாக கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடைமுறைகள் பற்றி சட்டத்தில் கூறப்படவில்லை. ஆனால், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான சட்டத்தின் பகுதி 14(4) இன் கீழ் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டு இறந்து போனவர்களுக்கு விதிவிலக்கு உள்ளது. அதாவது, அச்சடலங்களை இனம்கண்டு, உரிய உறவினர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று சட்ட அமுலாக்க அதிகாரிகளை அது கேட்டுக்கொள்கின்றது.[78]

புதைக்கப்பட்ட இடம் கண்டுபிடிக்கப்பட்டது தொடர்பில் பொது ஊழியர்கள் மற்றும்/அல்லது காவல்துறையால் மேற் கொள்ளப்படும் புகாரைத் தொடர்ந்து, வழக்கின் முதலாவது விசாரணையை நடாத்திய பின்னர், நீதிபதி அதன் அகழ்வுப் பணிக்கான முறையான உத்தரவினைப் வழங்குவார். [79] நீதிபதிகளின் வழிகாட்டல்களின் கீழும் கட்டளைகளின் கீழும் அகழ்வுப் பணிகள் இடம்பெறும். அத்துடன், சட்ட வைத்திய அதிகாரிகள் அகழ்வுப் பணியின் தங்களது ஆய்வு முடிவுகள் பற்றி நீதிபதிகளுக்குத் தெரிவிப்பார்கள்.[80] சில நேரங்களில் உள்ளூர் நிலையங்களிலுள்ள மிகக்குறைந்த அல்லது போதுமான பயிற்சியோ அல்லது அறிவோ இல்லாத அதிகமான இளநிலை மருத்துவ அதிகாரிகளே அகழ்வுப் பணிகளிலும் ஈடுபடுத்தப்படுவார்கள்.

அதேவேளையில், குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 373ஆம் பகுதியில், பிரேதப் பரிசோதனைகளை மேற்கொள்ளும் பொருட்டு சடலங்களைப் பிளந்து பார்ப்பதற்குரிய அனுமதி தெளிவாக வழங்கப்பட்டுள்ளது. ஆனால், இச்சட்டமானது சமீபத்தில் புதைக்கப்பட்ட ஒருவருடைய சடலத்தையே குறிப்பாகச் சுட்டி நிற்கின்றது. ஆனால், பாரிய மனிதப் புதைகுழிகளில் அகழ்வுப்பணி மேற்கொள்வது தொடர்பாக தனியான சட்ட மருத்துவ நடைமுறைகள் எதுவும் இல்லை. மாறாக, இது எவ்வளவு சிக்கலானது என்பதையும், (உடற் கூற்றளவையியல் ஆய்வுகள் மட்டுமன்றி தொல்லியல் மற்றும் பிற துறைகள் உட்பட) பரந்தளவிலான தடயவியல் நிபுணத்துவ தேவை உள்ளது என்பதையும் உதாசீனப்படுத்தி, ஒரே பிரேதப் பரிசோதனையின் கீழேயே இதுவும் வருகின்றது.

சிறிலங்காவில் நடந்த பரவலான ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து 2022 யூலையில் கோத்தபாய பதவிவிலகிய பின்னர், அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சிறிலங்காவின் ஜனாதிபதியாக பாராளுமன்றம் நியமனம் செய்தது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 1995 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் நியமிக்கப்பட்ட உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவைச் (Truth and Reconciliation Commission) சுட்டிக்காட்டி, அதே பெயரில் ஆணைக்குழு ஒன்றை அமைக்கும் திட்டங்கள் தொடர்பாக பலமுறை பேசியுள்ளார். [81] இத்திட்டம் குறித்து காணாமல் போனவர்களின் குடும்பங்கள் உட்பட, சிறிலங்காவில் கணிசமான சந்தேகம் நிலவுகின்றது. முன்னைய ஆணைக்குழுக்களது பணியினையும், உண்மை, நீதி மற்றும்

[75] OMP Act, Section 12(d)

[76] களுவாஞ்சிக்குடி, புதுக்குடியிருப்பு, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகியவற்றை இது உள்ளடக்குகின்றது. See OMP 2020 Annual Report, para 2.33, http://www.omp.gov.lk/storage/app/uploads/public/604/847/009/604847009edfb770550416.pdf and Annex

[77] OMP Annual Report 2021, p62

[78] https://groundviews.org/2022/03/15/uncovering-the-secrets-of-sri-lankas-gravesites/

[79] Code of Criminal Procedure Act No 15 of 1979, Section 138, 416 and 369-373, https://www.ilo.org/dyn/natlex/natlex4.detail?p_lang=en&p_isn=94267&p_count=93548&p_classification=01.04&p_classcount=2824

[80] Code of Criminal Procedure Act No 15 of 1979, Section 373, https://www.ilo.org/dyn/natlex/natlex4.detail?p_lang=en&p_isn=94267&p_count=93548&p_classification=01.04&p_classcount=2824

[81] See https://www.presidentsoffice.gov.lk/index.php/2022/12/14/president-emphasizes-all-political-parties-should-unite-to-provide-a-solution-to-the-ethnic-problem-by-independence-day-celebrations-2023/ and https://www.sundaytimes.lk/230409/columns/government-gives-priority-to-national-unity-and-reconciliation-516742.html

பரிகாரங்களை அவை வழங்கத் தவறியதையும் காணாமல் போனவர்களின் குடும்பங்கள் நினைவுபடுத்துகின்றனர்.[82]

தென்னாபிரிக்காவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு பாரிய மனிதப் புதைகுழிகள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளும் ஆணை இருக்கவில்லை என்பதை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானது. அதேவேளையில், காணாமல் போனவர்கள் தொடர்பாக சிறிலங்காவில் அமைக்கப்பட்ட பல்வேறு ஆணைக்குழுக்களும் கூட இதற்கான ஆணையினைக் கொண்டிருக்கவில்லை. [83] 1994இல் அப்போதைய ஜனாதிபதி சந்திக்கா குமாரதுங்காவினால் அமைக்கப்பட்ட மூன்று 'மண்டல' ஆணைக்குழுக்களும், 1998 இல் அமைக்கப்பட்ட அகில இலங்கை ஆணைக்குழுவும் தம்மிடம் சாட்சியம் வழங்கிய ஒருவர் கூறிய பாரிய மனிதப் புதைகுழிகள் தொடர்பான தகவலை ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தியதுடன், அகழ்வுப் பணிகளை மேற்கொள்ளும் படியும் பரிந்துரை வழங்கின. கோகந்தர, எஸ்செல்ல, வவுல்கெல்ல, வல்பிட்டா பண்ணை, அங்கும்புரா ஆகிய பகுதிகளிலிருந்த புதைகுழிகளில் அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. [84] எனினும், இந்த அகழ்வுகளின் மூலம் இப்புதைகுழிகளுக்குக் காரணமானவர்கள் எவரையுமே நீதியின்முன் கொண்டுவரவில்லை.

மேற்குறிப்பிட்ட மூன்று 'மண்டல' ஆணைக்குழுக்களிலும் 27,526 முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன், இவற்றில் – அவர்களுக்கு கிடைத்த நேரத்தில் ஆய்வுசெய்தவற்றில் – 16,742 முறைப்பாடுகள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டதுடன் தொடர்புடையவை என்று தீர்மானித்தன. [85] எஞ்சிய முறைப்பாடுகள் மீது விசாரணைகளை மேற்கொண்ட அகில இலங்கை ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு காணாமல் போனதுடன் தொடர்புடைய மேலும் 10,136 முறைப்பாடுகளைப் பதிவுசெய்தது. [86] வேறுவிதத்தில் சொல்வதாக இருந்தால், ஏறத்தாழ 27,000 காணாமல்போதல் சம்பவங்களை 1990களின் இறுதியில் இவ்ஆணைக்குழுக்கள் உறுதிப்படுத்தியிருந்தன. மேலே கூறியது போன்று, அதற்குப் பின்னர் மேலும் பல்லாயிரக்கணக்கான மக்கள், அதுவும் குறிப்பாக பாதுகாப்புப் படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் வடக்கிலும் கிழக்கிலும் நடந்த போரில், காணாமல் போயுள்ளனர்.

FoD யானது 2023 ஏப்ரல் நடுப்பகுதியில் தகவலறியும் உரிமை ஊடாக, காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்கு தெளிவுபடுத்தல்கள் வேண்டி கடிதம் ஒன்றினை எழுதியிருந்தது. அதில், அவர்கள் இதுவரை பெற்றுக்கொண்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை, அவை குறிப்பிடும் காலப்பகுதி, காணாமல் போன ஆட்கள் தொடர்பான அலுவலகம் கண்காணித்த அகழ்வுப் பணிகளின் எண்ணிக்கை, தற்போது சிறிலங்கா அரச ஆவணக்காப்பகங்களில் வைக்கப்பட்டுள்ள, முன்னைய ஆணைக்குழுக்களால் சேகரிக்கப்பட்ட கோவைகளையும் ஆதாரங்களையும் அதனால் பெற்றுக்கொள்ள முடிந்ததா உள்ளிட்ட பல கேள்விகள் உள்ளடங்கியிருந்தன. காணாமல் போன ஆட்கள் தொடர்பான அலுவலகம் 2023 மே 3ஆம் திகதி அனுப்பிய தனது பதிலில் இதற்கான தெளிவுபடுத்தல்கள் அதன் 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையில் (பணம்கட்டிப் பெற்றுக்கொள்ளமுடியும்) உள்ளன என்று குறிப்பிட்டிருந்தது. எனினும், 2021 ஆம் ஆண்டின் அவர்களது வருடாந்த அறிக்கையினை ஆய்வுசெய்த போது, பெற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாக சில எண்ணிக்கைகளும், அவை குறிப்பிடும் காலப்பகுதியும் மாவட்டங்களும் அதில் காணப்படும் அதேவேளையில், தகவல்கள் முழுமையானவையாக இல்லை என்று தெரியவந்தது. உதாரணத்திற்கு, 14,988 முறைப்பாடுகளில் 6,086 முறைப்பாடுகள் 2000–2021 வரையான காலப்பகுதியைச் சேர்ந்தவை என்று அவ்வறிக்கை குறிப்பிடும் அதேவேளையில், எஞ்சிய முறைப்பாடுகளின் காலப்பகுதி தொடர்பான வகைப்படுத்தல்களையும் காணவில்லை. [87] அவ் அலுவலகம் அவதானிப்பாளர்களாகச் செயற்பட்ட அகழ்வுப் பணிகளின் எண்ணிக்கை தொடர்பில் வெறும் 11 என்ற இலக்கத்தைத் தவிர மேலதிக விபரங்களும் அவ்வறிக்கையில் வழங்கப்படவில்லை. புதைகுழிகளின் அகழ்வுப்பணிகளில் வெளிப்படைத் தன்மையுள்ளதை உறுதிப்படுத்துவதற்காக காணாமல் போன ஆட்கள் தொடர்பான அலுவலகத்துடன் மேலும் தொடர்பாடல்களை FoD யானது ஏற்படுத்தி வருகின்றது. [88] மேலும், காணாமல் போன ஆட்கள் தொடர்பான அலுவலகத்தின் 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கணக்கறிக்கையினை மீளாய்வு செய்யும் கணக்காளர் நாயகத்தின் 2022, யூன் 23 ஆம் திகதி வெளிவந்த அறிக்கையில் அவர்களின் பணியினை விமர்சித்து பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிடுவது முக்கியமானதாகும்.

[82] See https://groundviews.org/2022/11/26/does-sri-lanka-need-a-truth-and-reconciliation-mechanism/ and https://www.srilankacampaign.org/report-30-years-of-failure-sri-lankas-domestic-accountability-and-human-rights-processes/ முன்னை ஆணைக்குழுக்களின் தவறுகளின் விபரங்களுக்குப் பார்வையிடவும்

[83] https://groundviews.org/2010/06/07/mass-graves-nothing-new-to-sri-lanka/

[84] https://groundviews.org/2010/06/07/mass-graves-nothing-new-to-sri-lanka/

[85] Kishali Pinto-Jayawardene, 'Post-war justice in Sri Lanka', Jan 2010, p79, https://www.icj.org/wp-content/uploads/2010/01/srilanka_impunity_18_01_20102.pdf

[86] All-Island Commission, final report, p4

[87] OMP, 2021 Annual Report, p76-77

[88] 2023 நடுப்பகுதிவரை, 2021 இற்கான வருடாந்த அறிக்கை இணையத்தில் கிடைக்கவில்லை.

கணக்காய்வு ஆண்டின் முடிவில் காணாமல் போன ஆட்கள் தொடர்பில் 39, 473 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற போதிலும், இன்றுவரை வெறும் 67 இடைக்கால அறிக்கைகளே வெளியிடப்பட்டதை அவதானிக்க முடிகின்றது. கிடைக்கப்பட்ட இவ்வாறான முறைப்பாடுகளில், 21, 171 முறைப்பாடுகள் மட்டுமே கோப்புக்களில் பராமரிக்கப்பட்டு வருவதுடன், 702 குடும்பங்கள் மட்டுமே விசாரணைச் செயற்பாடுகளுக்காக அழைக்கப்பட்டுள்ளன. இது மொத்தமாகப் பராமரிக்கப்பட்டுவரும் கோப்புக்களில் ஒப்பீட்டளவில் வெறும் 3.32% குறைந்த முன்னேற்றத்தையே எட்டியுள்ளது.[89]

[89] OMP, 2021 Annual Report, p xxiv-xxv

# 2. அகழ்வுப் பணிகளில் திரும்பத் திரும்ப நிகழ்ந்த தவறுகள்

இந்த அத்தியாயத்தில், இன்றுவரை நடாத்தப்பட்ட அகழ்வு நடவடிக்கைகளில் ஏற்பட்ட தவறுகள் குறித்து நாம் சுருக்கமாகக் குறிப்பிடுகின்றோம். இது சர்வதேச நியமங்களுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் அமைவாக, முக்கியமாக 2016 இல் வெளிவந்த ஐ.நா.வின் மின்னெசோற்றா நெறிமுறைகளுக்கு ஏற்பவும், மனிதப் புதைகுழிகளைப் பாதுகாப்பது மற்றும் விசாரணை நடாத்துவது தொடர்பில் காணாமல் போன ஆட்களுக்கான சர்வதேச ஆணைக்குழுவினால் 2020 இல் வெளியிடப்பட்ட நெறிமுறையைத் தழுவியும் அமைந்துள்ளது.[90]

இன்றுவரை, சடலமாக மீட்கப்பட்ட மக்கள் காணாமல் போனதற்கும், படுகொலை செய்யப்பட்டதற்கும் காரணமானவர்கள் மீது வழக்குத் தொடுத்து தண்டனை வழங்குவது ஒருபுறம் இருக்க, மிகச்சில அகழ்வுகளே பாதிக்கப்பட்டவர்களை இனம் காண்பதற்கும் அவர்கள் எவ்வாறான சூழ்நிலையில் இறந்தார்கள் என்ற கேள்விக்குப் பதிலளிப்பதாகவும் உள்ளன. கிருசாந்தி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டு, அவரது அம்மாவும் தம்பியும் கொல்லப்பட்ட சம்பவத்தில் சோமரட்ண ராஜபக்சவுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டதே ஒரு விதிவிலக்கான சம்பவமாக அமைந்திருக்கிறது. இந்த வழக்கு விசாரணையில் கிருசாந்தியின் உடலம் அகழ்ந்தெடுக்கப்பட்ட இடமான செம்மணியில் 400 இற்கும் மேற்பட்ட உடல்கள் புதைக்கப்பட்டதாக சோமரட்ண ராஜபக்ச தனது வாக்குமூலத்தில் கூறியிருந்தார். இந்த வாக்குமூலத்தின்படி, மேலும் 15 உடல்கள் அந்த இடத்திலிருந்து அகழ்ந்து எடுக்கப்பட்டன. பின்னர், இத்தகைய காணாமல்போதல் சம்பவங்களில் பல இராணுவ வீரர்கள் தொடர்புபட்டிருப்பது அடையாளம் காணப்பட்டது, ஆனால் அவர்கள் எவருமே சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை. உண்மையில், பலருக்கும் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டதிலிருந்து இராணுவத்தின் மத்தியிலிருந்த தண்டனையிலிருந்து விலக்களிக்கும் போக்கு இன்னும் வலுவடைந்தது.[91]

யாழ்ப்பாண மாவட்டத்தின் மிருசுவில் பகுதியில் 2000 ஆம் ஆண்டு அகழ்ந்தெடுக்கப்பட்ட மூன்று குழந்தைகள் உள்ளிட்ட எட்டுபேரின் கொலை தொடர்பாக 2015 இல் மரணதண்டனை விதிக்கப்பட்ட இராணுவத்தின் ஆழ ஊடுருவும் அணியைச் சேர்ந்த சுனில் ரத்னநாயக்கவின் வழக்கு இன்னொரு (முழுமையற்ற) விதிவிலக்கு ஆகும்.[92] மேலும் நான்கு குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டதோடு, சுனில் ரத்நாயக்கவுக்கு எதிரான தண்டனை மேன்முறையீட்டில் உறுதி செய்யப்பட்ட நிலையில், 2020 இல் அப்போதைய ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவினால் அவருக்கு மன்னிப்பு வழங்கப்பட்டது. சட்டத்தின் பிடியிலிருந்தும், தண்டனையில் இருந்தும் இராணுவ வீரர்கள் தப்புவதற்கு இன்னொரு உதாரணமாக அமைவதுடன் இது உள்நாட்டு மற்றும் சர்வதேச சட்டங்களை மீறுவதான செயற்பாடாகவும் இருக்கின்றது.

ஏனைய அனைத்து வழக்குகளும் ஒருபோதுமே விசாரணைக்கு வராததுடன், அவை சம்பிரதாயமாக முடித்துவைக்கப்பட்டன அல்லது வெறுமனே கைவிடப்பட்டன.[93] 30 வருட அகழ்வுகளின் பின்னர், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதியை வழங்க சிறிலங்கா அரசினால் முடியாதுள்ளது அல்லது அதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கு அது விருப்பமின்றியுள்ளது தெளிவாகத் தெரிகின்றது.

---

[90] https://www.ohchr.org/sites/default/files/Documents/Publications/MinnesotaProtocol.pdf and https://www.icmp.int/wp-content/uploads/2022/02/mass_graves_project_english-4.pdf

[91] மேலதிக விபரங்களுக்குப் பின்னிணைப்பபைப் பார்க்கவும்

[92] மேலதிக விபரங்களுக்குப் பின்னிணைப்பபைப் பார்க்கவும்

[93] மேலதிக விபரங்களுக்குப் பின்னிணைப்பபைப் பார்க்கவும். எம்பிலிப்பிட்டிய சேவன இராணுவ முகாமில் ஆட்கள் காணாமல் ஆக்கப்பட்டமைக்குப் பொறுப்பானவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட்டது. ஆனால் அவர்களின் தீர்ப்பு சூரியகந்த அகழ்வு நடவடிக்கைகளை ஆதாரமாக வைத்து வழங்கப்படவில்லை.

# 2.1 குடும்பங்களின் பங்குபற்றலும் பாதுகாப்பும்

குடும்பங்களின் பங்களிப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பான சர்வதேச நியமங்கள் பல்வேறு ஆவணங்களில் விளக்கப் பட்டுள்ளன. அவற்றுள் முக்கியமானவை:

- அனைத்து நபர்களையும் வலிந்து காணாமல் ஆக்கப்படுவதில் இருந்து பாதுகாப்பதற்கான சர்வதேச உடன்படிக்கையானது, வலிந்து காணாமல்போன சூழ்நிலைகள், விசாரணையில் ஏற்பட்ட முன்னேற்றங்களும் முடிவுகளும் மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட நபருக்கு என்ன நடந்தது என்ற உண்மைநிலை என்பவற்றை அவர்களது குடும்பங்கள் அறிந்துகொள்வதற்கான உரிமையைத் தெளிவாக விவரிக்கிறது.[94] இந்த உரிமை சமமான மற்றும் வினைத்திறனுள்ள நீதிக்கான உரிமையை உள்ளடக்கியது; போதுமானளவு, வினைத்திறனுள்ள உடனடியான இழப்பீடு; சட்டத்தின் முன் பாதிக்கப்பட்டவரின் நிலையை அங்கீகரிப்பது; [95] மற்றும் மீறல்கள் மற்றும் பொறுப்புக் கூறும் வழிமுறைகள் தொடர்பாக தொடர்புடைய தகவல்களை அறிந்து கொள்வதற்கான உரிமை போன்றவற்றை உள்ளடக்கியது.[96]

- மின்னெசோற்றா நெறிமுறையானது பொதுமக்களதும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களதும் சந்தேகங்களுக்கு பதிலளிக்கும் வகையில் வெளிப்படைத் தன்மையுடன் இருக்கும் அதேவேளையில், விசாரணை மூலம் அவர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாதிருப்பதை உறுதிப்படுத்துவது உள்ளிட, விசாரணை நடைமுறைகள் மற்றும் அதன் விளைவுகள் வெளிப்படைத் தன்மையுடன் இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.[97]

- போர்ண்மௌத் நெறிமுறையானது மேலோட்டமான நடவடிக்கைக் கொள்கைகளுடன் 'எந்த தீங்கும் செய்யாதிருத்தல்' கோட்பாட்டை பட்டியலிடுவதுடன் அகழ்வு நடவடிக்கையின் விசாரணைகளின் போது தெளிவான தகவல் பரிமாற்றத்தை உறுதிப்படுத்துவதையும் வலியுறுத்துகிறது.[98]

- மனித உரிமை பேரவைக்கான கால்மாட் அறிக்கையில்[99] சட்டத்திற்குப் புறம்பான கொலைகளின் விசாரணைகளில், பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பங்குபற்றலும் இருப்பதை அரசானது உறுதி செய்வதுடன், இறப்புக்கான காரணம், சம்பவம் நிகழ்ந்த இடம் மற்றும் அடையாளம் காணப்பட்டபோது எச்சங்களின் நிலை என கிடைக்கக்கூடிய அனைத்து தகவல்களும் அவர்களைச் சென்றடைவதை உறுதிப்படுத்தவேண்டும் என குறிப்பிடுகிறது. [100]

மேலும், அத்தியாயம் 1 இல் சுட்டிக்காட்டியது போல, இறந்தவர்களைத் தேடுவதிலும் அவர்களின் எச்சங்களை மீட்டெடுப்பதிலும் ஜெனிவா சாசனத்தில் கைச்சாத்திட்ட தரப்பினர் கடைப்பிடிக்க வேண்டிய படிமுறைகள் பற்றி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் விபரமாகக் குறிப்பிட்டுள்ளது.[101]

பின்வருவன சிறிலங்கா சட்டத்திலுள்ள காணாமல்போதலுடன் தொடர்புடைய சட்டவிதிகளாகும்:

- வலிந்து காணாமல்போதல் சட்டத்தின் பிரிவுகளான 25 மற்றும் 14(1) இன்படி, காணாமல் போனோரின் குடும்பத்தினருக்கு உண்மையை அறிந்துகொள்வதற்கான உரிமையுண்டு.

- குற்றவியல் நடைமுறைச்சட்டத்தின் பிரிவு 260 இன்கீழ், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள் நீதி விசாரணையின்போது சட்டத்தரணியுடன் சமூகமளிக்கும் உரிமையுண்டு.

- 2015 இன் சாட்சியங்கள் மற்றும் பாதிக்கப் பட்டவர்களுக்கான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு 3(h) இன்படி, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள் குற்றவியல் மற்றும் தடயவியல் விசாரணைகளில் கலந்து கொள்வதற்கான உரிமையுண்டு.

### காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களை அல்லது அவர்களது சட்டத்தரணிகளைத் தடுத்தல்

இத்தகைய சட்டரீதியான உத்தரவாதங்கள் இருந்தாலும், பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பங்குபற்றல் பற்றாக்குறையாக இருப்பது சிறிலங்காவில் அகழ்வு நடவடிக்கைகளுக்குப் பெரிதும் பின்னடைவாகவுள்ளது. [102] திருப்பதியற்றதாக இருப்பினும், குற்றவியல் விசாரணைகள் நடாத்தப்பட்ட வழக்குகளிலும் குடும்பங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

[94] அனைத்து நபர்களையும் வலிந்து காணாமல் ஆக்கப்படுவதில் இருந்து பாதுகாப்பதற்கான சர்வதேச உடன்படிக்கை, சரத்து 24(2)

[95] அனைத்து நபர்களையும் வலிந்து காணாமல் ஆக்கப்படுவதிலிருந்து பாதுகாப்பதற்கான சர்வதேச உடன்படிக்கை யின் சரத்து 26(6), அரச தரப்பினர் காணாமல் போனவரின் நிலையை சமூக நலன், குடும்ப மற்றும் சொத்துக்களுக்கான சட்டம் என்பவற்றில் சட்டரீதியாக உறுதிப்படுத்துவதற்குப் போதுமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்துகிறது: A/HRC/19/58/Rev1 (2012) பந்தி 42

[96] A/HRC/41/CRP.1, para 267

[97] மின்னெசோற்றா நெறிமுறை, பந்தி 32, 42 மற்றும் 43

[98] ICMP, போர்ண்மௌத் நெறிமுறை, பக்கம் 6 மற்றும் பக்கம் 11

[99] A_75_384_AdvanceUneditedVersion, op cit

[100] மின்னெசோற்றா நெறிமுறை, 2016

[101] https://ihl-databases.icrc.org/ar/customary-ihl/v2/rule112

[102] குற்றவியல் நடைமுறைச்சட்டம் இல 15, 1979, பிரிவு 250, குற்றச் செயலில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சியங்களுக்கு பாதுகாப்பு வழங்குதலும் உதவுதலும் சட்டம், 4 –2015, பிரிவு3–7 https://www.ilo.org/dyn/natlex/natlex4.detail?p_lang=en&p_isn=100355&p_country=LKA&p_count=252&p_classification=01&p_classcount=46; மற்றும் CDA, op cit, பிரிவு 14 (1)

குடும்பங்களுக்கான இணைப்பாளர் ஒருவரை நியமிக்க வேண்டும் என மின்னெசோற்றா நெறிமுறை பரிந்துரைக்கிறது.[103] CHRD, FoD, JDS மற்றும் ITJP ஆகியவற்றுக்குத் தெரிந்தவரை சிறிலங்காவின் அகழ்வு நடவடிக்கைகளில் இது ஒருபோதுமே நடைமுறைப்படுத்தப்படவில்லை.

நீதி விசாரணையின்போது தமது நலன்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்காக குடும்பங்கள் சட்டத்தரணி ஒருவரை அமர்த்த முடியும், ஆனால் இந்த சட்டத்தரணிகளுக்குத் தேவையான தகவல்கள் ஒருபோதும் வழங்கப்படவில்லை. உண்மையில், காலநிர்ணயத்திற்கான கார்பன் கதிரியக்கப் பரிசோதனை முடிவுகளில் கண்டெடுக்கப்பட்ட எச்சங்கள் 15 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்று தெரியவந்த பின்னர், 2018 இல் சட்டமா அதிபர் அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்ட அறிவித்தலைத் தொடர்ந்து மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் சட்டத்தரணிகள் குடும்பங்களின் சார்பாக கலந்துகொள்வதை நீதிபதி அனுமதிக்கவில்லை.

மன்னார் நீதிபதியின் தீர்ப்புக்கு எதிராக வவுனியாவிலுள்ள மாகாண உயர்நீதிமன்றில் மறுபரிசீலனைக்காக முறையீடு செய்த பின்னரே, சட்டத்தரணிகள் சமூகமளிப்பதற்கு அனுமதிக்கப் பட்டனர்.[104] பல சந்தர்ப்பங்களில், நீதிபதிகள் நீதிமன்றின் நடவடிக்கைகளிலும் அகழ்வு நடவடிக்கைகளிலும் சட்டத்தரணிகள் கலந்துகொள்வதை மட்டுப்படுத்தியுள்ளனர்.

## நீதிபதியின் உத்தரவுகள் பொதுமக்களைச் சென்றடைவதைத் தடுத்தல் – நீதிபதிகளை இடமாற்றம் செய்தல்

'விசாரணைக்குப் பயன்தரக்கூடிய ஆட்களையும் பொருட்களையும் இனங்காணுவதற்கும், இருக்கும் இடத்தை அறிந்துகொள்வதற்கும் ஊடகங்கள் ஊடாக கோரிக்கை முன்வைக்கலாம்' என மின்னெசோற்றா நெறிமுறை கூறுகிறது. 'மக்கள் விசாரணை நடாத்துபவர்களுக்கு இரகசியமாக அல்லது அநாமதேயமாகத் தகவல்களை வழங்கக்கூடிய வகையில் அவசர தொலைபேசி இணைப்பு ஒன்றை அமைத்தல், மின்னஞ்சல் முகவரி அல்லது சமூகஊடக இணையத்தளங்களை அமைத்தல் போன்றவை இதிலடங்கும்.'[105] பொருத்தமான தகவல்களுக்கு சன்மானம் வழங்குவதைக்கூட பரிசீலிக்கலாம். மாத்தளை மனிதப் புதைகுழியிலிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட 155 பேர்களின் குடும்பத்தவர்களைக் கண்டுபிடிப்பதற்காக, 3 மொழிகளிலும் பத்திரிகைகளில் அறிவித்தல் பிரசுரிக்குமாறு நீதிபதி சதுரிகா சில்வா சி.ஐ.டி இற்கு உத்தரவிட்டார்.

உள்ளூர் காவல்துறையிடமிருந்து இந்த விசாரணைப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட சிறிலங்கா காவல்துறையின் பிரதான விசாரணைப் பிரிவான குற்றவியல் விசாணைத் திணைக்களம் (சி.ஐ.டி) நீதிபதியின் உத்தரவை நிறைவேற்றவில்லை.[106] மாறாக நீதிபதி விரைவாக இடம் மாற்றப்பட்டார். (அத்தியாயம் 2.5)

## குடும்பங்களை அரைகுறையாக நேர்காணல் செய்தல் அல்லது நேர்காணல் மேற்கொள்ளாமை

காணாமல்போனவர்களின் குடும்பங்கள் அகழ்வுப் பணிகளில் மட்டுமன்றி காவல்துறையின் விசாரணைகளிலும் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. உள்ளூர் காவல்துறை மற்றும் சி.ஐ.டி யால் வாக்குமூலம் பெறப்பட்ட அகழ்வு நடவடிக்கைகளின்போது, தமது வாக்குமூலங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படும் என்பது தொடர்பில் காணாமல் போனோரின் உறவினர்களுக்கு எந்தவொரு தகவல்களும் வழங்கப்படவில்லை. உதாரணமாக மாத்தளையில் இதுதான் நடந்தது. மன்னாரில், இறந்தவர்களின் பழைய கல்லறை இருந்ததை உறுதிப்படுத்துவதற்காக உள்ளூர் காவல்துறையும் சி.ஐ.டி அதிகாரிகளும் காணாமல் போனவர்களின் குடும்பங்களிடமிருந்தோ அரச அலுவலர்களிடமிருந்தோ ஏன் அவ்விடத்தைச் சுற்றி வாழ்ந்தவர்களிடமிருந்தோகூட வாக்குமூலத்தைப் பெற்றுக் கொள்ளவுமில்லை. அகழ்வு நடவடிக்கைகளில் பங்கெடுத்துக் கொண்ட பல குடும்பங்கள் மீண்டும் மீண்டும் புலனாய்வு அதிகாரிகளால் அச்சுறுத்தப்பட்டுத் துன்புறுத்தப்பட்டனர்.

## இறப்புக்கு முன்னரான தரவுகள் இல்லாமையால் குறைவடையும் எச்சங்களை இனங்காண்பதற்கான வாய்ப்புகள்

மனிதப்புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டு அகழ்வுகள் மேற்கொள்ளப்படும் இடங்களுக்கு அண்மையில் வாழும் காணாமல் போனோரின் உறவினர்களிடமிருந்து, மரணத்திற்கு முன்னரான தகவல்களை[107] சேகரிப்பதற்கான எந்தவொரு அமைப்போ, நடைமுறையோ அல்லது உண்மையில் நடவடிக்கைகளோ சிறிலங்காவில் இல்லை. கண்டுபிடிக்கப்பட்ட எச்சங்களை அடையாளம் காண்பதே இவ்வாறான தகவல்களைத் திரட்டுவதன் நோக்கமாகும். உதாரணமாக, மன்னாரிலோ அல்லது மாத்தளையிலோ அவ்வாறான மரணத்திற்கு முன்னரான தகவல்கள் எதுவும் உறவினர்களிடமிருந்து சேகரிக்கப் படவில்லை[108]. 'அகழ்ந்தெடுக்கப்படுவது யாராக இருக்கலாம் என்ற எந்தவித தகவலுமின்றி அகழ்வுகளை மேற்கொள்வது அவர்களை இனம் காண்பதற்கான வாய்ப்புக்களை அருகச்செய்து விடுகிறது... தேடப்படும் பாதிக்கப்பட்டவர்கள் யார் என்பது பற்றிய தெளிவான தகவல் இல்லை என்றால், அடையாளம் காண்பது

[103] மின்னெசோற்றா நெறிமுறை, பந்தி 52 மற்றும் 67

[104] 22 பெப்ரவரி 2022 அன்று வழக்கு இல HCV/REV/327/20 இல் வவுனியா நீதிமன்றின் உத்தரவு

[105] மின்னசோட்ட நெறிமுறை, பந்தி 75

[106] Mytili Bala, 'Transitional Justice & the Right to Know: Investigating Sri Lanka's Mass Graves', in CPA, Transitional Justice, 2017, p308, https://www.cpalanka.org/wp-content/uploads/2020/11/TJ-MARCH-2017.pdf

[107] மின்னசோட்ட நெறிமுறை, பந்தி 67, 74, 85 மற்றும் 126 மற்றும் அட்டவணை 1

[108] மனித உரிமைக் காப்பாளர்களுடனான ITJP இன் உரையாடல் 26 ஜனவரி 2023

நம்பமுடியாத கடினமான பணியாக மாறும்' என பேருவின் தடயவியல் ஆய்வுக் குழுவின் தலைவரான யோசே பப்லோ பறேபார் கூறுகிறார்.[109]

யூன் 1999 இல் இடம்பெற்ற செம்மணி அகழ்வுப் பணிகளின்போது, காணாமல் போனவர்களின் உறவினர்கள் அகழ்வுப்பணிகளின் ஆரம்பத்தில் உடனிருந்தார்கள். படைவீரர் சோமரத்தின ராஜபக்ச செம்மணி மனிதப்புதைகுழி விவகாரத்தை குற்றவியல் நீதிமன்றில் தனது வாக்குமூலத்தில் தெரிவித்தபோதும் அவர்கள் அங்கே இருந்தார்கள்.[110] பின்னர் அகழ்வுகள் நடைபெற்றபோது அவர்கள் அருகில் வருவதற்கு அனுமதிக்கப்படவில்லை. அகழ்வு நடவடிக்கைகள் முடிவடைந்ததும், புதைக்கப்பட்டிருந்தவர்களின் உடல்களைப் பார்ப்பதற்கும் ஆடை மற்றும் கலைப்பொருட்களையும் அடையாளம் காண்பதற்கும் அவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது.[111] ஆடைகளை அடிப்படையாகக்கொண்டே அவர்களுள் இருவர் 1996 ஓகஸ்ட் 19 அன்று இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமல்போன வாகனத் திருத்துமிடப் பணியாளர்கள் என அவர்களது குடும்பத்தினரால் அடையாளம் காணப்பட்டனர். இவர்களில் ஒருவரது கண்கள் அவர் அணிந்திருந்த மேலாடையைக் கொண்டே கட்டப்பட்டிருந்து; மற்றையவருடைய கைகள் அவர் அணிந்திருந்த உள் மேலாடையைப் பயன்படுத்திப் பின்பக்கமாகக் கட்டப்பட்டிருந்தது.[112] அண்மைய அகழ்வுகளின்போது ஆடைகள் மற்றும் ஏனைய உடைமைகள் போன்ற தடயவியல் சாராத ஆதாரங்களைக் கொண்டு இறந்தவர்களை அடையாளம் காண்பதற்கு அவர்களது உறவினர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டதாக CHRD, FoD , JDS மற்றும் ITJP ஆகிய அமைப்புக்கள் அறியவில்லை.

## உளவியல் மற்றும் சமூக ஆதரவின்மை

அகழ்ந்தெடுக்கப்பட்ட உடலங்களுள் தமது உறவினர்கள் இருக்கக்கூடிய குடும்பங்களும் தேவையான உளவியல் மற்றும் சமூக ஆதரவின்றி கைவிடப்பட்டனர்.[113] உளவியல் மற்றும் சமூக ஆதரவை வழங்குவதற்கான ஆணை காணாமல் போன ஆட்களுக்கான அலுவலகத்திற்கு இருப்பதுடன்,[114] அதன் சபையானது டிசம்பர் 2020 இல் ஒரு உத்தியைப் பின்பற்றியது. எவ்வாறிருந்தும், அதன் 2020 ஆண்டிற்கான ஆண்டறிக்கை, கோவிட் பெருந்தொற்று காரணமாக விதிக்கப்பட்ட பொது சுகாதார கட்டுப்பாடுகள் மற்றும் பாதுகாப்பு காரணங்களால் இந்த நடவடிக்கை பெரிதும் தடைப்பட்டதாகக் கூறுகிறது.[115] 2021 ஆண்டறிக்கையின்படி, இந்தத்திட்டம் குடும்ப உதவி அலுவலர்கள், தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களில் பணிக்கமர்த்தப்பட்டதன் மூலமும் குடும்பங்களுடனான கலந்தாலோசனை மூலமும் நடைமுறைப்படுத்தப்பட்டது.[116]

## சடலங்களை அடையாளங்கண்டு, உறவினர்களிடம் ஒப்படைக்காமை

இன்றுவரை, 2010 இல் யாழ் மாவட்டத்தின் மிருசுவிலில் அகழ்ந்தெடுக்கப்பட்ட உடலங்களைத் தவிர, அகழ்ந்தெடுக்கப்பட்ட எந்தவொரு உடலும் அவர்களின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டதாக CHRD, FoD, JDS மற்றும் ITJP அறியவில்லை. செம்மணியில் ஆடைகளை வைத்து அடையாளம் காணப்பட்ட இருவரின் உடலங்கள்கூட அவர்களின் உறவினர்களிடம் கையளிக்கப்படவில்லை. பொல்கொட வாவியில் கண்டு பிடிக்கப்பட்டு முக மீளஉருவாக்கல் மூலம் அடையாளங் காணப்பட்டவர்களின் உடலங்களும் கையளிக்கப்படவில்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயங்களுக்கு அரசு ஒரு பதில் கூறவேண்டும் எனவும் குறிப்பாக இறந்தவர்களின் உடலங்கள் அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும் நல்லிணக்கப் பொறிமுறைகள் குறித்த ஆலோசனைப்பணிக்குழு மீண்டும் மீண்டும் வலியுறுத்திவரும் நிலையிலேயே இது நடைபெற்றுள்ளது.[117]

---

109 யோசே பப்லோ பறேபார் மற்றும் றெபேக்கா பிளக்வெல், 'ஏன் அவர்கள்? காணாமல்போதல், தடயவியல் மற்றும் நினைவுகள்; தொல்பொருள் ஆய்வு நடவடிக்கைகள், 2014 38:1, பக்கம் 28, மாற்றுக் கொள்கைகளுக்கான 2017 இன் இடைமாற்று நீதி, 2017, https://www.cpalanka.org/wp-content/uploads/2020/11/TJ-MARCH-2017.pdf

110 கிசாலி பின்ரோ–ஜெயவர்த்தன, சிறிலங்காவில் போருக்குப் பின்னரான நீதி, ஜனவரி 2010, பக்கம் 52–54, https://www.icj.org/wp-content/uploads/2010/01/srilanka_impunity_18_01_20102.pdf

111 சர்வதேச மன்னிப்புச் சபை, 22 யூன் 1999, op cit

112 சர்வதேச மன்னிப்புச் சபை, 22 யூன் 1999, op cit

113 மின்னெசோற்றா நெறிமுறை, பந்தி 36, 218 மற்றும் 219

114 காணாமல் போன ஆட்களுக்கான அலுவலகத்தின் சட்டம், பிரிவு 13(1)(k)(iii), 10(c) http://www.omp.gov.lk/storage/app/uploads/public/604/847/009/604847009edfb770550416.pdf

115 காணாமல் போன ஆட்களுக்கான அலுவலகத்தின் ஆண்டறிக்கை 2020, பந்தி 6.27, http://www.omp.gov.lk/storage/app/uploads/public/604/847/009/604847009edfb770550416.pdf

116 காணாமல் போன ஆட்களுக்கான அலுவலகத்தின் ஆண்டறிக்கை 2021, பக்கம் 80

117 பரணகம ஆணைக்குழு அறிக்கை, பக்கம்143, 105, 108; LLRC இன் அறிக்கை, பக்கம் 163, 164, 166,172, 340; அகில இலங்கை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை, பக்கம்16 மற்றும் 82 மேற்கு, தெற்கு மற்றும் சப்ரகமுவ இறுதி அறிக்கை அத்தியாயம் 1, பக்கம் 177; CTF இன் இறுதி அறிக்கை, பக்கம் 200

# 2.2 பொருத்தமான சட்ட, கொள்கை மற்றும் செயற்பாட்டுக்கான கட்டமைப்பில் தெளிவின்மை

மேலே குறிப்பிட்டவாறு, குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் அல்லது குற்றவியல் விசாரணையின் ஒரு பகுதியாகவே தற்போது அகழ்வு நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகிறது. இன்றுவரை அநேகமான அகழ்வு நடவடிக்கைகள் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 138 மற்றும் பிரிவு 416 இன் கீழேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பாக குற்றஞ் சாட்டப்பட்டவர் இல்லாத அல்லது யாரென்று தெரியாத குற்ற வழக்குகளிலேயே இந்நடைமுறை உள்ளது. குற்றவியல் நடைமுறைச் சட்டம் மற்றும் காணாமல்போன ஆட்களுக்கான அலுவலக சட்டம் மற்றும் பாதிக்கப்பட்டவர்களையும் சாட்சிகளையும் பாதுகாப்பது மற்றும் அவர்களுக்கு உதவுவதற்கான சட்டம் போன்ற சட்டங்கள் இருந்தபோதிலும், அகழ்வு நடவடிக்கைகளுக்கு முன்னர், அகழ்வு நடவடிக்கை நடைபெறும்போது மற்றும் அது நடைபெற்று முடிந்தபின்னர் ஒவ்வொரு அரச திணைக்களங்களுக்கும் உள்ள பொறுப்புக்கள் தொடர்பில் ஒட்டுமொத்த தெளிவின்மை காணப்படுகிறது. இது ஒன்றிணைந்து செயற்பட முடியாத நிலைமைக்கும் நடவடிக்கைகளில் தாமதம் ஏற்படுவதற்கும் இட்டுச் செல்கிறது. அகழ்ந்தெடுக்கப்பட்ட எச்சங்களை பாதுகாத்து வைப்பதில் சீரற்ற நடைமுறைகள் பின்பற்றப்பட்டுவருகின்றன. சிலவேளைகளில் வழக்கு நடைபெற்ற நீதிமன்றத்திலும், சிலவேளைகளில் அரச மருத்துவர் மற்றும் அரச மருத்துவ திணைக்களம் அல்லது ஆய்வுகூடத்திலும் அல்லது காவல்நிலையத்திலும் அவை வைத்திருக்கப்படுகிறது. உரிமைகோருபவர்கள் யாருமில்லாத மனித உடல் எச்சங்களை அடையாளம் காண உதவும் எந்தவொரு நியம நடைமுறையோ அல்லது தேசிய கொள்கையோ அல்லது பொதுவான தகவல்தளமோ சிறிலங்காவிடம் இல்லை. [118] இது அகழ்வுக் கொள்கையில் ஒவ்வொரு திணைக்களத்திற்கும் பொறுப்புக்களைப் பகிர்ந்தளித்த தென்னாபிரிக்கா போன்ற ஏனைய நாடுகளுடன் முரண்டுகிறது.[119]

2016 இல் வெளிவந்த நல்லிணக்கப் பொறிமுறைகள் குறித்த ஆலோசனைப் பணிக்குழுவின் இடைக்கால அறிக்கையானது, 'தன்னிச்சையான நடைமுறைகள், சம்பந்தப்பட்டவர்களிடையே ஒருங்கிணைப்பின்மை மற்றும் சட்ட மருத்துவ அதிகாரியின் கட்டாயமான பங்களிப்பின்மை' போன்றவற்றை சந்தேகிக்கப்படும் மனிதப்புதைகுழிகளுள்ள இடங்கள் தொடர்பான விசாரணையின் பின்னடைவுக்குரிய காரணங்களாகச் சுட்டிக்காட்டுகிறது.[120] அடையாளம் காணப்பட்ட மனித எச்சங்களையும் அவற்றுடன் கண்டெடுக்கப்பட்ட பொருட்களையும் உறவினர்களிடம் மீள ஒப்படைப்பதில் ஒழுங்குபடுத்தப்பட்ட சேவைமுறை அறிமுகம் செய்யப்பட வேண்டும் என அது பரிந்துரைக்கிறது.[121] அத்துடன் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் சந்தேகிக்கப்படும் பெருமளவிலான மனிதப்புதைகுழி தொடர்பில் புதிய சட்டம் ஒன்று இயற்றப்பட வேண்டும் எனவும் அது பரிந்துரைக்கிறது. குற்றங்களாலும் இயற்கை அனர்த்தங்களினாலும் ஏற்படும் மனிதப்புதைகுழிகள் தொடர்பான விசாரணைகளை நடாத்துவதற்குத் தேவையான நியமங்கள் மற்றும் அதிகாரங்களை விளக்கும் விசாரணைச்சட்ட வரைவு ஒன்று பல ஆண்டுகளாக நீதி அமைச்சிடம் முன்வைக்கப்பட்ட நிலையிலுள்ளது. [122]

மனித எச்சங்களை அடையாளம் காணுவது மற்றும் உறனவினர்களுடன் தொடர்புகொண்டு அவற்றைக் கையளிப்பது உள்ளிட்ட விசாரணைகளின் பல அம்சங்களில் நிலையான செயல்பாட்டு நடைமுறைகளை இந்த வரைபு முன்மொழிகிறது. [123]

2015 ஆம் ஆண்டளவில் நீதியமைச்சினால் சந்தேகத்திற்கிடமான மரணங்கள் தொடர்பாகவுள்ள செயற்பாடுகள், நடைமுறைகள் மற்றும் சட்டரீதியான கட்டமைப்புக்களைப் பரிசீலனை செய்து திருத்தங்களுக்கான பரிந்துரைகளை முன்வைப்பதற்காக 10 பேர்கொண்ட ஆலோசனைக்குழு நியமிக்கப்பட்டது. இது மூத்த சட்ட மருத்துவ அதிகாரிகள், தடயவியல் நிபுணர்கள் மற்றும் ஏனைய அமைச்சு, சட்டமா அதிபர் அலுவலகத்தின் பிரதிநிதிகள் ஆகியோரை உள்ளடக்கியிருந்தது. [124]

---

[118] https://srilankabrief.org/sri-lanka-hundreds-of-unidentified-bodies-dumped-in-graves-chief-jmo-laments-violation-of-human-dignity/

[119] https://cisp.cachefly.net/assets/articles/attachments/18647_not1539.pdf. போர்ண்மௌத் நெறிமுறையானது பல நெறிமுறைகளையும் பல அதிகாரபூர்வமான வளங்களையும் கொண்டுள்ளது: https://issuu.com/bournemouthuniversity/docs/the_bournemouth_protocol_on_mass_grave_protection_?fr=sMjc3OTI0MjAyNzM

[120] நல்லிணக்கப்பொறிமுறைகளுக்கான ஆலோசனைப் பணிக்குழு அறிக்கை அத்தியாயம் 1, 17 Nov 2016, பக்கம்73

[121] நல்லிணக்கப்பொறிமுறைகளுக்கான ஆலோசனைப் பணிக்குழு அறிக்கை, பக்கம் 27, 62, 221

[122] https://srilankabrief.org/sri-lanka-hundreds-of-unidentified-bodies-dumped-in-graves-chief-jmo-laments-violation-of-human-dignity/ and https://www.sundaytimes.lk/151004/news/deaths-in-state-custody-committee-studying-new-scheme-for-conduct-of-inquests-166732.html

[123] https://groundviews.org/2022/03/15/uncovering-the-secrets-of-sri-lankas-gravesites/

[124] https://www.sundaytimes.lk/151004/news/deaths-in-state-custody-committee-studying-new-scheme-for-conduct-of-inquests-166732.html

காணாமல் போன ஆட்களுக்கான அலுவலகமும் இந்த நடவடிக்கையில் தொடர்புபட்டிருந்தது. [125] 2018 இல் இது தொடர்பாக நீதி மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சுடன் கலந்துரையாடல்களை ஆரம்பித்தது. [126] இன்றுவரை, அந்த வரைபானது வெளிப்படையாக ஏனையவர்களுடன் பகிர்ந்து கொள்ளப்படவோ, அது தொடர்பான விவாதங்கள் முன்னெடுக்கப்படவோ இல்லை. CHRD, FoD, JDS மற்றும் ITJP இற்குக்கூட அதன் பிரதிகளைப் பெற்றுக்கொள்ளமுடியவில்லை. 2023 ஏப்ரலில் தகவல் அறியும் உரிமை கோரிக்கையூடாக FoD கோரியும் அது கிடைக்கவில்லை. காணாமல்போன ஆட்களுக்கான அலுவலகத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில், FoD இன் வினாக்களுக்குப் பதில் வழங்கப்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தாலும், மனிதப் புதைகுழிகள் தொடர்பாக உருவாக்கப்பட்ட செயற்பாட்டு நடைமுறைகள்பற்றி எந்த தகவலும் அதில் குறிப்பிடப்படவில்லை. காணாமல்போன ஆட்களின் அலுவலகத்தினால் அனுப்பப்பட்ட பதிலுக்கு மேன்முறையீடாக, 24 மே 2023 இல் FoD இந்த தகவலை அவசரமாகக் கோரியுள்ளது.

இன்று வரை அகழ்வு நடவடிக்கைகளில் காணப்பட்ட தவறுகளைக் கருத்தில்கொண்டு, எந்தவொரு நியம செயற்பாட்டு நடைமுறைகளிலும் பின்வரும் முக்கியமான விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டும்:

* புதிய தகவல்கள் வெளிவரும் ஒவ்வொரு நிலையிலும், அகழ்வு நடவடிக்கையின் போதும் மற்றும் எச்சங்களைப் பகுப்பாய்வு செய்யும்போதும் நீதிபதி, உள்ளூர் காவல்துறை, சி.ஐ.டி, சட்டமா அதிபர் அலுவலகம் மற்றும் (உள்ளூர் மற்றும் மூத்த சட்ட மருத்துவ அதிகாரிகள், தடயவியல் அகழ்வு வல்லுனர்கள், தடயவியல் ஆய்வு நிபுணர்கள், எலும்பியல் நிபுணர்கள் மற்றும் ஏனைய வல்லுநர்கள் உள்ளிட்ட) தனிப்பட்ட தடயவியல் நிபுணர்கள் ஆகியோருக்கான பொறுப்புக்கள் தனித்தனியாக ஒதுக்கப்பட வேண்டும். மன்னார் நீதிபதியின் கட்டளைகளுக்கு மாறாக, இன்றுவரை சத்தோச புதைகுழி காணப்படும் இடத்திற்கு தொல்பொருள் ஆய்வுத்திணக்களம் அனுப்பிவைக்கப்பட வில்லை.
* உள்ளூர் காவல்துறை மற்றும் சி.ஐ.டி. அதிகாரிகளின் குறிப்பான பங்களிப்புக்கான தேவையைத் தெளிவுபடுத்துதல். 1994 இல் சூரியகந்தை வழக்கில் ஆரம்பத்தில் உள்ளூர் காவல்துறையே பொறுப்பாக இருந்தனர்; அரசாங்கம் பின்னர் புதைகுழி தொடர்பாக விசாரணை செய்வதற்கு சி.ஐ.டி யை நியமித்தது. அதனைத் தொடர்ந்து, அகழ்வு நடைபெற்ற பெரும்பாலான காலப்பகுதியில் சி.ஐ.டி. அந்த இடத்தில் பிரசன்னமாகியிருந்தது. உதாரணமாக, 2018 இல் நடைபெற்ற மன்னார் அகழ்வுப் பணிகளின்போதும் அதே நடைபெற்றது. ஆரம்பகட்டத்தில் நீதிபதியின் உத்தரவுக்கமைய உள்ளூர் காவல்துறையினரும் குற்றத்தடயவியல் அதிகாரிகளுமே இருந்தார்கள். அவர்கள் சமர்ப்பித்த சான்றுகளின் அடிப்படையில் (B அறிக்கை), குற்றத் தடயவியல் விசாரணைகளை முன்னெடுக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். இந்த இடத்தில்தான் சி.ஐ.டி யின் தலையீடு ஆரம்பமாகியது. உள்ளூர் காவல்துறையின் ஈடுபாடு மட்டுப்படுத்தப்பட்டது, காவல்துறை தலைமை அலுவலகத்திலிருந்து சி.ஐ.டி. இற்கான கட்டளைகள் வழங்கப்பட்டன.[127]
* எந்தப் பாதிப்பும் ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக, சான்றுகள் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின்கீழ் சான்றுகளைப் பாதுகாப்பாக மூடிவைப்பதற்கான சரியான பொறுப்புக்கள் மற்றும் செயல்முறையைத் தெளிவுபடுத்துதல்.
* இவை நடைபெறும் காலப்பகுதியில், உறவினர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, கண்டுபிடிக்கப்பட்ட எச்சங்களைப் பதப்படுத்துவதற்கும் வெளிநாடுகளில் ஆய்வு செய்வதற்குத் தயார்ப்படுத்துவதற்கும் தேவையான வளங்களை ஒதுக்குதல். (மாத்தளையில் நீதிமன்றின் உத்தரவை 6 வாரங்களுக்கு மேலாக சி.ஐ.டி. உதாசீனப்படுத்தியது.)
* அகழ்வுப் பணிகளை உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் அந்த இடங்களின் பாதுகாப்புக்கு குந்தகமின்றிப் பார்வையிடக் கூடியதாக இருப்பதை உறுதிப்படுத்துதல்

## அடையாளம் காணப்படாத உயிருடன் இருக்கும் சாட்சிகள்

மனிதப்புதைகுழிகளுக்குச் சாட்சிகளாக இருக்கக்கூடியவர்கள் தொடர்பாக விசாரணைகளை நடாத்துவதில் அப்பட்டமான பற்றாக்குறை தெரிகிறது. தாமாக முன்வந்து சாட்சிசொல்ல விரும்புவர்கள்கூட தமது பாதுகாப்புத் தொடர்பில் அச்சம் வெளியிட்டுள்ளனர். 2015 ஆம் ஆண்டு குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டத்தில் ரகசிய அறிக்கைகள் பெற்றுக்கொள்ளப்படுவதை அனுமதிக்கும் ஏற்பாடு உள்ளது. [128] எவ்வாறிருந்தும், இந்தச் சட்டம் முழுமையாக இல்லாதிருப்பதாக விமர்சிக்கப்படுகிறது. 2015 இல் இயற்றப்பட்ட இச்சட்டத்தை மீள்பரிசீலனை செய்ததாகவும் அதனை மாற்றீடு செய்வதற்குத் தான் தயாராக இருப்பதாகவும் அரசாங்கம் 2021 இல் ஐ.நா.வுக்குச் சமர்ப்பித்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தாலும், இன்றுவரை அவ்வாறான நடவடிக்கைகள் எதுவும்

[125] காணாமல் போன ஆட்களுக்கான அலுவலகத்தின் அறிக்கை 2018, பந்தி 2.19–2.20 மற்றும் https://srilankabrief.org/omp-made-progress-amidst-lack-of-cooperation-from-state-actors-continuous-efforts-to-deny-the-rights-of-families-of-the-disappeared-saliya-pieris/

[126] ibid

[127] உள்ளூர் மனித உரிமை சட்டவாளருடனான நேர்காணல், 29 ஏப்ரல் 2023

[128] குற்றச் செயலில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கு பாதுகாப்பு வழங்குதலும் உதவுதலும் சட்டம், 2015, பகுதி 12(a) & 12(d)

மேற்கொள்ளப்படவில்லை.[129] 2015 இன் சட்டத்தின்கீழ், 2016 இல் நிறுவப்பட்ட குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சியங்களைப் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபையானது, நீதிபதிகள் மற்றும் காவல்துறையினர் மத்தியில் விழிப்புணர்வு மற்றும் பயிற்சி வகுப்புக்களை நடாத்திவருகிறபோதும்[130], 2019 ஆம் ஆண்டிற்குப் பின்னர் எந்தவொரு ஆண்டறிக்கையையும் அது வெளியிடவில்லை.[131]

## வெளிப்படைத்தன்மையின்மை

பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் மற்றும் பொதுமக்களின் பார்வைக்குக் கிடைக்கக்கூடிய வகையில், விசாரணைகள் வெளிப்படைத் தன்மையானவையாக இருக்கவேண்டும் என மின்னெசோற்றா நெறிமுறை வலியுறுத்துகிறது.[132] பல சந்தர்ப்பங்களில், சிறிலங்காவின் நீதிபதிகள் அகழ்வு நடவடிக்கைகளின்போது ஊடகங்களுக்குத் தகவல்கள் கிடைப்பதை மட்டுப்படுத்தியுள்ளனர். உதாரணமாக, 2018 இல் மன்னார் நீதிபதி அகழ்வு நடவடிக்கைகள் நடைபெறும் இடத்திற்கு ஊடகங்கள் வருவதையோ, புகைப்படம் மற்றும் காணொளி எடுப்பதையோ தடைசெய்திருந்தார். இது பின்னர் ஊடகவியலாளர்கள் நீதிமன்றில் முறையிட்டு வெற்றியடைந்த பின்னர் மாற்றமடைந்தது. மன்னாருக்கு அடுத்துவந்த நீதிபதியும் தடயவியல் வல்லுநர்களும் அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ஏனையவர்களும் ஊடகங்களுடன் கதைப்பதற்குத் தடைவிதித்திருந்தார். இந்தத் தடை பின்னர் நீக்கப்பட்டது.[133]

[129] https://spcommreports.ohchr.org/TMResultsBase/DownLoadFile?gId=36580

[130] https://napvcw.gov.lk/news

[131] https://napvcw.gov.lk/img/gallery/publications/Annual_Report_2019_English.pdf

[132] மின்னெசோற்றா நெறிமுறை, பந்தி 32–33

[133] https://www.sundayobserver.lk/2018/09/16/news/mannar-mass-grave-gag-order-lifted-forensic-experts?page=2

# 2.3 அரசியல் தலையீடுகள்

சந்தேகத்திற்கு இடமுள்ள மரணங்களில் 'உடனடியான, வினைத்திறனுள்ள மற்றும் முழுமையான, சுதந்திரமான, பக்கச்சார்பற்ற, வெளிப்படையான' [134] விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியம் என சர்வதேச சட்டங்கள் வலியுறுத்துகிறது. இந்த அம்சங்களை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பதை மின்னெசோற்றா நெறிமுறையில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. [135] விசாரணைகளுக்குத் தேவையான மிக முக்கியமான விடயங்களுள் ஒன்றாக 'அதிகாரத்திலுள்ள நிறுவனப் படிநிலைகள் மற்றும் கட்டளைச் படிநிலைகளின் தேவையற்ற செல்வாக்கின்றி சுதந்திரமாக இயங்குவது' குறிப்பிடப்படுகிறது.[136]

**அகழ்வு நடவடிக்கைகளில் அரசியல்வாதிகளின் தலையீடே இதுவரை உண்மையைக் கண்டறிவதிலும் காணாமல்போன ஆட்களுக்கு நீதி வழங்குவதிலும் ஏற்பட்ட தோல்விகளுக்கான மிகமுக்கிய காரணியாக விளங்குகிறது.**

மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்ட வேளைகளில் தமது அரசியல் நலன்களுக்காக அரசியல்வாதிகள் தலையீடு செய்வது 1994 இல் இரத்தினபுரி மாவட்டத்தின் சூரியகந்தையில் நடைபெற்ற அகழ்வுகளில் தொடங்கி (பின்னிணைப்பை பார்க்கவும்) தெளிவாகத் தெரிகிறது. சூரியகந்தவில், மனித உடல்கள் காணப்பட்ட இடத்திற்கு விரைந்துசென்ற, அப்போது புதிதாகத் தெரிவுசெய்யப்பட்டிருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் ஏனைய அரசியல்வாதிகளும் அகழ்வுப் பணிகளை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டதையடுத்து, வேகமாக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளால் சான்றுகள் அழிந்துபோயின.[137] இது தொடர்பில் சாட்சி ஒருவர் பின்வருமாறு தெரிவித்தார் :

**"இரத்தினபுரி (மாவட்டம்) ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுவதிலும் காணாமல்போதல் இடம்பெறுவதிலும் பிரபல்யமானதாகிவிட்டது. உடல்கள் இங்கேயும் தெற்கு மாகாணத்திலும் புதைத்து மறைக்கப்பட்டன என்பது தெளிவாகத் தெரியவந்துள்ளது. இராணுவம், காவல்துறை மற்றும் ஆயுதக் குழுக்கள் நடமாடியவண்ணமுள்ளனர். சூரியகந்தவில், மக்களே அகழ்வுப்பணிகளை ஆரம்பித்து கிழிந்த ஆடைகளையும் கண்டனர். சந்திரிகா குமாரதுங்கவும் அந்நேரத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்த பவித்ர வன்னியராச்சியும் இடத்திற்கு வருகைதந்தனர். அரசியல் நிகழ்ச்சி நிரல்களிலும் அரசியல் எதிரிகளைத் தாக்கும் கருவியாகவும் சூரியகந்த பயன்படுத்தப்பட்டது."** [138]

மேலும் பொதுவாக, ஒரு அரசியல்வாதி அல்லது அவருக்கு நெருக்கமானவர் குற்றச்செயலுடன் தொடர்புபட்டிருந்தால், அகழ்வு நடவடிக்கையைத் தடுப்பதற்கான அரசியல் தலையீடுகள் இருந்து வந்துள்ளன. அகழ்வு நடவடிக்கையின் எல்லா நிலைகளிலும் இது ஒரு முக்கியமான காரணியாக இருந்து வந்துள்ளது. 2014 இல் மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி வழக்குத் தொடர்பான விசாரணைகள், சட்ட மருத்துவ அதிகாரி போன்ற தடயவியல் வல்லுநர்கள் மற்றும் கொழும்பை ஆதாரமாகக் கொண்ட அரச ஆய்வாளர்கள் வருகை தராததால் தாமதங்கள் ஏற்பட்டாலும், ஆரம்பத்தில் விடுதலைப்புலிகளால் பாதிக்கப்பட்டவர்கள் என்ற எடுகோளில் முடுக்கிவிடப்பட்டது. பின்னர் விசாரணைகள் நிறுத்தப்பட்டன; இந்த மனிதப்புதைகுழிகள் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்தால், 2004ஆம் ஆண்டு யூலையில் தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து பிரிந்து, சிறிலங்கா பாதுகாப்புப் படைகளுடன் இணைந்து செயற்பட்டு, 2018 இல் மகிந்த ராஜபச்சவின் அரசாங்கத்தில் உத்தியோகபூர்வமாக இணைந்து கொண்ட, விநாயகமூர்த்தி முரளிதரன் (கேணல் கருணா) [139] இந்த சம்பவங்களில் தொடர்புபட்டிருப்பது வெளிவந்துவிடலாம் என்பதை உணர்ந்து கொண்டதாலேயே அரசாங்கம் இந்த விசாரணைகளை நிறுத்தியதாகப் பலரும் நம்புகின்றனர். முறைப்பாடு செய்யபட்டு பத்து ஆண்டுகளுக்கு மேல் கடந்து விட்டபோதிலும், எந்தவொரு அகழ்வு நடவடிக்கையுமே மேற்கொள்ளப்படவில்லை.

2013இல் மாத்தளையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளின்போது, அப்போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவிருந்த கோத்தபாய ராஜபக்ச (இவர் 1989 யூலை — ஜனவரி 1990[140] வரை மாத்தளை மாவட்டத்திற்கான இராணுவ ஒருங்கிணைப்பு அதிகாரியாகவிருந்து பின்னர் சிறிலங்காவின் ஜனாதிபதியாகியவர்) மாத்தளையுள்ளிட்ட மத்திய மாகாணத்தின் அனைத்து காவல்நிலையங்களிலும் உள்ள 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காவல்துறை பதிவுகளையும் அறிக்கைத் தகவல்களையும் அழிக்குமாறு உத்தரவிட்டதாகக்

[134] மனித உரிமைகள் ஆணைக்குழு, கருத்து இல 31, பந்தி 15

[135] மின்னெசோற்றா நெறிமுறை, பந்தி 22–40

[136] மின்னெசோற்றா நெறிமுறை, பந்தி 28

[137] https://www.sundayobserver.lk/2018/11/04/news-features/sooriyakanda-gruesome-and-forlorn-grave

[138] சூரியகந்தை அகழ்வுகளின் நேரடிச் சாட்சியத்துடனான நேர்காணல், 30 மார்ச் 2023

[139] லியனல் பொபேஜ், 'எல்லா இடங்களிலும் புதைகுழிகள், ஆனால் கொலையாளிகள் எங்கே?' 30 செப் 2017 https://www.researchgate.net/publication/323772087_Mass_graves_everywhere_but_where_are_the_killers

[140] ITJP, 'கோத்தபாய ராஜபக்ச: 1989 பாரிய அட்டூழியங்களில் சிறிலங்கா ஜனாதிபதியின் பங்கு' மே 2022 https://itjpsl.com/reports/gotabaya-rajapaksa-the-sri-lankan-presidents-role-in-1989-mass-atrocities

கூறப்படுகிறது. [141] இந்தத் தகவலை அதிகாரிகள் எவரும் ஒருபோதும் மறுக்கவில்லை. அனைத்து நபர்களையும் வலிந்து காணாமல் ஆக்கப்படுவதில் இருந்து பாதுகாப்பதற்கான சர்வதேச உடன்பாட்டிற்கமைய, சிறிலங்கா அரசானது அவருக்கு எதிராகவும், மூத்த காவல் கண்காணிப்பாளர் R D S மெடவத்த மற்றும் மத்திய மாகாண பிரதி காவல்துறைமா அதிபர் M R B அம்பன்வல உள்ளிட்ட மூத்த காவல்துறை அதிகாரிகளுக்கு எதிராகவும் விசாரணை நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்தமைக்காக நடவடிக்கை எடுக்கவேண்டும். [142]

2023 ஜனவரியில், வலிந்து காணாமல் போன ஆட்களுக்கான ஐ.நா.வின் செயற்குழு உள்ளிட்ட நான்கு ஐ.நா.வின் நடைமுறை அமைப்புக்கள் மாத்தளை மாவட்டத்தில் இடம்பெற்ற சம்பவத்திற்குப் பொறுப்புடைய அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கத் தவறியமை குறித்து சிறிலங்கா அரசாங்கத்திற்கு கடிதம் எழுதியிருந்தன. [143] அகழ்வு நடவடிக்கைகள் தொடர்பான விசாரணைகளில் வேறு பல வழிகளிலும் அரசியல்வாதிகள் தலையிட்டுள்ளனர். உதாரணமாக, 20 யூன் 2013 இல், மாத்தளையில் வலிந்து காணாமல்போன, பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தடயவியல் ஆய்வுகளை மேற்கொண்டு எச்சங்களிலிருந்து எடுக்கப்பட்ட மரபணுக்கள் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் மரபணுக்களுடன் ஒத்துப்போகிறதா என்பதை பரிசோதிப்பதற்கு உத்தரவிடுமாறு நீதிபதியிடம் மனுக்கொடுத்ததன் பின்னர், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மாத்தளை மனிதப்புதைகுழிகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கான விசாரணைக்குழு ஒன்றை நியமித்தார்.

ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி SI இமாம் அவர்களால் தலைமை தாங்கப்பட்ட இந்தக் குழுவானது முன்னாள் பாராளுமன்ற பொதுச் செயலர் தம்மிக கிதுல்கொட மற்றும் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி புந்துல அத்தபத்து ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்டிருந்தது.[144] எச்சங்களை இனங்காண்பதற்கு, கண்டுபிடிக்கப்பட்ட எச்சங்கள் எந்தக் காலத்துக்கு உரியவை, எப்போது, எவ்வாறு அவர்கள் கொல்லப்பட்டார்கள் மற்றும் அவர்கள் சட்டவிரோதமான நடவடிக்கையில் கொல்லப்பட்டார்களா என்பதைக் கண்டுபிடிக்கும் பணி இந்தக்குழுவுக்கு வழங்கப்பட்டது. மேலும், குற்றத்திற்குப் பொறுப்பானவர்களை இனங்காண்பதற்கும் சட்டரீதியாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், மீண்டும் அதுபோன்ற சம்பவங்கள் இடம்பெறாமல் பார்த்துக் கொள்வதற்கும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மானியங்கள் வழங்குவதற்கும் பரிந்துரைகளை மேற்கொள்வதற்கும் அக்குழுவுக்கு ஆணை வழங்கப்பட்டிருந்தது.[145] மூன்றுபேரைக் கொண்ட ஆணைக்குழுவானது மாத்தளை நீதிமன்றம் மற்றும் காவல்துறை விசாரணை நடாத்திக்கொண்டிருந்த அதே நேரத்தில் தன்னுடைய விசாரணைகளையும் நடாத்தவிருந்தது.

தடயவியல் நிபுணர்களின் வேண்டுகோளுக்கமைய புதைகுழிகளிலிருந்த எச்சங்களின் மாதிரிகள் காலநிர்ணயத்திற்கான கார்பன் கதிரியக்கப் பரிசோதனைக்காக புளோரிடாவிலுள்ள பீட்டா ஆய்வுகூடத்திற்கு அனுப்பப்படுவதற்கு நீதிபதி உத்தரவிட்டார் (சிறிலங்காவில் முதன்முறையாக இது மேற்கொள்ளப்பட்டது). இப் பரிசோதனை முடிவுகளை அடிப்படையாகக்கொண்டு, இறந்தவர்கள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுக் கொலைசெய்யப்பட்டிருந்தாலும் எச்சங்கள் 1950 ஆம் ஆண்டுக்கு முற்பட்டவை என அந்தக் குழு தீர்மானம் வெளியிட்டது. மாத்தளை அகழ்வுகளில் தடயவியல் தொல்பொருள் நிபுணராகக் கடமையாற்றிய ராஜ் சோமதேவ எச்சங்களுடன் கண்டெடுக்கப்பட்ட உடமைகளைக்கொண்டு அவை 1980 களின் பிற்பகுதியைச் சேர்ந்தவை என பீட்டா ஆய்வுகூடத்திற்கு எதிராக வாதிட்டார். எச்சங்கள் கலப்படம் செய்யப்பட்டமையே தொல்பொருள் ஆய்வு முடிவுகளுடன் காலநிர்ணயத்திற்கான கார்பன் கதிரியக்கப் பரிசோதனை முடிவுகள் முரண்படுவதற்குக் காரணமாக அமையலாம் எனவும் அவர் தெரிவித்தார்.[146] இவ் ஆணைக்குழுவானது தனது இறுதி அறிக்கையை சிறிசேனவுக்கு 2015 இல் சமர்ப்பித்தது. ஆனால் இந்த அறிக்கையானது பொதுமக்களுக்கு வெளியிடப்படவில்லை. இருந்தபோதிலும் தனது கைகளுக்கு அது கிடைத்திருப்பதாக தெரிவித்த சண்டே ரைம்ஸ் பத்திரிகை, மே 2015 இல் அதன் ஆய்வு முடிவுகள் பற்றிச் செய்தி வெளியிட்டது. [147]

[141] ITJP, 'கோதபாய ராஜபக்ச: 1989 பாரிய அட்டூழியங்களில் சிறிலங்கா சனாதிபதியின் பங்கு, மே 2022 https://itjpsl.com/reports/gotabaya-rajapaksa-the-sri-lankan-presidents-role-in-1989-mass-atrocities

[142] CED, சரத்து 12(4) – விசாரணைகளை மேற்கொள்வதற்கு இடையூறாக இருப்பவகள்மீது நடவடிக்கை மேற்கொள்ளும் பொறுப்பு அரசிற்கு உள்ளது.

[143] https://spcommreports.ohchr.org/TMResultsBase/DownLoadPublicCommunicationFile?gId=27621

[144] https://www.sundaytimes.lk/130630/news/presidential-commission-of-inquiry-to-begin-sittings-within-next-fortnight-50836.html

[145] 26 யூன் 2013 இன் 1816/25 வர்த்தமானி அறிவித்தல்

[146] Amnesty International, 'Visit of the UN Working Group on Enforced and Involuntary Disappearance
to Sri Lanka', AI Index: ASA 37/2821/2015, endnote 12, https://www.amnesty.org/en/wp-content/uploads/2021/05/ASA3728212015ENGLISH.pdf

[147] https://www.sundaytimes.lk/150510/news/skeletal-remains-have-no-connection-to-1989-1990-disappearances-pci-148375.html

# 2.4 சாட்சியப் பாதுகாப்பும் பகுதி முகாமைத்துவமும்

அகழ்வுப்பணிகளில் ஈடுபடும் விசாரணையாளர்களும், சட்டத்தரணிகளுக்கும், 'அவர்கள் விசாரணைகளுடன் எப்படிப்பட்ட உறவினைக் கொண்டிருந்தாலும்சரி' தங்களது பணியினை எவ்விதமான அச்சுறுத்தல், தடை, தொல்லை, மற்றும் குறுக்கீடு இல்லாமல் செய்வதை அரசு உறுதிப்படுத்த வேண்டும் என மின்னெசோற்றா நெறிமுறையில் கூறப்பட்டுள்ளது.[148]

அகழ்வுப்பணிகளில் ஈடுபட்டவர்கள் அச்சுறுத்தப்பட்டதாக செய்திகள் வெளியாகியிருந்தன. 1995 ஜனவரி 17 அன்று, சூரியகந்தை அகழ்வுப்பணிகளின்போது, எதிர்த்தரப்பு பிரதான வழக்குரைஞர், சில சாட்சியங்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதையும், ஜனவரி 10ஆம் திகதி, நீதிமன்றத்திலிருந்து வீடு திரும்பும் வழியில் தலைமை தான் சுடப்பட்டதையும் காரணங்களாகக் காட்டி, வழக்கு விசாரணைகளைப் பிற்போடுமாறு கேட்டுக்கொண்டார். யாழ்ப்பாணத்தின் செம்மணி புதைகுழியின் இருப்பினை 1996 இல் வெளிப்படுத்திய (மேலே பார்க்கவும்) லான்ஸ் கோப்ரல் சோமரட்ண ராஜபக்சவும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டதுடன் தாக்குதலுக்கும் உள்ளானார். நீதிமன்றத்திற்கு அவர் வழங்கிய வாக்குமூலத்தினை விலக்கிக்கொள்வதை உறுதிப்படுத்த வேண்டுமென்று கூறி, 'இராணுவத்தைச் சேர்ந்த சிலரால்' கையொப்பமிடப்பட்ட இரு கடிதங்கள் அவரது மனைவிக்கு அனுப்பப்பட்டன. [149]

புதைகுழி அமைந்திருக்கும் பகுதியானது இயன்றளவு விரைவில் பாதுகாக்கப்படுவதையும், அனுமதியற்ற ஆட்கள் உள்நுழையாமல் தடுக்கப்படுவதையும் உறுதிசெய்யவேண்டுமென மின்னெசோற்றா நெறிமுறை வேண்டுகின்றது.[150] மேலும், இப்பகுதிக்குள் நுழையும் அனைவரதும் பதிவுகள், அவர்கள் வருகைதந்த திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுடன், பேணப்படல் வேண்டும் என்றும் அது கேட்டுக்கொள்கின்றது. ஆதாரங்களைக் கையாழும் ஒவ்வொருவரும் அவர்களது மரபணு மாதிரிகளையும், விரல்ரேகை அடையாளங்களையும் வழங்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றது.[151]

சூரியகந்தையில், புதைகுழிப் பகுதி சேதமாக்கப்பட்டிருந்தது என்ற வலுவான சந்தேகம் இருந்தது.[152] அகழ்வு ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னதாகவே செம்மணியிலிருந்த தடயங்கள் அகற்றப்பட்டன என்ற வதந்திகளும் பரவின.[153]

### பகுதியான அகழ்வுப்பணி

தெளிவான கொள்கை இல்லாத நிலையில், அகழ்வுப்பணி நடைபெறும் இடங்களின் பாதுகாப்பும் மோசமானதாக இருக்கின்றது என்பதும் கவலையளிக்கின்றது. அகழ்வுப்பணி நடைபெறும்போது காவல்துறையினர் பிரசன்னமாகி இருக்கின்றார்கள், ஆனால், அகழ்வுப்பணி முடிந்ததும் அவர்கள் அங்கிருந்து வெளியேறுகின்றார்கள். இதுதான் மாத்தளையிலும் நடந்தது. இன்னும் சில வழக்குகளில், மேலும் சடலங்கள் இருக்கலாம் என்று கண்காணிப்பாளர்கள் மத்தியில் சந்தேகம் இருந்தபோதிலும், நீதிபதிகள் அவ்வழக்குகளை முடித்து வைத்துள்ளார்கள்.[154] 2013 மற்றும் 2018 இல் கண்டுபிடிக்கப்பட்ட மன்னார் புதைகுழிகள் தொடர்பில் இச்சந்தேகம் நிலவியபோதிலும் காவல்துறை தங்கள் பாதுகாப்பை விலக்கிக் கொண்டது. இது அப்புதைகுழி அமைவிடங்கள் சேதமாக்கப்படுவதற்கான வாய்ப்பினை திறந்துவைத்தது.

மனிதப் புதைகுழிகளின் பாதுகாப்புத் தொடர்பான முன்னணி அதிகாரியும், போர்ண்மவுத் நெறிமுறைகளின் இணை ஆசிரியருமான மெலனி கிளிங்க்னர் (Melanie Klinkner) 'மனித உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பத்தில், சர்வதேச சட்டத்தின் கீழ், செயற்றிறன் மிக்க விசாரணை நடாத்தப்படவேண்டியது அவசியமாகின்றது. மேலும் ஒரு பகுதியிலிருந்த பெறப்பட்ட ஆதாரங்களின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக மூன்றாம் தரப்புக்களால் (அகழ்வுப்பணிகளில் ஈடுபட்டோர் உட்பட) மனிதப் புதைகுழிகள் அமைந்துள்ள பகுதி சேதப்படுத்தப் படவில்லை என்பதை உறுதிப்படுததுவதும் அவசியமாகின்றது' என்றும் குறிப்பிட்டுள்ளார்.[155]

---

148 மின்னெசோற்றா நெறிமுறை, பந்தி 30

149 https://www.amnesty.org/fr/wp-content/uploads/2021/06/asa370161999en.pdf

150 மின்னெசோற்றா நெறிமுறை, பந்தி 59

151 மின்னெசோற்றா நெறிமுறை, பந்தி 60

152 Amnesty International, 'When will justice be done?', 1994, Case No 12, https://www.amnesty.org/fr/wp-content/uploads/2021/09/ASA370151994ENGLISH.pdf

153 Bopage, op cit

154 மனித உரிமைகள் சட்டவாளருடனான இரகசிய நேர்காணல், 23 மே 2023

155 http://opiniojuris.org/2022/07/11/what-is-a-mass-grave-why-protect-mass-graves-how-to-protect-mass-graves/

# 2.5 தொடர்ச்சியான இடமாற்றங்கள்

அகழ்வுப் பணிகள்மீது தலையீடுகளைச் செய்ய முயற்சிக்கும் மூத்த அரசாங்க அதிகாரிகள் பயன்படுத்தும் மற்றுமொரு பொதுவான தந்திரம், நீதிபதிகளை, காவல்துறை அதிகாரிகளை அல்லது இதர அதிகாரிகளை மாற்றுவதாகும். மன்னார் அகழ்வுப் பணிகளில், 2023 இன் நிலைமைப்படி, ஏழு வருடங்களுக்கும் குறைவான காலப்பகுதியில், வழக்கு விசாரணைகளில் ஈடுபட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை ஏழு ஆகும்.[156] ஒரு சிலர் வழக்கமான பணிமாற்றத்தின் ஒரு பகுதியாக மாற்றப்பட்டார்கள். ஆனால் மற்றையவர்கள் அரசியல் அழுத்தம் காரணமாகவே மாற்றப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது.

சில சமயங்களில், நீதிமன்ற வழக்குகளே, குறிப்பாக வடக்கிலும் கிழக்கிலும் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பான வழக்குகள், வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. உதாரணமாக, செம்மணி வழக்கு 2000ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் கொழும்பு நீதவான் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது. யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராகவேண்டிவந்தால் தங்களது உயிர்களுக்கு அச்சுறுத்தல் இருப்பதாக அஞ்சுவதாக இராணுவ அதிகாரிகள் வாதிட்ட பின்னரே இது நிகழ்ந்தது.[157] ஆனால் மனுதாரர்கள கொழும்பு செல்வதற்குப் பயந்தார்கள். ஏனெனில், பாதுகாப்புப் படையினரிடம் பயணத்திற்கான அனுமதி வேண்டி விண்ணப்பிக்கும்போது, இராணுவத்திற்கு எதிராக சாட்சியம் வழங்குவதே பயணத்திற்கான நோக்கம் என்பதை வெளிப்படுத்த வேண்டிவரும் என்பதேயாகும்.[158]

2018 ஆம் ஆண்டு மன்னார் புதைகுழி மீதான அகழ்வுப் பணிகளில் ஈடுபட்ட சட்ட மருத்துவ அதிகாரி 2019 இல் கொழும்புக்கு மாற்றப்பட்டார். 2018 மன்னார் புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட சடலங்கள் எதுவுமே அடையாளம் காணப்படவில்லை. 2013 இல் அகழ்வுப்பணிகளை மேற்கொண்ட சட்ட மருத்துவ அதிகாரி அனுராதபுரத்திற்கு மாற்றப்பட்டு, பின்னர் மாத்தளைக்கு இடமாற்றப்பட்டார். சேகரிக்கப்பட்ட மனித எச்சங்களின் ஆய்வுகளை அவரால் பூரணப்படுத்த முடியவில்லை.

நீதிபதி சதுரிக்கா சில்வா மாத்தளை வழக்குகளிலிருந்து விடுவிக்கப்பட்டார். காணாமல் போனவர்களின் குடும்பங்களைக் கண்டுபிடிப்பதற்கு மூன்று மொழிகளிலும் செய்தித்தாள்களில் அறிவித்தல் கொடுக்குமாறு சி.ஐ.டி. இற்கு உத்தரவிட்டதைத் தொடர்ந்தே இது நிகழ்ந்தது.[159] புதிய நீதிபதி மேலதிக வாக்குமூலங்களை ஏற்க மறுத்ததுடன், அந்த வாக்குமூலங்களை ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கும்படி அனுப்பினார். (மேலே பார்க்கவும்).[160] 1994 இல், வல்பிட்ட பண்ணை மனிதப் புதைகுழி தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துச் செல்வதில் தனிப்பட்ட ஆர்வத்தைக் காட்டிய, வாமினுவங்கொட நீதிபதி, பாலித பண்டாரநாயக்கா, இடமாற்றப்பட்டதுடன், அவ்வழக்கும் நீர்கொழும்பு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, பின்னர் கைவிடப்பட்டது.[161]

சிறிலங்காச் சட்டத்தின்கீழ், அனைத்து சட்ட மருத்துவ அதிகாரிகளும் (கொழும்பு தலைமைச் சட்ட மருத்துவ அதிகாரியைத் தவிர) நான்கு வருடங்களுக்கு ஒருமுறை இடமாற்றம் செய்யப்படலாம். அகழ்வுப்பணிகளைத் தொடங்கிய சட்ட மருத்துவ அதிகாரி ஒருவர் இடம் மாற்றப்படும் போது, அவருடைய இடத்திற்கு வரும் புதிய சட்ட மருத்துவ அதிகாரிக்கு அப்பணியினைப் பொறுப்பெடுத்துக்கொள்வது கடினமானதாக இருக்கும். இதனைச் சமாளிப்பதற்காக, தடயவியல் மருத்துவம் மற்றும் நச்சுயியல் நிறுவனத்தில் 2018இன் தொடக்கத்தில் சட்ட மருத்துவ அகழ்வியல் அதிகாரி என்னும் பதவிநிலை உருவாக்கப்பட்டது. புதைகுழிகள் கண்டுபிடிக்கப்படும்போது, இந்த அதிகாரிக்கே கட்டளைகள் அனுப்பப்படும் என்றும், அவர் பின்னர் அப்பிரதேசத்தைச் சுற்றியுள்ள சட்ட மருத்துவ அதிகாரிகள் உள்ளிட்ட அணியொன்றினை கொண்டுசெல்வார் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. இவ்வறிக்கை எழுதப்பட்டுக்கொண்டிருந்த நேரத்தில், எந்தவொரு அகழ்வுப்பணியும் நடைபெறவில்லை. இருப்பினும், கண்டுடெடுக்கப்பட்ட எச்சங்களின் சில மாதிரிகளின் பரிசோதனைகள் கொழும்பு பல்கலைக்கழகத்தின் தடயவியல் ஆய்வு கூடத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்தன.

---

[156] மனித உரிமைகள் அமைப்பின் பணியாளரடனான நேர்காணல், பெயர் மறைக்கப்பட்டுள்ளது, மார்ச் 2023

[157] https://www.tamilnet.com/art.html?artid=3101 and https://www.tamilnet.com/art.html?catid=13&artid=5095

[158] AHRC, 'A sociological exploration of disappearances in Sri Lanka', p266, http://www.humanrights.asia/wp-content/uploads/2018/08/A-SOCIOLOGICAL-EXPLORATION-OF-DISAPPEARANCES-IN-SRI-LANKA.pdf

[159] Mytili Bala, 'Transitional Justice & the Right to Know: Investigating Sri Lanka's Mass Graves', in CPA, Transitional Justice, 2017, p308, https://www.cpalanka.org/wp-content/uploads/2020/11/TJ-MARCH-2017.pdf

[160] ibid

[161] http://www.jdslanka.org/s/index.php/2014-12-20-03-23-32/2014-12-30-18-25-25/779-samakaya-on-srilanka-massgraves



1999இல் செம்மணியில் நடந்த அகழ்வுப் பணியின்போது பேராசிரியர் நிரியல்ல சந்திரசிறி உள்ளிட்ட தடயவியல் நிபுணர்கள்.





# 2.6 தொழில்நுட்ப கட்டமைப்பு

அகில இலங்கை ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவானது, தனது இறுதி அறிக்கையில், மனிதப் புதைகுழிகளில் பயன்படுத்தப்படுவது உள்ளிட்ட. நாட்டிலுள்ள தடயவியல் ஆய்வுத் திறனை மேம்படுத்த வேண்டும் என்று பொதுவான பரிந்துரைகளைத் தெரிவித்திருந்தது. மேலும் 'தேவையான நிபுணத்துவம் கிடைக்கும்வரை' அகழ்வுப்பணிகள் மேற்கொள்ளப்படக்கூடாது என்றும், மரபணு விபரக்குறிப்பு, கணணிமயப்படுத்தப்பட்ட முகமீள்உருவாக்கம் மற்றும் முகஅடையாளம் காணல் வசதி, காணொளி மூலமான முகவுருக் கட்டமைப்பு ஒப்பீடு, மற்றும் உடற்கூற்றளவையியல்சார் ஆய்வுகள் உள்ளட்ட வசதிகள் கொண்ட ஆள் அடையாளம்காணும் மையத்தினை (Human Identification Centre) உருவாக்கி, நோயியல் நிபுணர்களுக்கும் இதர விஞ்ஞானிகளுக்கும் பயிற்சிகள் வழங்க வேண்டும் என்றும்; சட்டமா அதிபர் அலுவகத்தை மீள்கட்டமைப்புச் செய்வதுடன், சுயாதீன வழக்குத்தொடரும் சேவையொன்றினை உருவாக்கி, அகழ்வுப்பணிகளின் முடிவுகள் தொடர்பான வழக்கு விசாரணைகள் சுயாதீனமாகவும் பக்கச்சார்பற்ற முறையிலும் இடம்பெறுகின்றன என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் வல்லுனர்கள் பரிந்துரைத்துள்ளார்கள். [162]

இவற்றில் ஒன்றுகூற நடைமுறைப்படுத்தப்படவில்லை.[163] மூத்த சட்ட மருத்துவ அதிகாரிகள் இக்குறைகள் பற்றித் தெரிந்து வைத்துள்ளார்கள். அத்துடன், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன், எலும்புக்கூட்டு எச்சங்களின் பகுப்பாய்வுகளுக்கான வழிகாட்டல்களை உருவாக்கி வருகின்றார்கள். [164] இவ்வழிகாட்டல்கள் இதுதொடர்பான சர்வதேச நியமங்களையும் ஏற்கனவே பயன்படுத்தப்படும் சிறந்த நடைமுறைகளையும் உள்வாங்கி உருவாக்கப்படும்.[165]

உண்மை, நீதி, இழப்பீடுகள் மற்றும் திரும்பவும் நடைபெறாது என்பதற்கான உத்தரவாதங்கள் தொடர்பான ஐ.நா.விசேட தூதுவர் தன்னுடைய 2020 ஆண்டறிக்கையில், விசாரணையின் ஆரம்ப கட்டங்களில் தவறுகளுக்கு காரணமாக அமைந்த சிறிலங்கா காவல்த்துறை மத்தியில் காணப்படும் தொழில்நுட்பப் பற்றாக்குறையினைச் சுட்டிக்காட்டியுள்ளார். [166] அவர் மேலும் பின்வருமாறு கூறினார்:

**“இதுவே சுருக்க முறை இல்லாத கேட்டறிதல்கள் (non-summary inquiries) மட்டத்தில் விசாரணைகளை நடாத்தும் காவல்துறை கட்டமைப்பில் போதுமான விசாரணை செய்யும் திறன் இன்மை; தடயவியல் நிபுணத்துவம் ஒரேயிடத்தில் கிடைக்காமை; ஓரிடத்தில் மையப்படுத்தி வைக்கப்பட்டுள்ள பதிவுகளைப் பயன்படுத்திக்கொள்ளும் வசதி அல்லது ஆவண முகாமைத்துவ ஆதரவு இல்லாமல் சுயாதீனமான வல்லுனர்களாகச் செயற்படும் சட்ட மருத்துவ அதிகாரிகள் மத்தியில் காணப்படும் பொறுப்புக்கூறலின்மை; மற்றும் வழக்குகளின் ஆரம்பகட்ட விசாரணைகளில் சட்டமா அதிபர் அலுவலகம் கொண்டிருந்த மட்டுப்படுத்தப்பட்ட வகிபாகம்; இதனால் முன்னேற்றம் தடுக்கப்பட்டமை ஆகியன சேர்ந்த விசாரணைக் குறைபாடுகள் சிறிலங்காவில் உள்ளன.”**[167]

தடயவியல் நிபுணர்களால் மேற்கொள்ளப்படும் உண்மையான அகழ்வுப் பணிகள் மற்றும் வேலை என்று வரும்போது, அவர்கள் பயன்படுத்தும் முறைமைகளில் 'முன்னேற்றம் ஏற்பட்டுள்ளமை' தெளிவாகத் தெரிகின்றது. 1994 இல் சூரியகந்தவில் நடந்த அகழ்வுப்பணிகளின்போது பிக்கான்களும் புல்டோசர்களும் பயன்படுத்தப்பட்டன. ஆனால் 2013 இல் மாத்தளையிலும் 2013 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளில் மன்னாரிலும் நடந்த அகழ்வுப் பணிகளில் தொழில்முறைத்திறன்சார்ந்த முறைகள் பயன்படுத்தப்பட்டன. (1999 இல் யாழ்ப்பாண மாவட்டத்தின் செம்மணிப் புதைகுழியின் அகழ்வுகளின்போது, அனைத்துலக மன்னிப்புச்சபை சார்பாக தடயவியல் நிபுணர் ஒருவரும், நோயியல் நிபுணர் ஒருவரும், மனித உரிமைகளுக்கான மருத்துவர்கள் அமைப்புச் சார்பாக ஒரு மரண விசாரணை அதிகாரியும் பார்வையாளர்களாகக் கலந்து கொண்டது போன்று [168] ) சர்வதேச நிபுணர்கள் கண்காணிப்பாளர்களாகச் செயற்பட்டமையும், சிறிலங்காவின் தடயவில் நிபுணர்களுக்கு வழங்கப்பட்ட வெளிநாட்டுப் பயிற்சிகளும், புதைகுழிப்

---

[162] வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் அல்லது காணாமல்போன ஆட்கள் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை, Sessional Paper, 1997, ch14, p178

[163] 1995 முதல் கொழும்பில் ஆய்வுகூடம் இருக்கின்றது, எனினும், அது பெற்றோர்களை அடையாளம் காண்பதற்கான பரிசோதனைக்காக மட்டுமே மாதிரிகளை ஏற்றுக்கொள்கின்றது. இவை பின்னர் ஆய்வுக்காக வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. See here: https://dnacenter.com/srilanka/

[164] மூத்த சட்ட மருத்துவ அதிகாரியுடனான நேர்காணல், மார்ச் 2023

[165] See, for instance, https://www.icrc.org/en/document/humanity-after-life-respect-and-protection-dead and https://www.icrc.org/en/document/missing-persons-and-their-families-factsheet

[166] சிறிலங்கா விஜயம் தொடர்பாக ஐ.நா. சிறப்புத் தூதுவரின் அறிக்கை, யூன் 2020, பந்தி 48, https://www.ohchr.org/en/documents/country-reports/ahrc4545add1-visit-sri-lanka-report-special-rapporteur-promotion-truth

[167] சிறிலங்கா விஜயம் தொடர்பாக ஐ.நா. சிறப்புத் தூதுவரின் அறிக்கை, யூன் 2020, பந்தி 48, https://www.ohchr.org/en/documents/country-reports/ahrc4545add1-visit-sri-lanka-report-special-rapporteur-promotion-truth

[168] Amnesty International, 22 Jun 1999, op cit

பிரதேசங்களின் பார்வையாளராக சட்ட மருத்துவ அதிகாரி கொண்டிருந்த வகிபாகமும், பயிற்சி வழங்குவதற்காக தடயவியல் நிபுணர்கள் கொண்டுவரப்பட்டதும் இந்த முன்னேற்றத்திற்கு ஒருவிதத்தில் காரணங்களாக இருந்தன. [169]

இருப்பினும், சிறிலங்காவின் உண்மையான தடயவியல் திறன் மட்டுப்படுத்தப்பட்டதாகவே இன்னமும் உள்ளது, அத்துடன் அகழ்வுப்பணிகளில் கண்டுபிடிக்கப்படும் தடயங்கள் ஆய்வுக்காக வெளிநாடுகளுக்கே அனுப்பி வைக்கப்படவேண்டிய நிலையே காணப்படுகின்றது. செம்மணிப் புதைகுழியிலிருந்து எடுக்கப்பட்ட மனித எச்சங்களின் எலும்பு மாதிரிகள், மரபணுப் பரிசோதனைக்காக இந்தியாவின் ஐதராபாத் தடயவியல் ஆய்வுகூடத்திற்கும், பின்னர் பிரித்தானியாவிற்கும் அனுப்பி வைக்கப்பட்டன. இதுதொடர்பான அறிக்கைகள் எதுவும் பொதுத்தளத்தில் கிடைக்கவில்லை. அத்துடன் இவ்வாய்வுகளின் அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்பட்டதா என்பதுகூடத் தெளிவாகத் தெரியவில்லை. போர்கொட ஏரியிலும் அதற்குப் பக்கத்திலிருந்த இரு ஆறுகளிலுமிருந்த மீட்கப்பட்ட 25 சடலங்களின் 21 மண்டையோடுகள் கொழும்பு மூத்த சட்ட மருத்துவ அதிகாரியால் கிளாஸ்கோ பல்கலைக்கழகத்தின் தடயவியல் மருத்துவம் மற்றும் அறிவியல்துறையில் பணியாற்றிய மூத்த தடயவியல் நிபுணர்களிடம் அனுப்பிவைக்கப்பட்டன. (பின்னிணைப்பைப் பார்க்கவும்) இங்கே கணணிமயப்படுத்தப்பட்ட முக மீள் உருவாக்கம் வசதி மற்றும் காணொளி மூலமான முகவுருக் கட்டமைப்பு ஒப்பீடு நுட்பம் ஆகிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி ஐந்து மண்டையோடுகள் அடையாளம் காணப்பட்டன.[170] இவ்வாறான அதிநவீன தடயவியல் தொழில்நுட்பங்கள் அதற்குப் பின்னர் பயன்படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை.

மற்றைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் சிறிலங்காவின் தடயவியல் நிபுணர்கள் தங்களது அறிக்கைகளை நீதிபதிகளிடம் சமர்ப்பிப்பதில் கணிசமான தாமதம் இருப்பதாக மூத்த சர்வதேச தடயவியல் நிபுணர் ஒருவர் குறிப்பிட்டார். [171] அவர்களின் நேரத்தின் தேவைகள், அல்லது இதர காரணங்களால் இது ஏற்படலாம். உதாரணமாக மன்னார் சத்தோச கட்டடப் பகுதியில் நடந்த அகழ்வுப்பணிகள் தொடர்பான தடயவியல் அறிக்கை 2019 யூன் 30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவேண்டியிருந்தது. ஆனால், மே 2023 வரை அது சமர்ப்பிக்கப்படவேயில்லை. அகழ்வுப் பகுதியிலிருந்து கண்டெடுக்கப்பட்ட சில கலைப்பொருட்கள் இன்னமும் விசாரணை அணிக்கு வழங்கப்படாததே இத்தாமதத்திற்குக் காரணம் என்று கூறப்பட்டாலும்கூட, இவ் அகழ்வுப் பணிகளை நெருக்கமாக கண்காணித்துவரும் வட்டாரங்கள் இதுபற்றி சந்தேகம் கொண்டுள்ளதுடன், இத்தாமதத்திற்கு வழங்கப்படும் காரணங்கள் தொடர்பாகவும் ஐயம் கொண்டுள்ளன.[172]

சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் மத்தியில் உள்ள தாமதமான ஒத்துழைப்புக்களுடன் சேர்த்து, ஏற்படும் தாமதங்களும், விசாரணைகளுக்குள் தற்காலிகமான முறையில் நிபுணர்கள் கொண்டுவரப்படுவதும் சிறிலங்காவிலுள்ள புதைகுழிகள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துச் செல்வதிலுள்ள சவால்களாகப் பார்க்கப்படுகின்றது. [173] நீதிமன்றங்களின் உத்தரவுகளைச் செயற்படுத்துவதில் விஞ்ஞானிகளும் காவல்துறையினரும் மெதுவாகவே நடந்துகொள்கின்ற போதிலும், இதற்கான காரணம் ஒருபோதும் தெளிவாகத் தெரிவதில்லை. உத்தரவுகள் அளவுக்கதிகமாக இருப்பது இதற்குக் காரணமாக இருக்கலாம்; அல்லது அரசியல் அழுத்தம் காரணமாக இருக்கலாம். உதாரணமாக, 2015 டிசம்பரில், கண்டெடுக்கப்பட்ட மனித எச்சங்களின் மாதிரிகளை ஆஜந்தீனா, பெரு மற்றும் குவாட்டமாலா நாடுகளின் தடயவியல் நிபுணர்குழுவிற்கு அனுப்பிவைக்கும்படி சி.ஐ.டி. க்கு உத்தரவிடுமாறு குடும்பங்கள் சார்பாக வாதிட்ட வழக்குரைஞர்கள் நீதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தார்கள். எனினும் அரச வழக்குரைஞர் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார். அதனால் அவ்வேண்டுகோளை நீதிபதி ஏற்கவில்லை. மாறாக, அவற்றை அமெரிக்காவுக்கு அனுப்பும்படி நீதிமன்றத்திடம் சி.ஐ.டி. வேண்டுகோள் விடுத்தது. முடிவில் இம்மாதிரிகள் அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. பின்னர், குவாட்டமாலாவைச் சேர்ந்த தடயவியல் ஆய்வு அணியொன்று சிறிலங்காவுக்கு அதிகாரபூர்வமற்ற விஜயமொன்றை மேற்கொண்டு, சில பயிற்சிகளை வழங்கியது. அவர்கள் மன்னார் புதைகுழிக்கு விஜயம் செய்யவுமில்லை, மனித எச்சங்களின் அகழ்வுப்பணிகளிலோ அல்லது ஆய்வுகளிலோ பங்கெடுக்கவுமில்லை.

எலும்பு மாதிரிகளின் சேகரிப்பு, பாதுகாப்பு மற்றும் காலநிர்ணயத்திற்கான கார்பன் கதிரியக்கப் பரிசோதனைக்கான முறையான நடைமுறை அல்லது மரபணுப் பரிசோதனை ஆகியவற்றின் நடைமுறைகள் தொடர்பாக எந்தவொரு தெளிவும் இல்லை. மாத்தளை புதைகுழி தொடர்பான விசாரணை ஆணைக்குழு மேற்கொண்ட பணியின்போது இது தெரியவந்தது. இதில், தடயவியல் ஆய்வாளருக்கும், நோயியல் நிபுணருக்கும் யாருக்கு என்ன பொறுப்பு என்பது தெரிந்திருக்கவில்லை, அத்துடன் பதிந்து வைத்திருந்த முக்கியமான பதிவுகள் காணாமல்

[169] ITJP இன் மன்னார் அகழ்வுப்பணிகளின் கண்காணிப்பாளருடனான உரையாடல், 3 மார்ச் 2023

[170] கிளஸ்கோ பல்கலைக்கழகத்தின் கடிதம், 5 நவம்பர் 1996

[171] சர்வதேச தடயவியல் நிபுணருடனான தொலைபேசிவழி நேர்காணல், ஜனவரி 2023

[172] OMP, 2019 வருடாந்த அறிக்கை, பந்தி 3.41–2 மற்றும் ITJP இன் நம்பகரமான ஒருவருடனான நேர்காணல், மார்ச் 3, 2023

[173] https://www.themorning.lk/police-management-of-physical-evidence-for-forensic-identification-is-inadequate-local-forensic-expert/

போயிருந்தன, மாறாக வாய்வழித் தொடர்புகளிலேயே அவர்கள் தங்கியிருக்க வேண்டியிருந்தது. [174]

சிறிலங்காவில் ஏற்பட்டுள்ளது போன்ற, தடயவியல் அமைப்பொன்றில் ஏற்படும் தரக்கட்டுப்பாட்டு வகையைச் சேர்ந்த பிரச்சினைகள், ஆய்வுகூட அங்கீகாரங்கள் போன்ற, வெளிப்படையான, அறிவியல் ரீதியான, நிர்வாக ரீதியிலான நடவடிக்கைகள் மூலமே தீர்த்துவைக்கப்படுகின்றன.[175] தற்போது, தரக்கட்டுப்பாட்டுக்கு இதுபோன்ற எந்தவொரு முறைமையும் இல்லை. இதற்கு நிபுணத்துவம் வாய்ந்த பணியாளர்கள் இல்லாமையும் ஒரு காரணம். வழமையான குற்றவியல் விசாரணைகளிலிருந்து வேறுபட்டிருக்கும் இப்படியான விசாரணைகளுக்கு எந்த விதமான நிதி ஒதுக்கீடும் கிடையாது.

சந்தேகத்திற்கிடமான தடுப்பு மையங்கள் மற்றும் மனிதப் புதைகுழிகள் தொடர்பான விசாரணைகளுக்கு, குறிப்பாக தடயவியல் அகழ்வு மற்றும் தடயவியல் ஆய்வு நிபுணத்துவம் உள்ளிட்ட, முழுமையான நிபுணத்துவங்கள் உள்ளடங்கிய அனுபவம் வாய்ந்த அணி தேவைப்படுகின்றது. ஆனால், இத்துறைகளின் அனுபவமும் சிறப்புத் தேர்ச்சியும் வாய்ந்த நிபுணர்கள் சிறிலங்காவில் இல்லை. அத்துடன், காணாமல் போனவர்களின் தலைவிதியைத் தீர்மானிப்பதில் இது பெரும் தடையாகவும் இருக்கின்றது. [176] வெறுமனே வெளிநாட்டு வல்லுனர்களை அழைத்து இரகசிய அறிக்கைகளை அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்வதன் மூலமோ அல்லது பாதுகாப்பு மற்றும் இடமாற்றங்களைக் கண்காணிக்கும் படிமுறைகளை உறுதிப்படுத்துவதற்காக ஓரளவு வெளிப்படைத் தன்மையுடன் மாதிரிகளை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்பதன் மூலமோ மட்டுமே நம்பகத்தன்மை ஏற்பட்டுவிடாது என்பது தெரிந்ததே. மாறாக, வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நிபுணர்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த அணுகுமுறை ஏற்படுத்தப்படல் வேண்டும். அத்துடன், வினைத்திறன் அற்றவையென நிரூபிக்கப்பட்ட, நீதவான் நீதிமன்றத்தின் விசாரணை நடைமுறையை விடுத்து, பிறிதொரு கட்டமைப்பின் கீழ் விசாரணைகள் இடம்பெறவும் வேண்டும். [177] தற்போதைய சட்ட மற்றும் கொள்கைக் கட்டமைப்பில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டால் மட்டுமே, இது சாத்தியமாகும்.

---

[174] https://www.colombotelegraph.com/index.php/matale-mass-grave-skeletons-in-closets-as-well/

[175] Stefan Schmitt and Dallas Mazoori, 'Jurisdiction, Privacy, and Ownership: DNA Technology and Field Dynamics in Conflict-Related Mass Fatalities', in Genocide Studies and Prevention, vol 11, issue 1, p61, https://digitalcommons.usf.edu/gsp/vol11/iss1/8/

[176] Mirak Raheem, 'Questions of Justice and Accountability', Groundviews, 21 May 2022, https://groundviews.org/2022/05/21/questions-of-justice-and-accountability/

[177] Mytili Bala, *'Transitional Justice & the Right to Know: Investigating Sri Lanka's Mass Graves'*, in CPA, Transitional Justice, 2017, p318, https://www.cpalanka.org/wp-content/uploads/2020/11/TJ-MARCH-2017.pdf

# 2.7 வளங்களை மட்டுப்படுத்தல்

சந்தேகத்திற்கிடமான மரணங்கள் மீது நடைபெறும் விசாரணைகள் போதுமான நிதி, மற்றும் தகுதிவாய்ந்த விசாரணையாளர்கள், துறைசார்ந்த நிபுணர்கள் உள்ளிட்ட போதுமான ஆளணியினைக் கொண்டிருக்க வேண்டும் என்று மின்னெசோற்றா நெறிமுறைகளில் கூறப்பட்டுள்ளது. [178] ஒரேயொருமுறை மட்டுமே பயன்படுத்தப்பட்ட, முகமீள்உருவாக்கம் மற்றும் காணொளி மூலமான முகவுருக் கட்டமைப்பு ஒப்பீட்டு வசதி ஊடாக மனித எச்சங்களை அடையாளம் காண்பதற்கு 1996 இல் மேற்கொள்ளப்பட்ட முயற்சியில், பொல்கொட ஏரியிலும், அதனருகிலிருக்கும் இரு ஆறுகளிலிருந்தும் மீட்கப்பட்ட சடலங்களில் ஐந்து சடலங்கள் அடையாளம் காணப்பட்டன. இம்முயற்சி ஒருமுறை மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. [179]

இதற்கு நேர்மாறாக, அகழ்வுப்பணிகளுக்கு நிதிவழங்கும்படி மிக அண்மையில் விடுக்கப்பட்ட வேண்டுகோள்களை நீதி அமைச்சு உதாசீனம் செய்துள்ளது. உதாரணமாக, களுவாஞ்சிக்குடியில் அகழ்வுப்பணியை மேற்கொள்வதற்கு நிபுணர்கள் கொண்ட குழுவை உருவாக்குவதற்கு நிதியுதவி வழங்குமாறு சட்டமருத்துவ அதிகாரி விடுத்த கோரிக்கையினை நீதி அமைச்சு உதாசீனம் செய்தது.[180] அவ்விசாரணைகள் கைவிடப்பட்டதுடன், இன்றுவரை எந்தவொரு அகழ்வும் மேற்கொள்ளப்படவில்லை.[181]

காணாமல்போன ஆட்கள் தொடர்பான அலுவலகம் அமைக்கப்பட்டதிலிருந்து, அது அகழ்வுப்பணிகளின் சில பகுதிகளுக்கு நிதியுதவி வழங்கியது. உதாரணமாக, மன்னார் அகழ்வுப்பணிகளில் கண்டெடுக்கப்பட்ட எடுக்கப்பட்ட எலும்புகளின் மாதிரிகளை காலநிர்ணயத்திற்கான கார்பன் கதிரியக்க பரிசோதனைகளுக்காக புளோரிடாவுக்கு அனுப்பி வைக்கப்படுவதற்கான செலவினை அது ஏற்றுக்கொண்டது. மேலும், அகழ்வுப்பணிகளுக்கும் நிதியுதவி வழங்கியதுடன், விசாரணை நடவடிக்கைகளில் பொதுமக்களின் நம்பிக்கையினை பெற்றுக்கொள்வதற்கு கடைப்பிடிக்க வேண்டிய பொருத்தமான நடவடிக்கைகள் இடம்பெறுவதை உறுதி செய்வதற்கு அப்பகுதியிலிருந்த எடுக்கப்பட்ட எலும்பு மற்றும் பற்களின் மாதிரியின் பாதுகாப்பு மற்றும் இடமாற்றங்களைக் கண்காணிக்கும் படிமுறைகளைக் கடைப்பிடிப்பதற்குத் தேவையான வழிகாட்டல்களை மன்னார் நீதவான் நீதிமன்றத்திற்கும் சமர்ப்பித்தது.

காணாமல்போன ஆட்கள் தொடர்பான அலுவலகம், எலும்புகளினதும் பற்களினதும் ஆறு மாதிரிகளை கால நிர்ணயத்திற்கான கார்பன் கதிரியக்கப் பரிசோதனைக்காக, அமெரிக்காவின், மியாமியிலுள்ள பீற்றா அனலிற்றிக் என்னும் ஆய்வுகூடத்திடம் ஒப்படைத்தது. 2019 பெப்ரவரியில் வெளிவந்த அதன் முடிவுகள், இம்மனித எச்சங்கள் கி.பி 1450 இற்கும் 1650 இற்கும் இடைப்பட்ட வரலாற்றுக் காலப்பகுதியைச் சேர்ந்தவையெனக் கூறின. [182] காணாமல்போன ஆட்கள் தொடர்பான அலுவலகம் நீதவான் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்த தன்னுடைய அறிக்கையில், புதைகுழிகள் தொடர்பாக கிடைத்த இதர தகவல்களை அனைத்தையும் ஆராயும்போது, இக்கார்பன் கதிரியக்கப் பரிசோதனையின் முடிவுகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என்றும், முழுமையான அறிக்கையினை கருத்தில்கொண்ட பின்னரே, விசாரணையின் எதிர்காலப்போக்கு தீர்மானிக்கப்படவேண்டும் என்றும் பரிந்துரை செய்திருந்தது. 2019 மார்ச் 22 இல் நடந்த விசாரணை அணியுடனான சந்திப்பினைத் தொடர்ந்து, காலநிர்ணயத்திற்கான கார்பன் கதிரியக்கப் பரிசோதனையின் முடிவுகளும் நீதிபதியின் கட்டளைக்கு இணங்க செய்து முடிக்கப்பட்ட இதர ஆய்வுகளின் முடிவுகளும் உள்ளிட்ட, விரிவான அறிக்கை சமர்ப்பிக்கப்படும் வரை அகழ்வுப் பணிகளை நிறுத்திவைக்கும் தற்காலிக ஆணையினை நீதிபதி மேலும் நீட்டிப்புச் செய்தார். [183] இவ்வறிக்கை எழுதப்பட்டுக் கொண்டிருந்த நேரம்வரை, முழுமையாக அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை.

---

178 Minnesota Protocol, para 27

179 கிளாஸ்கோ பல்கலைக்கழகத்தின் கடிதம், 5 நவம்பர் 1996

180 https://www.sundaytimes.lk/190106/news/mass-graves-the-dead-tell-a-tragic-tale-of-delays-and-disputes-328719.html

181 https://www.sundaytimes.lk/190106/news/mass-graves-the-dead-tell-a-tragic-tale-of-delays-and-disputes-328719.html

182 http://www.adaderana.lk/news/53663/mannar-mass-grave-results-of-carbon-dating-tests-made-public

183 மனித உரிமைகள் சட்டவாளருடனான இரகசிய நேர்காணல், 23 மே 2023

# 2.8 சட்டமா அதிபர் அலுவலகத்தின் வகிபாகம்

சட்டமா அதிபர் அலுவலகம் சுயாதீனமாகச் செயற்படமுடியாமை தொடர்பாக தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் நீண்டகாலமாகவே கரிசனைகள் உள்ளன. சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்ட அரிதான ஒருசில அகழ்வுப்பணிகளில்கூட, அவ்வழக்குகளைக் கைவிடுவதற்கான மையப்புள்ளியாக சட்டமா அதிபர் அலுவலகமே இருந்துள்ளது. அதன் மூலமாக, சந்தேகநபர்கள் பிணையில் விடுவிக்கப்படுவதற்கும், அல்லது நிலுவையிள்ள செயற்பாடுகளை முன்னுரிமைப்படுத்தத் தவறியமைக்கும் வழிகோலியது. உதாரணமாக, 1998ஆம் ஆண்டு, யாழ்ப்பாண மாவட்டத்தின் செம்மணியில் தோண்டியெடுக்கப்பட்ட புதைகுழிகள் தொடர்பில், ஐவர் கொண்ட விசாரணைக்குழு, 15 பேர் காணாமல்போனதற்குக் காரணமான பாதுகாப்புப் படையினரை அடையாளம் கண்டதுடன், நான்கு இராணுவ அதிகாரிகள் கைதுசெய்யப்பட்டார்கள். இவ்விசாரணைக் குழுவின் அறிக்கை ஒருபோதுமே வெளியிடப்படவில்லை. இச்சந்தேக நபர்கள் சட்டமா அதிபர் அலுவலகத்தின் அறிவுறுத்தலின் பேரில், 2000 யூலையில் பிணையில்செல்ல விடுதலை செய்யப்பட்டார்கள்.[184] அதனைத் தொடர்ந்து இவர்கள் அனைவருக்கும் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன.[185]

இதுபோன்று 1995இல் நடந்த பொல்கொட ஏரியிலும் கொழும்பின் அருகிலுள்ள இதர நீரோடைகளிலும் கண்டுபிடிக்கப்பட்ட 21 சடலங்கள் தொடர்பில், அவர்களைக் கொலை செய்தார்கள் என்று சந்தேகத்தின் பேரில் குற்றஞ்சாட்டப்பட்ட சிறப்பு அதிரடிப்படை அதிகாரிகளுக்கு எதிரான வழக்கில், சட்டமா அதிபர் அலுவலகம் நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறியபோது, கொழும்பு தலைமை நீதிபதி அவ்வழக்கினைத் தள்ளுபடிசெய்தார். சட்டமா அதிபர் அலுவலகம் வருகைதாரமை 'நீதிக்கு ஏற்பட்ட ஒரு இடையூறு' என நீதிபதி தெரிவித்தார்.[186] பின்னர், இந்த அதிகாரிகளுக்கு எதிராக போதுமான ஆதாரங்கள் இல்லை என்று தெரிவித்த சட்டமா அதிபர் அலுவலகம் மாறாக அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு பரிந்துரை வழங்கியது.[187 +188]

வழக்கு விசாரணைகளின் ஆரம்பக் கட்டங்களில், சட்டமா அதிபர் அலுவலகத்தின் பிரதிநிதிகள் திரும்பத்திரும்ப தாமதங்களை ஏற்படுத்தினார்கள். உதாரணமாக, செம்மணி விசாரணைகளின் போது, வழக்கை ஒத்திவைக்கும்படி அவர்கள் திரும்பத்திரும்ப வேண்டுகோள்கள் விடுத்ததால், நீதிபதிகள் மத்தியிலும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்காக வாதாடிய வழக்கறிஞர்கள் மத்தியிலும் அது விரக்தியை ஏற்படுத்தியது.[189] மனித உரிமைகள் அமைப்பொன்று, அரச வழக்கறிஞரின் வகிபாகத்தை பின்வருமாறு சுருங்கக்கூறியது:

**"அவர்கள் வந்து, மற்றவர்களுக்கு எந்த வாய்ப்பும் வழங்காமல், தாங்கள் விரும்பியதை வலியுறுத்திப் பெற்றுவிடுவார்கள். இதனால் அவர்கள் அனைத்தையும் திரும்பவும் முதலில் இருந்து தொடங்க வேண்டியிருக்கும். வழக்கினை நீட்டிப்பதற்காக வேண்டுமென்றே இது நடந்தது. அத்துடன், பாதிக்கப்பட்ட குடும்பங்களை அவமானப்படுத்தி, அவர்களுக்குத் தலைகுனிவை ஏற்படுத்தவும் அவர்கள் விரும்பினார்கள்."**[190]

ஐக்கிய நாடுகள் சபையின் வலிந்து அல்லது விரும்பத்திற்கு மாறாக காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பணிக்குழுவும் உண்மை, நீதி, இழப்பீடு, மீள்–நடைபெறாமல் இருப்பதற்கான உத்தரவாதங்களை மேம்படுத்துவதற்கான சிறப்புத் தூதுவரும் சட்டமா அதிபர் அலுவலகத்தினை மறுசீரமைக்க வேண்டும் என்று பலமுறை பரிந்துரை செய்துள்ளனர். குறிப்பாக, சுயாதீன பொதுவழக்குச் சேவையொன்றினை உருவாக்கும்படி அவர்கள் கேட்டுள்ளனர். இதனையே அகில இலங்கை ஆணைக்குழுவும் கேட்டிருந்தது.[191] உண்மை, நீதி, இழப்பீடு, மீள்–இடம்பெறாமல் இருப்பதற்கான உத்தரவாதங்களை மேம்படுத்துவதற்கான சிறப்புத் தூதுவர் பின்வரும் பரிந்துரைகளை வழங்கினார்:

---

[184] Bopage, op cit,

[185] Bopage, op cit, footnote lxiii

[186] https://tamilnation.org/indictment/genocide95/gen9548.htm

[187] அகில இலங்கை ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை, பாகம் 9. காவல்துறைமா அதிபருக்கு அரச வழக்குரைஞர் யசந்த கொட்டகோட எழுதிய கடிதம், 20 மார்ச், 1999

[188] அமெரிக்கா இராஜாங்கத் திணைக்கள அறிக்கை, 1996, https://1997-2001.state.gov/global/human_rights/1996_hrp_report/srilanka.html

[189] https://www.tamilnet.com/art.html?catid=13&artid=4303 and https://www.tamilnet.com/art.html?catid=13&artid=4570

[190] மனித உரிமைகள் சட்டவாளருடனான நேர்காணல், மார்ச் 2023

[191] அகில இலங்கை ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு, இறுதி அறிக்கை, பக்கம் 17

“தற்போது பொதுத்துறை வழக்குத் தொடுனராகவும், அரச வழக்குரைஞராகவும் செயற்பட்டுக்கொண்டிருக்கும் சட்டமா அதிபர் அலுவலகத்தினை மீள் கட்டமைப்புச் செய்வது தொடர்பாக பரிசீலிக்க வேண்டும். இந்த இரட்டை வகிபாகமானது, அரச அதிகாரிகளால் மேற்கொள்ளப்படும் குற்றச்செயல்களை விசாரணை செய்வதில் நலமுரண்களை ஏற்படுத்துகின்றது. மொழி ரீதியிலும் இனரீதியாகவும் வேறுபட்டு, பிளவுபட்டுள்ள சமூகத்தில், ஒரு வழக்கில் முன்னேற்றம் காணப்படவேண்டுமா என்பதைப் பெரும்பாலும் தீர்மானிக்கும் வகிபாகத்தினைக் கொண்டுள்ள, விசாரணைகளை தொடர்வதற்கு அல்லது இடை நிறுத்துவதற்கும், குற்றவியல் வழக்கு விசாரணைகளுக்கான இடங்களைத் தெரிவு செய்வதற்கும் சட்டமா அதிபருக்கு இருக்கும் அதிகாரமானது பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததாகும் என்பதுடன், இது சிக்கல்களையும் ஏற்படுத்துகின்றது.”[192]

சுயாதீன வழக்குத்தொடுனர் அலுவலகம் அமைக்கப்பதற்கென குடியியல் சமூக அமைப்புக்களும் பல தசாப்தங்களாக ஆதரவு தேடிவந்துள்ளன. இருப்பினும், தொடர்ந்துவந்த அரசாங்கங்கள் இதுபற்றி எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. அரசியல் யாப்பின் 20ஆவது திருத்தச்சட்டமானது, சட்டமா அதிபரதும் சுயாதீன ஆணைக்குழுக்களதும் நியமனங்களை அரசியல் மயப்படுத்தியது. இத்திருத்தத்தின் மூலம் இப்பதவிக்கு யாரையும் நியமிப்பதற்கும் நீக்குவதற்கும் ஜனாதிபதிக்கே அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.[193] அரசியல் யாப்பின் 21ஆவது திருத்தச் சட்டம், இதனை சற்றுத் தலைகீழாக மாற்றியுள்ளது. ஆனால், எந்தவொரு நியமனமும், ஆளுங்கட்சியால் நியமிக்கப்படும் ஆட்களே பெரும்பான்மையாக உள்ள அரசியல்யாப்பு சபையின் பரிந்துரைகளுக்கு உட்பட வேண்டியுள்ளது.

[192] மேலேயுள்ள அறிக்கையின், 50 ஆவது பந்தி

[193] அரசியல்யாப்பின் 20ஆவது திருத்தம்

# 3. தீர்மானங்களும் பரிந்துரைகளும்

போர் இடம்பெற்ற ஏதோவொரு காலப்பகுதியில் அல்லது ஏதோவொரு வன்முறையில் இடம்பெற்ற தன்மீதான சர்வதேசக் குற்றங்கள் மற்றும் ஏனைய பாரதூரமான மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு பொறுப்புகூற முடியாமல் அல்லது அதற்கு விருப்பமில்லாமல் சிறிலங்கா அரசாங்கமானது இருப்பதை உறுதிப்படுத்துவதாகவே மனிதப் புதைகுழிகளைத் தோண்டுவதில் அது காட்டும் அசமந்தப்போக்கு மற்றும் அடுத்தடுத்து ஏற்பட்ட தோல்விகள் அமைகிறன. இது பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளை மிகமோசமாக மீறுவது மட்டுமன்றி, உண்மையை அறிந்துகொள்வதற்கான அவர்களின் உரிமையையும் மறுப்பதாக அமைகிறது.

மனிதப் புதைகுழியில் புதையுண்டோர் உள்ளிட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் மீது மேற்கொள்ளப்பட்ட மனித உரிமைமீறல் சம்பவங்களையும் அதற்கான காரணங்களையும் அவர்களது உறவினர்கள் அறிந்து கொள்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதும் அவை நிறைவேற்றப் படுவதை உறுதிப்படுத்துவதும் சிறிலங்கா அரசாங்கத்தின் கடமையாகும்.

சர்வதேச சட்டத்தின்படி, காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு என்ன நடந்தது, ஏன் நடந்தது என பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களால் எழுப்பப்படும் கேள்விகளுக்கு சரியான பதிலையும் ஆதாரங்களையும் வழங்குவதற்கும், இத்தகைய மனித உரிமை மீறல் சம்பவங்களுக்கு நேரடியாக மற்றும் மறைமுகமாகக் காரணமானவர்களை இனங்காணுவதற்கும், இத்தகைய மனித உரிமை மீறல்களின் வடிவங்களைப் புரிந்துகொள்வதற்கும் தொடர்ச்சியான கட்டமைக்கப்பட்ட விசாரணை முயற்சிகளை மேற்கொள்வதற்கும் மனிதப்புதைகுழி விவகாரத்தை தீர்த்து வைப்பதற்கும் நேர்மறையான மற்றும் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசானது கடமைப் பட்டுள்ளது.[194]

சர்வதேச சட்டத்தின்கீழ், மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பான விசாரணைகளுக்கு ஆதாரமாக அமைந்துள்ள இப் புதைகுழிகளை அவற்றின் தனித்தன்மையுடன் பேணிப் பாதுகாப்பது மிக முக்கியமானதாகிறது. அத்தகைய பாதுகாப்பு நடவடிக்கைகள் இறந்தவர்களின் எச்சங்களை இல்லாது செய்தல், களவு, நாசவேலை மற்றும் தடயங்களை இல்லாதொழிப்பதற்காக வேறொரு இடத்திற்கு மாற்றும் நடவடிக்கைகள் போன்ற வற்றிலிருந்து பாதுகாப்பதாக அமையவேண்டும்.

இத்தகைய கடமைகளை நிறைவேற்றுவதற்கான அரசியல் இணக்கப்பாடு ஒரு அரசிற்கு இல்லாதிருக்குமானால் அல்லது அரசினால் அவற்றை நிறைவேற்ற முடியாவிட்டால் அந்த அரசிற்கு உதவும் பொறுப்பு சர்வதேச சமூகத்திற்குள்ளது. பாதிக்கப் பட்டவர்களின் குடும்பங்களுக்கு உதவுவதிலும் தனது பொறுப்பில் சுதந்திரமாகவும் வெளிப்படையாகவும் அரசின் ஓர் அங்க நிறுவனமாக காணாமல் போன ஆட்கள் தொடர்பான அலுவலகத்தினால் செயற்பட முடியாவிட்டால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் காணாமல் போன ஆட்கள் தொடர்பான சர்வதேச ஆணைக்குழு உள்ளிட்ட சர்வதேச சமூகம் தலையீடு செய்யவேண்டும்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களின் ஈடுபாடின்மை, மட்டுப்படுத்தப்பட்ட தடயவியல் நிபுணர்களின் வளம், தெளிவற்ற நடைமுறைகள் மற்றும் அரசியல் தலையீடுகள் உள்ளிட்ட இந்த அறிக்கையில் இனங்காணப்பட்ட பல காரணங்கள், சர்வதேச மற்றும் உள்நாட்டுச் சட்டங்களை மீறி, பாதிக்கப்பட்டவர்களின் உண்மையை அறியும் உரிமையை முறியடிக்க அரசின் திட்டமிட்ட நடவடிக்கைகளுக்கு வலுச்சேர்த்திருக்கிறது. இந்தக் காரணங்கள் வலிந்து அல்லது விரும்பத்திற்கு மாறாக காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பணிக்குழு மற்றும் உண்மை, நீதி, இழப்பீடுகள் மற்றும் திரும்பவும் நடைபெறாது என்பதற்கான உத்தரவாதங்கள் தொடர்பான ஐ.நா.விசேட தூதுவர், உள்ளிட்ட ஐ.நா.வின் விசேட நடைமுறையிலும் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இது பற்றி சிறப்புத் தூதுவர் பின்வருமாறு கூறியுள்ளார்:

“நடுத்தர வருமானமுடைய சிறிலங்கா போன்றதொரு நாட்டில் இவ்வாறான பிரச்சினைகள் காணப்படுவது வழமைக்கு மாறானது.[195] சர்வதேச மனித உரிமைகள் மற்றும் சர்வதேச

[194] J E மெண்டீஸ் மற்றும் பறிவி “உண்மை, மற்றும் சர்வதேச பாதுகாப்புக்கான உரிமை' (ஜனவரி 2011), R Wolfrum (ed), Max Planck Encyclopaedia of Public International Law (online edn)

[195] op cit, para 48

மனிதாபிமான சட்டங்களுக்கு எதிராக, 'அரச அமைப்புக்களால்' நன்கு திட்டமிடப்பட்டு ஒழுங்கமைக்கப்பட்டு மேற்கொள்ளப்படும் பெரியளவிலான உரிமை மீறல்கள் மற்றும் முறைகேடுகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கைகளை எடுப்பதற்கும் பற்றாக்குறையாகவுள்ள நிபுணத்துவத்தை சிறிலங்கா மேம்படுத்திக்கொள்ள வேண்டும். விசாரணைகளை நடாத்துவதற்கான நிபுணர்கள்குழு, தடயவியல் மற்றும் வழக்கு விசாரணை உக்திகளை இது உள்ளடக்கும். அரச குற்றங்கள் தொடர்பான நீதித்துறையின் வளத்தை மேம்படுத்திக்கொள்வது அவசியமானதும் அவசரமானதும் ஆகும்."[196]

2017 இல் சிறப்பு பிரதிநிதி சிறிலங்காவுக்கு இறுதியாக வருகைதந்த பின்னரும் காணாமல் போன ஆட்களுக்கான அலுவலகத்தின் செயற்பாடுகள் உள்ளிட்ட 2020 இல் வெளிவந்த அறிக்கையின் பின்னர் சில முன்னேற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும், மனிதப் புதைகுழிகளைத் தோண்டுவது தொடர்பில் சர்வதேச ஒழுங்கு விதிகளையும் நன்கு நெறிப்படுத்தப்பட்டதொரு முறைமை பின்பற்றப்படுவதையும் உறுதிசெய்வதில் இன்னமும் நெடுந்தூரம் செல்லவேண்டியுள்ளது.

அடுத்துவரும் சந்ததியினருக்காகவும் மனிதப்புதைகுழி விவகாரத்தைக் கையாளுதல், அடையாளம் காணுதல், பின்னர் விசாரணை நடாத்துதல் போன்றவிடயங்கள் தொடர்பாக விசேட சட்டத்தையும் விதிமுறைகளையும் உருவாக்க வேண்டிய தேவை சிறிலங்காவுக்கு உள்ளது. அரச மற்றும் உள்ளூர் அதிகாரிகள், தொடர்புடைய குடும்பங்கள் மற்றும் சமூகங்கள் ஆகியோரின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய சட்ட அமைப்பை நிறுவுவதையும் இது உள்ளடக்கலாம். இந்த சட்ட அமைப்பானது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் மனிதப்புதைகுழிகளைப் பாதுகாப்பது மற்றும் விசாரணை நடாத்துவது தொடர்பில் காணாமல் போன ஆட்களுக்கான சர்வதேச ஆணைக்குழுவின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கியிருக்கலாம். அந்த சட்ட அமைப்பானது அரசியல் தலையீடுகளின்றி சுதந்திரமானதாகவும் வெளிப்படைத் தன்மையானதாகவும் இருக்கவேண்டும்.

[196] op cit, para 49

# 3.1 கடந்தகால அகழ்வுகளை நெறிப்படுத்துவதற்கான பரிந்துரைகள்

சிறிலங்கா அரசாங்கமானது:

1. மனிதப்புதைகுழி விவகாரத்தைக் கையாளுதல், அடையாளம் காணுதல், அகழ்தல், எச்சங்களைப் பேணுதல் மற்றும் பின்னர் விசாரணை நடாத்துதல் போன்றவிடயங்கள் தொடர்பாக விசேட சட்டத்தையும் விதிமுறைகளையும் உருவாக்க வேண்டும். எச்சங்களைப் பேணுவது என்பது மனிதப் புதைகுழிகளிலிருந்து எடுக்கப்பட்ட எலும்புகள் அல்லது மண்ணைப் பாதுகாப்பாக வைப்பதும் அது தொடர்பான ஆவணப்பதிவுகளைப் பேணுதல்;

2. அரச மற்றும் உள்ளூர் அதிகாரிகள், தடயவியல் நிபுணர்கள் தொடர்புடைய குடும்பங்கள் மற்றும் சமூகங்களின் பிரதிநிதிகள் என மனிதப் புதைகுழிகளை அகழ்வதில் ஆர்வமுள்ளவர்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய சட்ட அமைப்பொன்றை நிறுவுதல்;

3. பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பதிலுக்காகக் காத்திருக்கும் ஒவ்வொரு அகழ்விடத்திற்கும் ஒரு குடும்ப இணைப்பாளரை நியமித்தல்;

4. அகழ்தெடுக்கப்பட்ட எச்சங்களுள் தமது உறவினர்களும் இருக்கலாம் என சந்தேகிக்கும் உறவினர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி, அவர்களிடம் தகவலைத் தெரிவித்து அவர்களின் ஒப்புதலுடன் மரணத்துக்கு முந்தைய தகவல் மற்றும் மரபணு என்பவற்றைப் பெற்றுக்கொள்ளுதல்;

5. இன்றுவரை மீட்கப்பட்ட எச்சங்களையும் அதனுடன் கண்டெடுக்கப்பட்ட உடமைகளையும் மற்றும் ஏனைய பொருட்களையும் உறவினர்கள் பார்த்து அடையாளம் காண்பதற்கு வாய்ப்பளிப்பதுடன் அடையாளங் காணப்பட்ட எச்சங்களை உரியவர்களிடம் கையளித்தல்;

6. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான 2018 சட்டத்தின் 17(1) சரத்துப்படி, மனிதப்புதைகுழிகள் மற்றும் வலிந்து காணாமல்ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான விசாரணைகளைத் தடுப்பதற்கு பொறுப்பானவர்களை சட்டத்தின்முன் நிறுத்துதல்;

7. காணாமல் போனோரின் உறவினர்களுடன் நெருக்கமான கலந்துரையாடல் மற்றும் கூட்டுறவுடன் இன்றுவரை முன்னெடுக்கப்படும் அகழ்வு நடவடிக்கைகளை மீள்பரிசீலனை செய்து, அது தொடர்பான முழுமையான அறிக்கைகளை வெளியிடுவதுடன் அவற்றை சர்வதேச தரத்திற்குக் கொண்டுசெல்லுதல்;

8. முன்வைக்கப்பட்டுள்ள சட்டக்கட்டமைப்பு, கொள்கை, மனிதப் புதைகுழிகள் தொடர்பான நியம செயற்பாட்டு நடைமுறைகள் மற்றும் எலும்பு எச்சங்களை ஆராய்வதற்கான விதிமுறைகள் போன்றவற்றைப்பற்றி சர்வதேச நிபுணர்களை உள்ளடக்கி வெளிப்படையான கலந்துரையாடலை மேற் கொள்ளுதலும், எந்தவொரு கட்டமைப்பு அல்லது கொள்கை மற்றும் தரப்படுத்தப்பட்ட நடவடிக்கை ஒழுங்குமுறை போன்றவை மின்னசோட்ட மற்றும் போண்மௌத் தீர்மானங்களை உள்ளடக்கியிருப்பதை உறுதிப்படுத்துதல்;

9. பாதிக்கப்பட்டவர்கள் தமது தேவைகளையும் கோரிக்கைகளையும் முன்வைப்பதற்கு ஏதுவான சூழலை ஏற்படுத்தி, மனிதப் புதைகுழிகளை மரியாதையுடனும் சட்டரீதியாகவும் கையாளப்படவேண்டும் என்பதை அரச அதிகாரிகள் புரிந்து கொள்வதையும் அதன்படி செயற்படுவதையும் உறுதிசெய்வதன்மூலம் வேறுபாடுகளை சமநிலைப்படுத்தி, மோதல்கள் மற்றும் பதட்டங்களைத் தவிர்த்தல்; அத்துடன் பாதிக்கப்பட்டவர்களும் தமது முழு விருப்பத்துடன் மனிதப் புதைகுழிகள் அமைந்துள்ள நிலங்களின் உரிமையாளர்களும் இந்த நடவடிக்கைகளில் முழுமையாகப் பங்களிப்பது அவசியமாகிறது;

10. கட்டவிழ்த்துவிடப்பட்ட படுகொலைகள், வலிந்து காணாமல் போதல்கள் உள்ளிட்ட மனிதப்புதைகுழி விவகாரத்துடன் தொடர்புடைய பல்வேறு வன்முறைச் சம்பவங்கள் பற்றிய உண்மைகளை விசாரணைகளுக்கு ஊடாகப் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் அறிந்து கொள்வதற்கான உரிமையை நிலைநாட்டுவது அரசினதும் ஏனைய கட்சிகளினதும் கடமை என்பதை அரசாங்கம் ஏற்றுக் கொள்வதை உறுதிசெய்தல்;

11. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு, குறிப்பாக அதிகாரத்தில் உள்ளவர்களுடன் தொடர்பு கொள்ளும்போது தேவையான உளநல ஆதரவு கிடைப்பதை உறுதிசெய்தல். உளவளச் சிகிச்சை, ஆன்மிக ஆதரவு, பாதிக்கப்பட்ட ஏனையவர்களின் உதவி மற்றும் குடும்பத்தின் ஆதரவை இது உள்ளடக்கியிருக்க வேண்டும். கிடைக்கக்கூடிய சேவைகளின் தரத்தைப்பற்றி எதிர்மறையான கருத்துக்கள், ஏனையவர்களால் வெளியிடப்படும் விமர்சனங்களை எண்ணி வருந்துதல், கிடைக்கக்கூடிய சேவைகளின் பற்றாக்குறை மற்றும் எங்கு உதவிகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்பது தொடர்பான அறியாமை போன்றன மிகப்பெரிய தடைகளாக அமைகின்றன. காணாமல் போனோர்களின் உறவினர்களுக்குத் தேவையாக இருப்பது விசாரணைகள் மற்றும் அகழ்வின்போது

அவர்களுடன்கூட நின்று அவர்களுக்குத் தேவையான தகவல்களையும் உளரீதியான ஆதரவையும் வழங்குவதே;

12. அகழ்வு மற்றும் தடயவியல் ஆய்வின் ஒவ்வொரு நிலையிலும் நீதிபதி, உள்ளூர் காவல்துறை, சி.ஐ.டி, சட்டமா அதிபர் அலுவலகம், தடயவியல் நிபுணர்கள் (சட்ட மருத்துவ அதிகாரிகள், மூத்த சட்ட மருத்துவ அதிகாரிகள், தடயவியல் அகழ்வாராய்வாளர்கள், எலும்பியல் நிபுணர்கள் மற்றும் ஏனைய வல்லுநர்கள்) ஆகியயோரின் கடமைகள் பற்றி விரிவாக வரையறுத்தல்;

13. மனிதப் புதைகுழிகள் தொடர்பானது உள்ளிட்ட. நாட்டின் தடயவியல் ஆய்வுத் திறனை மேம்படுத்தல்; காணாமல் போனவர்கள் தொடர்பான அகில இலங்கை ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு பரிந்துரைத்தது போன்று, 'தேவையான நிபுணத்துவம் கிடைக்கும்வரை' அகழ்வுப்பணிகள் இடைநிறுத்தி வைப்பதுடன், மரபணு விவரக்குறிப்பு, கணணி மயப்படுத்தப்பட்ட முக மீள்உருவாக்கம் மற்றும் முகஅடையாளம் காண்தல், காணொளி மூலமான முகவுருக் கட்டமைப்பு ஒப்பீடு, மற்றும் உடற்கூற்றளவையியல்சார் ஆய்வுகள் உள்ளட்ட வசதிகள் கொண்ட ஆள் அடையாளம்காணும் மையம் ஒன்றினை உருவாக்கி, நோயியல் நிபுணர்களுக்கும் இதர விஞ்ஞானிகளுக்கும் பயிற்சிகள் வழங்குதல்; அதுவரை புதைகுழிகள் தொடர்பான தகவல்களைத் திரட்டுவதற்காக சிறப்புக் கட்டமைப்பொன்றை அமைத்தல். பலவிதமான இலத்திரனியல் தொழினுட்பங்கள் மனிதப் புதைகுழிகளைக் கண்டுபிடிப்பதிலும் அவற்றைக் கையாளுவதிலும் பெரும் பங்காற்றுகின்றன. செயற்கைக்கோள் படங்கள், தானியங்கி விமானங்களைப் பயன்படுத்தி எடுக்கப்படும் வான்வழிப் புகைப்படக்கருவி, ஒளி மற்றும் அலைவரிசைக் கருவி (LiDAR), புவியியல் பகுப்பாய்வு மற்றும் வெப்பப் படங்கள் ஆகியவை இதிலடங்கும்.[197] இத்தகைய புதிய தொழினுட்பங்கள் மனிதப் புதைகுழிகள் அமைந்துள்ள இடங்களைக் கண்டறிவதற்கும் அவற்றின் காலப்பகுதியைக் கண்டறிவதற்கும் பயன்படுத்தப்பட வேண்டும். கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிகள்பற்றிய தகவல்களை இரகசியமாக வைத்திருப்பதற்கும் அவை சேதமாக்கப்படுவதைத் தடுப்பதற்குமான வாய்ப்பையும் இத்தகைய தொழினுட்பங்கள் வழங்குகின்றன;[198]

14. தடயவில் ஆய்வுக்கான வளங்கள் கட்டியெழுப்பப்பட்டு புதிய சட்டம் மற்றும் கொள்கைக் கட்டமைப்பு நடைமுறைக்கு வரும்வரை புதிய அகழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளாதிருத்தல்;

15. எந்தவொரு அகழ்வு நடவடிக்கையிலும் சர்வதேச கண்காணிப்பாளர்கள் உடனிருப்பதை உறுதிசெய்தலும் சிக்கலான சூழ்நிலைகளில் சர்வதேச தடயவியல் நிபுணர்களின் உதவியைப் பெறுதலும்;

16. சட்டமா அதிபரின் அலுவலகத்தை மீளக்கட்டியமைத்தல் மற்றும் அகழ்வுகள் தொடர்பான எந்தவொரு வழக்குகளும் சுதந்திரமாக, நடுவுநிலமையுடன் நடாத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு **சுதந்திரமான பொதுமக்கள் வழக்குசேவை ஒன்றை** உருவாக்குதல்;

17. சிறிலங்கா சமூகங்களின் மத மற்றும் இன பல்லினத் தன்மையைக் கருத்தில் கொண்டு, மரணத்திற்கான காரணம் வன்முறையாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் பல்வேறுபட்ட மக்கள் தமது மதக் கிரியைகளை இடையூறின்றி மேற்கொள்வதற்கு ஆதரவளித்தல். இத்தகைய சடங்குகளும் கிரியைகளும் மதச்சுதந்திரம், நம்பிக்கை மற்றும் கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம் போன்ற மனித உரிமையின் அங்கமாக இருப்பதால் அவர்கள் அவற்றைக் கடைப்பிடிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்துவது அரசின் கடமையாகிறது;

18. பொதுமக்கள் அமைப்புக்கள் மற்றும் காணாமல்போனோரின் குடும்பங்களுடனான முழுமையாகக் கலந்துரையாடியபின், காணாமல் போதல் சம்பவங்களைத் தடுப்பதையும் ஏற்பட்ட தவறுகளை நிவர்த்தி செய்வதைப் பிரதிபலிக்கும் வகையிலும் சிறிலங்காவினால் தயாரிக்கப்பட்ட ஆரம்ப அறிக்கையை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அமைப்புக்கு அனுப்புதல்;

19. பொறுப்பு வகிப்பவர்களும் பணியாளர்களும் தேவையான நிபுணத்துவத்தைக் கொண்டிருப்பதுடன் சுதந்திரமாகவும் பக்கச்சார்பின்றியும் பணியாற்றுவதை உறுதிப்படுத்துவதன் மூலம், காணாமல்போன ஆட்கள் தொடர்பான அலுவலகத்தைப் பலப்படுத்துதல்; காணாமல்போன ஆட்கள்

[197] See eg D Abate, C Sturdy Colls, N Moyssi et al, 'Optimizing Search Strategies in Mass Grave Location through the Combination of Digital Technologies', Forensic Science International: Synergy (2019) 95-107; Congram D, Kenyhercz M, Green AG. மோதல்களின் காலணமல்போன ஆட்களைத் தேடுவதற்கு ஆதரவாக புதைகுழிகளின் வரைபடமிடல். Forensic Sci Int 2017; 278:260-268. doi:10.1016/j.forsciint.2017.07.021.

[198] காணாமல்போபோன ஆட்கள் தொடர்பான சர்வதேச ஆணைக்குழு மனிதப்புதைகுழிகளைக் கண்டறிவதற்கான சிறந்த வழிமுறைகளை கண்டுள்ளது, www.icmp.int/press-releases/icmp-finds-improved-methods-for-locating-mass-graves/.%20ifapYk;

தொடர்பான அலுவலகத்தின் விசாரணை முடிவுகள் எவையும் அரச தரப்பினர் சேதங்களுக்கு நட்டஈடு செலுத்துவதோ அல்லது ஒரு வழக்கில் ஏனைய நீதிமன்ற அமுலாக்கங்களைப் பின்பற்ற வேண்டிய அவசியமோ இல்லை என்று குறிப்பிடும் சரத்து 13 (2) ஐ இரத்துச் செய்தல்;

20. நீதிபதிகளுக்கு போதுமானளவு ஒத்துழைப்பு வழங்காமை மற்றும் நீதிபதியின் உத்தரவுகளை நிறைவேற்றத் தவறுவது என்பன தண்டனைக்குரிய குற்றமாக்குதல்;

21. தேசிய நிலைமாற்று நீதியின் ஒரு பகுதியாக, தனிப்பட்ட நிறுவனங்களின் பங்களிப்பைத் தெளிவாக வரையறுத்து, ஒரு தேசிய அகழ்வுப் பணிக்கான கொள்கையை உருவாக்குதல்;

22. பாதுகாப்பு மற்றும் இடமாற்றங்களைக் கண்காணிக்கும் படிமுறைகள் தொடர்பான அதிகாரப்பூர்வ பதிவுகளை உருவாக்குதல் மற்றும் வழக்குப் பதிவின் ஒரு பகுதியாக நம்பகத்தன்மையையும் வெளிப்படைத் தன்மையையும் உறுதி செய்தல் போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதை உறுதிசெய்யும் கொள்கை ஆவணம் ஒன்றை வெளியிடல்;

23. முன்மொழியப்பட்ட விசாரணைச் சட்டத்தை இயற்றுதல்;

24. மேலும், பாதிக்கப்பட்டவர்களும் அவர்களது குடும்பங்களும் தமது உரிமைகள் மற்றும் கிடைக்கக்கூடிய தீர்வுகள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் உரிமையை உறுதிசெய்யும் வகையிலும், பாதிக்கப்பட்டவர்களும் அவர்களது குடும்பங்களும் சாட்சிகளும் அச்சுறுத்தல்கள், துன்புறுத்தல்கள் மற்றும் பழிவாங்கல்களிலிருந்து பாதுகாக்கப்படுவதை உறுதி செய்யும் வகையிலும் குற்றச் செயல்களில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளைப் பாதுகாக்கும் சட்டம் இல 4 2015 இல் திருத்தங்களைக் கொண்டுவருதல்.[199]

[199] இதுவும் சிறிலங்காவின் 6வது அறிக்கை மார்ச் 2023 இல் பரிசீலித்த பின்னர், இது மனித உரிமை சபையினால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளாகும். ஐ.நா. அறிக்கை CCPR/C/LKA/CO/6 of 24 Mar 2023, para 13 (b), https://tbinternet.ohchr.org/_layouts/15/treatybodyexternal/TBSearch.aspx?Lang=en&TreatyID=8&CountryID=164&DocTypeID=5

# 3.2 எதிர்கால அகழ்வுகள் தொடர்பில் காணாமல்போன ஆட்கள் தொடர்பான அலுவலகம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் காணாமல்போன ஆட்கள் தொடர்பான சர்வதேச ஆணைக்குழு உள்ளிட்ட சர்வதேச சமூகத்தினருக்கான பரிந்துரைகள் [200]

1. மனிதப் புதைகுழிகள் இருக்கக்கூடிய ஏனைய அமைவிடங்கள் தொடர்பாக விசாரணை நடாத்துவதற்கு விசேட நிபுணத்துவம்பெற்ற குழுவொன்றை அமைத்தல். அவர்களது தடயவியல் தொடர்பான நிபுணத்துவத்தை மேம்படுத்துவதுடன் அவர்களிடம் மரபணுப் பரிசோதனை உள்ளிட்ட வளங்கள் இருப்பதை உறுதிசெய்தல்;

2. தாமதமின்றி மனிதப்புதைகுழிகள் இருப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ள அனைத்து அமைவிடங்களையும் ஆராய்தல், அவற்றின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு போர்ண்மௌத் நெறிமுறையின் விதிமுறைகளுக்கமைய தரவுத்தளம் ஒன்றை உருவாக்குதல்;

3. பதவிக்காலத்தின் பாதுகாப்பு, சேவை நிபந்தனைகள், பணியாளர்கள் நிர்வாகம் மற்றும் நீதித்துறையில் உள்ள ஒழுங்கு விவகாரங்கள், பதவி உயர்வுகள் மற்றும் பணிநீக்கங்கள், அத்துடன் சர்வதேச குற்றங்கள் பற்றிய பயிற்சி ஆகியவற்றை உள்ளடக்கி நீதிச் சுதந்திரத்தைப் பலப்படுத்துதல்.

[200] ICPPED இன் சரத்து 15 ஆனது சாசனத்தில் உறுப்புரிமை உள்ள நாடுகள் 'ஏனைய நாடுகளுடன் ஒன்றிணைந்து தேவையேற்படும் நாட்டிற்கு பரஸ்பர உதவிகளைப் புரிந்து, அதன்மூலம் வலிந்து காணாமல் ஆக்கப்படுதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுதல், தேடுதல், கண்டுபிடித்தல், விடுதலை செய்தல் மற்றும் மரணம் ஏற்படுமிடத்தில் அகழ்வு நடவடிக்கை, அடையாளம் காணுதல் மற்றும் உரியவர்களிடம் கையளித்தல்; என்பவற்றை வலியுறுத்துகிறது.

# பின்னிணைப்பு :

## இன்றுவரை மனித எச்சங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்ட இடங்களின் பட்டியல்

| திகதி | இடம் | பின்னணி | கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்களின் எண்ணிக்கை | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|---|
| 1989 | கொகன்டார, கொழும்பு மாவட்டம் | 1987–1989 ஜே.வி.பி கிளர்ச்சிக் காலத்தைச் சேர்ந்த மனித எச்சங்கள். | 19 சடலங்கள். அத்துடன் அவர்களின் பெயர்களும் வெளிவந்தன.[201] | ஜே.வி.பி யால் கொல்லப்பட்ட உள்ளூர் காவல் நிலையப் பொறுப்பதிகாரி ஒருவருடைய இறுதிச் சடங்கு நடந்த, 1989 ஓகஸ்ற் 13 இற்குப் பின்னர் வந்த வாரத்தில் கைது செய்யப்பட்ட மக்களும் இதில் உள்ளடங்குவர் என்று மேற்கு, தெற்கு, மற்றும் சப்ரகமுவா மாகாணங்களுக்கான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் (Western, Southern, Sabaragamuwa (Presidential) Commission of Inquiry-WSSC) இறுதி அறிக்கையின் இரண்டாம் தொகுதியிலுள்ள இச்சம்பவம் தொடர்பான சுருக்கக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. அன்றைய தினம் அமரகொட–கொகன்டார வீதியில் குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்றும் நிகழ்ந்தது. [202] ஒரு வாரத்தின் பின்னர், அதாவது ஓகஸ்ற் 21ஆம் திகதி, ஏழாம் நாள் அன்னதான நிகழ்வு நடந்த அன்றைய தினம் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டவர்களது சடலங்கள் குண்டுவெடிப்பு நடந்த இடத்தில் வைத்து எரிக்கப்பட்டன. இச்சடலங்கள் நீதிபதி ஒருவரின் உத்தரவின் பேரில் மீட்கப்பட்டதாக மேற்கு, தெற்கு, மற்றும் சப்ரகமுவா மாகாணங்களுக்கான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின் முதல் தொகுதியில் கூறப்பட்டுள்ள போதிலும், அது பற்றிய மேலதிகமான தகவல்கள் எதுவுமே குறிப்பிடப்படவில்லை.[203] |

[201] Final report of the WSSC, Vol II, p83 - 112

[202] Final report of the WSSC, Vol II, p83 - 112

[203] *Ibid,* p. 117

| | | | | |
|---|---|---|---|---|
| 1989 | அன்பும்புர, கண்டி மாவட்டம் | 1987–1989 ஜே.வி.பி கிளர்ச்சிக் காலத்தைச் சேர்ந்த மனித எச்சங்கள். | 39 | இப்பகுதி இருந்தமை மேற்கு, தெற்கு, மற்றும் சப்ரகமுவா மாகாணங்களுக்கான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் நீதிபதி ஒருவரின் உத்தரவின் பேரில் சடலங்கள் மீட்கப்பட்டதாகவும் இவ்வாணைக் குழுவின் அறிக்கை குறிப்பிடுகின்றது.[204] |
| 1989 | நிகவறெட்டிய, குருணாகல் மாவட்டம் | 1987–1989 ஜே.வி.பி கிளர்ச்சிக் காலத்தைச் சேர்ந்த மனித எச்சங்கள். | 20 | இப்பகுதி இருந்தமை மேற்கு, தெற்கு, மற்றும் சப்ரகமுவா மாகாணங்களுக்கான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் நீதிபதி ஒருவரின் உத்தரவின் பேரில் சடலங்கள் மீட்கப்பட்டதாகவும் இவ்வாணைக்குழு குறிப்பிடுகின்றது. [205] ஆனால் மீட்கப்பட்ட இச்சடலங்களுக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை. |
| 1989 | வில்பிட்டிய, அக்குறேசா, மாத்தறை மாவட்டம் | 1987–1989 ஜே.வி.பி கிளர்ச்சிக் காலத்தைச் சேர்ந்த மனித எச்சங்கள். | சடலங்களின் சரியான எண்ணிக்கை தெளிவில்லை | மேற்கு, தெற்கு, மற்றும் சப்ரகமுவா மாகாணங்களுக்கான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின்படி, இராணுவ முகாம் ஒன்றின் அருகிலேயே இப்புதைகுழி இருந்துள்ளது.[206] |
| 1990 | வவுல்கெல்லெ, கம்பகா மாவட்டம் | ஜே.வி.பி கிளர்ச்சிக் காலத்தில் இறுதியாக இடம்பெற்ற பெருமெண்ணிக்கையில் நடந்த கொலையாக இருக்கும் என்று கருதப்படுகின்றது. | வவுல்கெல்லெ வனப் பகுதியில் வைத்து 12 பேர் கொலை செய்யப்பட்டு, ரயர்களில் போட்டு எரிக்கப்பட்டனர். | 1990 பெப்ரவரி 27ஆம் திகதியன்று, இரு மாணவர்கள் உட்பட, 17–34 வயதுக்குட்பட்ட குறைந்தது 13 இளையவர்கள் வீரகுல மற்றும் கனமுல்ல காவல்துறை நிலையங்களைச் சேர்ந்த காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு, அற்றானகலவிலுள்ள வவுல்கெல்ல வனப்பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள்.[207] இவர்களில் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் தப்பிய நிலையில், 12 பேரும் சித்திரவதை செய்யப்பட்டு, [208] சுடப்பட்டு, |

[204] Final report of the WSSC, Vol I, p117

[205] *Ibid,* p. 117

[206] *Ibid,* p 117

[207] http://archives.dinamina.lk/manchu/art.asp?id=2010/11/09/mPg04_0

[208] https://www.silumina.lk/2017/04/22/%E0%B6%AF%E0%B7%9A%E0%B7%81%E0%B6%B4%E0%B7%8F%E0%B6%BD%E0%B6%B1%E0%B6%BA/%E0%B6%91%E0%B6%AF%E0%B7%8F-%E0%B6%B7%E0%B7%93%E0%B7%82%E0%B6%AB%E0%B6%BA-%E0%B6%87%E0%B7%83%E0%B7%92%E0%B6%B1%E0%B7%8A-%E0%B6%AF%E0%B7%94%E0%B6%A7%E0%B7%94-%E0%B7%83%E0%B7%8F%E0%B6%9A%E0%B7%8A%E0%B7%82%E0%B7%93%E0%B6%9A%E0%B6%BB%E0%B7%94-%E0%B6%B8%E0%B7%92%E0%B6%BA-%E0%B6%BA%E0%B6%BA%E0%B7%92

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | ரயர்களில் போட்டு எரியூட்டப்பட்டார்கள்.[209] கொலை செய்யப்பட்ட இடத்திற்கு விஜயம் செய்த சட்ட வைத்திய அதிகாரி, சடலங்கள் எரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட மரக்குற்றிகள் மற்றும் ரயர்களில் நெருப்பு எரிந்துகொண்டிருந்ததைக் கண்டதாக குறிப்பிட்டார். [210] உயிர்தப்பிய அந்த ஒருவராலும், கைதுசெய்யப்பட்ட நிகழ்வைக் கண்ட, கொல்லப்பட்டவர்களது குடும்ப உறுப்பினவர்களால் வழங்கப்பட்ட ஆதாரங்களில், 14 காவல்துறை அதிகாரிகள் ஆரம்பத்தில் கைதுசெய்யப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. சட்டமா அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைய, 1990 யூலையில் ஏழு பேர் நீதிபதியால் விடுவிக்கப்பட்டார்கள். எஞ்சிய 7 பேர் மீதும் ஆட்கடத்தல் மற்றும் கொலைவழக்குப் பதியப்பட்டது. 1991 நவம்பரில், இவர்களில் ஒருவர் அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரியால் கொலை செய்யப்பட்டார். எஞ்சிய அறுவரில், நான்கு அதிகாரிகள் 1994 இன் தொடக்கத்தில் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டனர். [211] எனினும், 2000ஆம் ஆண்டில், சாட்சிய முரண்பாடுகள் காரணமாக அனைவரும் விடுவிக்கப்பட்டனர். இச்சம்பவத்தில் உயிர் தப்பிய அந்த ஒரேயொரு நபரும் 2017 ஏப்ரலில் மரணமடைந்தார்.[212] |
| 1994 | வல்பிட்ட அரசாங்க பண்ணை, மினுவன்கொட,<br><br>கம்பகா மாவட்டம் | மனித எச்சங்கள் ஜே.வி.பி. சந்தேக நபர்களுடையதாக இருக்கலாம். | உள்ளூர் நீதிபதி ஒருவருடைய பணிப்புரையின் கீழ் 30 உடல்கள் தோண்டி எடுக்கப்பட்டன. | ஒரு பண்ணை, உள்ளூர் தபால் அலுவலகம், வங்கி, சந்திக்கு அருகிலிருந்த ஒரு தனியார் கடை ஆகியவற்றின் மீது ஜே.வி.பி நடாத்திய தாக்குதலின் பின்னரேயே இப்பாரிய புதைகுழி உருவாக்கப் பட்டதாக மேற்கு, தெற்கு, மற்றும் சப்ரகமுவா மாகாணங்களுக்கான ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவின் இறுதி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. 1994 இல் நடந்த ஆரம்ப விசாரணைகளைத் தொடர்ந்து, மேற்கு மாகாண சபையின் தலைவர் ஆரியவர்த்தன ஜயதிலக உட்பட 14 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டார்கள். |

[209] https://www.wsws.org/en/special/library/fi-18-1/34.html

[210] https://www.facebook.com/groups/184919468292372/posts/1415740908543549/

[211] https://www.amnesty.org/en/wp-content/uploads/2021/09/ASA370151994ENGLISH.pdf

[212] https://www.silumina.lk/2017/04/22/%E0%B6%AF%E0%B7%9A%E0%B7%81%E0%B6%B4%E0%B7%8F%E0%B6%BD%E0%B6%B1%E0%B6%BA/%E0%B6%91%E0%B6%AF%E0%B7%8F-%E0%B6%B7%E0%B7%93%E0%B7%82%E0%B6%AB%E0%B6%BA-%E0%B6%87%E0%B7%83%E0%B7%92%E0%B6%B1%E0%B7%8A-%E0%B6%AF%E0%B7%94%E0%B6%A7%E0%B7%94-%E0%B7%83%E0%B7%8F%E0%B6%9A%E0%B7%8A%E0%B7%82%E0%B7%93%E0%B6%9A%E0%B6%BB%E0%B7%94-%E0%B6%B8%E0%B7%92%E0%B6%BA-%E0%B6%BA%E0%B6%BA%E0%B7%92

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் ஒருவரான SSP நோயல் குடகெட்டி 1995 நவம்பரில் பிணையில் விடுவிக்கப்பட்டார். எனினும் இவரது பிணையினை இரத்துச் செய்யுமாறு, நீர்கொழும்பு உயர் நீதிமன்றத்திடம் காவல்துறைமா அதிபர் கோரிக்கை விடுத்தார். அதற்கு நீதிமன்றம் செவிசாய்த்தது. எனினும் ஓராண்டுக்குப் பின்னர், அதாவது 1996 செப்ரெம்பரில் சந்தேக நபர்களில் 11 பேரை விடுவிக்குமாறு காவல்துறைமா அதிபர் நீதி மன்றத்தைக் கேட்டுக் கொண்டார்.[213] இவ்வழக்கினை நடத்தி வந்த நீதிபதி பாலிய பண்டாரநாயக்கா அவ்வழக்கிலிருந்து நீக்கப்பட்டார். ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியிலிருந்து ஆளும் மக்கள் கூட்டணிக்கு மாறிய பின்னர், அரியரட்ண ஜயதிலகவும் பின்னர் குற்றமற்றவராக அறிவிக்கப் பட்டார். 2000 ஆண்டில் அரசியலிலிருந்து ஓய்வுபெற்ற அவர், 2015 இல் மரணமடைந்தார்.[214] பிரதிப் காவல்துறைமா அதிபராக ஓய்வு பெற்ற நோயல் குடகெட்டி, 2021 மார்ச்சில் மரணமடைந்தார்.[215] |
| 1994 | சூரியகந்தை, இரத்தினபுரி மாவட்டம் | 1987–1989 ஜே.வி.பி. கிளர்ச்சிக் காலத்தைச் சேர்ந்த மனித எச்சங்களாக இருக்கலாம் என்று கருதப்பட்டன. | 300 இற்கும் அதிகமானவை. எம்பிலிப்பிட்டியாவிலிருந்து காணாமற்போன பாடசாலை மாணவர்கள் உட்பட, 46 சிறுவர்களது மனித எச்சங்கள் இருந்ததாகச் சொல்லப் பட்டது. ஆனால், தொழில் நுணுக்கம் தெரியாதவர்களால் அகழ்வு மேற்கொள்ளப் பட்டதால், ஆதாரங்கள் தொலைந்து போயின. | இப் புதைகுழிகள் கண்டுபிடிப்புத் தொடர்பான நீதித்துறை விசாரணை எம்பிலிப்பிட்டிய நீதவான், திரு.பிஜசேன ரணசிங்கவின் பணிப்பின் கீழ், 1994 ஜனவரி 3ஆம் திகதி ஆரம்பமாகியது. றுகுண பல்கலைக் கழகத்தின் சட்ட மருத்துவப் பிரிவுவைச் சேர்ந்த பேராசிரியர் நிறியல்லகே சந்திரசிறி, தலைமை சட்ட மருத்துவ அதிகாரி எல்.பி.எல்.டி அல்விஸ், கொழும்பு தெற்கு போதனா வைத்திய சாலையின் தலைமைச் சட்ட மருத்துவ அதிகாரி எஸ்.எம்.கோலம்பேகே ஆகியோர் இவ் அகழ்வுக்குப் பொறுப்பாக இருந்தார்கள். முறையாசர் பயிற்சியற்ற கூலித்தொழிலாளிகளும், பிக்கான்கள் போன்ற கருவிகளும் மற்றும் புள்டோசர்களும் அகழ்வுக்குப் பயன்படுத்தப்பட்டன. இதனால் எலும்புக் கூடுகள் சிதைவடைந்ததுடன், ஒன்றுக்கொன்று கலந்தும் போயின.[216] முதலாம் நாள், ஏழு மண்டை ஓடுகளும், கிட்டத்தட்ட 20 வரையான சடலங்களைச் |

[213] 'Hiru' magazine, Nov-Dec 1996

[214] https://www.dailynews.lk/2017/06/24/local/119927/condolence-messages

[215] https://dailynews.lk/2021/03/15/obituaries/244011/obituaries

[216] See https://www.sundayobserver.lk/2018/11/04/news-features/sooriyakanda-gruesome-and-forlorn-grave

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | சேர்ந்தவையாக இருக்கும் என்று கணிப்பிடப்பட்ட ஒருதொகை எலும்புகளும் மீட்கப்பட்டன. இவ்வாதாரங்களை பத்திரப்படுத்திப் பாதுகாக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார். இரண்டாம் கட்ட அகழ்வு ஜனவரி 8 ஆம் திகதி நடைபெறுவதாக இருந்தது. ஆனால் எதிர்த்தரப்பு வழக்குரைஞர்கள் அவ்விடத்திற்கு வந்தபோது, அப்புதை குழிகள் சிதைக்கப்பட்டிருந்ததாக அவர்கள் நினைத்தார்கள். ஒரு புதைகுழி அகலமாக்கப்பட்டிருந்தாகவும், இன்னுமொரு புதைகுழியில் தண்ணீர் பாய்ச்சப்பட்டு, அதன் பின்னர் புதிய மணல் கொண்டு மூடப்பட்டது எனவும், ஒரு மண்டையோடும், காவித்துண்டு ஒன்றும் ஒரு குழியில் போடப்பட்டிருந்ததாகவும் கூறி எம்பிலிப்பிட்டிய நீதிபதியிடம் எதிர்ப்புத் தெரிவிக்கப் பட்டது. இப்புதிய “ஆதாரத்தினை“ மேலதிக விசாரணைகளுக்காக தனியாக பத்திரப் படுத்திப் பாதுகாப்பாக வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். ஜனவரி 8ஆம் திகதி மாலையளவில், மேலும் ஆறு மண்டையோடுகளும், ஒரு தொகை கால் எலும்புகளும் மீட்கப்பட்டன. எலும்புகளில் சில இளையவர்களுடையது என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. அத்துடன் குறைந்தது இரு மண்டையோடுகளாவது கண்கள் கட்டப்பட்ட நிலையில் இருந்தன. அதே வேளையில், பாரிய மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு அரசாங்கம் சி.ஐ.டி. அணியொன்றை அமைத்தது. அதுமுதல், அகழ்வுப் பணிகள் நடந்த பெரும்பாலான நேரங்கள் முழுவதும் சி.ஐ.டி. அதிகாரிகள் அவ்விடத்தில் பிரசன்னமாகியிருந்தார்கள். ஜனவரி 10 ஆம் திகதி அன்று, எம்பிலிப்பிட்டிய நீதவான் நீதிமன்றிலிருந்த மனித எச்சங்களை அடையாளம் காண்பதற்கு பொது மக்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அவ் எலும்புகள் மனிதர்களுடையவைதானா என்பதை உறுதிப்படுத்துவதற்கும், மரணங்கள் நடந்த காலப் பகுதியை தெளிவாகக் கண்டறிவதற்கும், எதனால் மரணங்கள் நடந்தன என்பதை தீர்மானிப்பதற்கும், அம் மனித எச்சங்கள் கொழும்பிலுள்ள சட்ட மருத்துவ அதிகாரிக்கு பின்னர் அனுப்பி வைக்கப் பட்டன. 1995 ஜனவரி 17 அன்று, எதிர்த்தரப்பு பிரதான வழக்குரைஞர் வழக்கு விசாரணைகளைப் பிற் போடுமாறு கேட்டுக்கொண்டார். காரணம், சில சாட்சியங்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதும், ஜனவரி 10ஆம் திகதி, நீதிமன்றத்திலிருந்து வீடு திரும்பும் வழியில் தலைமை வழக்குரைஞர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | சுடப்பட்டதுமாகும். மேலதிக நடவடிக்கைகள் எடுப்பதற்கு சட்ட மருத்துவ அதிகாரியின் விசாரணை களின் முடிவுக்காகக் காத்திருப்பதாக அரசாங்கம் கூறியிருந்ததாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.[217]<br><br>பாடசாலைச் சிறுவர்களினது பெற்றோர்களால் மேற்கொள்ளப்பட்ட தீவிரமான பிரச்சாரம் மற்றும் ஆதரவு திரட்டல் நடவடிக்கைகளின் பின்னர், ஒன்பது பேர் மீது, 15 இற்கும் 17 இற்கும் வயதிற்குட்பட்ட 24 மாணவர்கள் உட்பட 25 பேர்களை 1995 இல் கொலை செய்வதற்கான சதித்திட்டம் தீட்டியமை உட்பட 80 குற்றச்சாட்டுக்கள் பதியப்பட்டன. 1999 பெப்ரவரியில், ஆறு படைவீரர்களுக்கும் ஒரு தலைமை ஆசிரியருக்கும் 10 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. படுகொலை செய்யும் நோக்கத்துடன் கடத்தல் மற்றும் சதித்திட்டத்தில் ஈடுபட்டமை, காணாமற்போனவர்களை தவறான முறையில் சேவனா இராணுவ முகாமில் சிறைப்படுத்தியமை ஆகிய குற்றச்செயல்களுக்காக இத்தண்டனை வழங்கப்பட்டது.[218] ஆனால், கொலை செய்யப்படுவதற்கு முன்னதாக சிறுவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த சேவனா இராணுவ முகாமின் தளபதியும் வழக்குடன் தொடர்புபட்ட அதியுயர் அதிகாரியுமான, அப்போதைய லெப். கேணல் ஆர்.பி.லியனகே கடத்தல்களில் நேரடியாக ஈடு பட்டதற்கான சாட்சியங்கள் போதாமை காரணமாக அவ்வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டார். 2002 ஆரம்பத்தில் நடந்த மேன்முறையீட்டு வழக்கில், நான்கு படைவீரர்களதும் உயர்பாடசாலை தலைமை ஆசிரியரதும் தண்டனைகள் உறுதிசெய்யப்பட்டன. லெப்.கேணல். ஆர்.பி. லியனகே விடுதலை செய்யப்பட்டதை எதிர்த்து மேற்முறையீடு செய்ய வேண்டுமென பெற்றோர்கள் விரும்பிய போதும், சட்டமா அதிபர் மேன்முறையீடு செய்யவில்லை.[219] பின்னர் அவர் பிரிகேடியராகப் பதவி உயர்த்தப் பட்டார். [220] சேவனா இராணுவ முகாமில் நடந்த காணாமல் போதல்கள் மீதான மேற்கு, தெற்கு, மற்றும் சப்ரகமுவா மாகாணங்களுக்கான ஜனாதிபதி |

[217] https://www.amnesty.org/fr/wp-content/uploads/2021/09/ASA370151994ENGLISH.pdf

[218] Amnesty International, Sri Lanka: Judgement in landmark case - another step against impunity, 10 Feb 1999, https://www.amnesty.org/es/wp-content/uploads/2021/06/asa370051999en.pdf

[219] International Commission of Jurists, Sri Lanka: Impunity, p140, https://www.icj.org/wp-content/uploads/2010/01/srilanka_impunity_18_01_20102.pdf

[220] International Commission of Jurists, Sri Lanka: Impunity, p126, https://www.icj.org/wp-content/uploads/2010/01/srilankxa_impunity_18_01_20102.pdf

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | விசாரணை ஆணைக் குழுவின் சிறப்பு அறிக்கையில் லியனகேவுக்கு இதில் குறிப்பிட்ட பொறுப்பு இருப்பதாக கூறப்பட்டிருந்த போதிலும் இது நடந்தது.[221] |
| 1994 | எஸ்செல்ல, கம்பகா மாவட்டம் | 1987–1989 ஜே.வி.பி. கிளர்ச்சிக் காலத்தைச் சேர்ந்த மனித எச்சங்கள். | நீதிபதியின் உத்தரவிற்கு அமைய 1994 ஒக்ரோபர் 14ஆம் திகதி இவ்வுடல்கள் வெளியில் எடுக்கப்பட்டன. | 1989 செப்ரெம்பர் 19ஆம் திகதி என்று உள்ளூர் இராணுவ முகாம் ஒன்றிலிருந்து ('இராணுவ முகாம் B' என்று குறிப்பிடப்படுகின்றது) கொண்டு சொல்லப்பட்ட 15 அல்லது 16 கைதிகளுடையதாக இருக்கலாம் என்று மேற்கு, தெற்கு, மற்றும் சப்ரகமுவா மாகாணங்களுக்கான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இதில் மூன்று பெண்களும் உள்ளடங்குவர். [222] எஸ்செல்லாவிலுள்ள யட்டகம கிராமப் பாடசாலையில் இம்மனிதப் புதைகுழி அமைந்திருந்தாக அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது. இதற்கு முன்னதாக "பெரும் சத்தங்களுடன் பாரிய ட்ரக் வண்டிகள் வந்து நின்றதாகவும், அதனைத் தொடர்ந்து, துப்பாக்கச் சத்தங்கள் கேட்டதாகவும், அதனைத் தொடர்ந்து அங்கே பல இளைஞர்கள், யுவதிகளது துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்த சடலங்கள் ஜே.வி.பி. தாக்குதலில் கொல்லப்பட்ட இராணுவ அதிகாரி ஒருவருடைய வீட்டுக்கு அருகிலிருந்த வடிகாலுக்குப் பக்கத்தில் வரிசையாக அடுக்கப்பட்டிருந்ததை பொதுமக்கள் கண்டிருந்தனர்" எனவும் மேற்கு, தெற்கு, மற்றும் சப்ரகமுவா மாகாணங்களுக்கான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.[223] |
| 1995 | பொல்கொட ஏரி, கொழும்பு மாவட்டம் | விடுதலைப் புலி உறுப்பினர்கள் என்று சந்தேகிக்கப்பட்ட தமிழ் இளைஞர்களினதாக இருக்கலாம் என்று நம்பப்பட்ட சடலங்கள். | அலவ்வா ஓயா மற்றும் தியவன்ன ஓயா ஆகிய ஏரிகளில் மிதந்தவாறு 21 சடலங்கள் காணப்பட்டன. | 1996 இல் இவ்வழக்குகள் தொடர்பான சிஐடி விசாரணைகளைத் தொடர்ந்து, மூன்று பொதுமக்களுடன் சேர்த்து, விசேட அதிரடிப் படையைச் சேர்ந்த 21 பேரும் கைது செய்யப ட்டார்கள். அவர்கள் கொழும்பிலுள்ள தலைமை நீதிபதியின் முன் ஆஜர்ப்படுத்தப்பட்டு, தடுத்து |

[221] Embilipitiya Case, H.C. Case No. 121/1994, High Court of Ratnapura, H.C. Minutes 23.02.1999, as quoted in International Commission of Jurists, Sri Lanka: Impunity, p55.

[222] Final report of the WSSC, Vol II, p175

[223] Final report of the WSSC, Vol I, p119

| | | | | |
|---|---|---|---|---|
| | | தடயவியல் ஆய்வுகளைத் (கொழும்பு சட்ட வைத்திய உயர் அதிகாரியால் மேற்கொள்ளப்பட்ட பிரேதப் பரிசோதனை மற்றும் பிரித்தானியாவின் கிளாஸ்கோ பல்கலைக் கழகத்தில் 1996 நவம்பரில் நடத்தப்பட்ட கணணி மயப்படுத்தப்பட்ட முகமீள் உருவாக்கம் மற்றும் காணொளி மூலமான முகவுருக் கட்டமைப்பு ஒப்பீடு ஆகியன உள்ளடங்கலாக) தொடர்ந்து ஐந்து சடலங்கள் அடையாளம் காணப்பட்டன.[224] அடையாளம் காணப்பட்ட எச்சங்கள் அவர்களது குடும்பங்களிடம் ஒப்படைக்கப்பட்டனவா என்பது தெரியவில்லை. | | வைக்கப்பட்டார்கள். மூன்று அதிகாரிகள் மீது பாதிக்கப்பட்டவர்களில் ஒருவர் எனப் பின்னர் அடையாளம் காணப்பட்ட கண்ணன் என்று அழைக்கப்பட்ட அழகசுவாமி முகாரசிங்கம் என்பவரை கடத்தி, தவறான முறையில் சிறைப் படுத்தியது என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. ஆயினும், பின்னர் சட்டமா அதிபர் அலுவலகமோ அவர்களுக்கு எதிரான போதுமான ஆதாரங்கள் இல்லை என்று தீர்மானித்ததுடன், அதனால் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறும் பரிந்துரை செய்தது. [225] |
| 1999 | துரையப்பா விளையாட்டரங்கம், யாழ்ப்பாண மாவட்டம். | மனித எச்சங்கள் இன்னமும் தெளிவு படுத்தப்பட வேண்டும். 1987 இல் வட மாகாணத்தை ஆக்கிரமித்த இந்திய அமைதி காக்கும் படையினால் கொன்று, எரிக்கப்பட்ட யாழ். வாசிகளின் எலும்புக் கூடுகளாக இருக்கலாம் | யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு அரங்கில் ஆடைமாற்றும் அறைகள் அமைப்பதற்கான அத்திவாரத்தை பணியாளர்கள் தோண்டியபோது அவர்களது மண்வெட்டிகள் எலும்புக் கூடுகளில் பட்டன. | அகழ்வுப் பணிகள் மூன்று நாட்கள் நடைபெற்றன. முதல் நாளில் எட்டு எலும்புக் கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டன. இரண்டாம் நாள் பதினாறு எலும்புக்கூடுகளும் மூன்றாம் நாள் ஐந்து எலும்புக் கூடுகளும் மீட்கப்பட்டன.[227] |

[224] AIC final report, Vol 7 and Vol 8

[225] AIC final report, Vol 9, letter from state counsel, Yasantha Kodagoda to the Inspector General of Police, 20 Mar 1999

[227] https://groundviews.org/2010/06/07/mass-graves-nothing-new-to-sri-lanka/

| | | | | |
|---|---|---|---|---|
| | | என்று சந்தேகிக்கப் பட்டது.[226] | | |
| 1999 | செம்மணி, யாழ்ப்பாண மாவட்டம் | யாழ்ப்பாணப் பாடசாலை மாணவியான கிருசாந்தி குமாரசாமி, அவரது தாய், சகோதரன், மற்றும் அயலவர் ஆகியோரது பாலியல் வல்லுறவு மற்றும் கொலை வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்ட ஐந்து படை வீரர்கள் மீதான வழக்கு 1996 இல் நடைபெற்ற போது இப்பெரும் புதைகுழிகளின் அமைவிடம் வெளிச்சத்திற்கு வந்தது. கிருசாந்தியின் உடல் புதைக்கப்பட்ட இடத்தில் 400 இற்கும் மேற்பட்ட உடலங்கள் புதைக்கப் பட்டதாக இதில் குற்றஞ் சாட்டப்பட்ட கோப்ரல் சோமரட்ண ராஜபக்ச கூறினார். | 15 | 15 பேர் காணாமற்போனதற்கு காரணமாக இருந்த படைவீரர்களை ஐந்துபேர் கொண்ட ஆணைக்குழு அடையாளம் கண்டது. இராணுவ அதிகாரிகள் நால்வர் கைதுசெய்யப்பட்டார்கள். இவ்ஆணைக் குழுவின் அறிக்கை ஒருபோதுமே வெளியிடப் படவில்லை. றுகுணு பல்கலைக்கழகத்தின் தடயவியல் மருத்துவத்தின் மூத்த பேராசிரியரான, சட்ட மருத்துவ அதிகாரி நிரியல்ல சந்திரசிறி அவர்களின் வழிகாட்டலின்கீழ் அகழ்வுப்பணிகள் மேற்கொள்ளப் பட்டன. [228] செம்மணியில் நடந்த சில அகழ்வுப் பணிகளில் சர்வதேச தடயவியல் நிபுணர்களும் அனைத்துலக மன்னிப்பு சபையும் கண்காணிப் பாளர்களாக இருந்தார்கள். ஆனால் இவ் அகழ்வுப் பணிகளில் வல்லுனர்கள் பங்கொடுத்துக் கொள்ளவில்லை. இந்தியாவின் கைதராபாத் தடயவியல் ஆய்வு கூடத்திற்கும், பின்னர் பிரித்தானியாவுக்கு எலும்பு மாதிரிகள் அனுப்பி வைக்கப்பட்டன. ஆரம்பத்தில் சில படைவீரர்களும், காவல்துறையினரும் கைதுசெய்யப்பட்டபோதும், அவர்கள் மீது எந்தக் குற்றச்சாட்டுக்களும் பதியப் படவில்லை. சட்டமா அதிபர் அலுவலகத்தின் கட்டளையின் பேரில், சந்தேக நபர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டார்கள். யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றத்தில் தாம் ஆஜராகவேண்டியிருந்தால் தம் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று தாம் பயப்படுவதாக இராணுவ அதிகாரிகள் முறையிட்ட பின்னர், இவ்வழக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது. தங்களது விசாரணைகளின் கண்டுபிடிப்புக்களை ஒப்படைத்துள்ள போதிலும், காவல்துறைமா அதிபரிடமிருந்து எவ்விதமான அறிவுறுத்தல்களும் கிடைக்கப்பெறாமையினால், தம்மால் தொடர முடியாமல் உள்ளது என்று காவல்துறை கூறியதை |

[226] See http://jdsrilanka.blogspot.com/2010/06/mass-graves-nothing-new-to-sri-lanka.html

[228] Professor Niriella Chandrasiri, ‘Chemmani: Unearthed yet Untold’, in Asian Human Rights Commission, Torture: Asian and Global Perspectives, *The Island of Mass Graves, v*ol 3, nos 1 & 2, Feb-Apr 2014, p7-29, http://www.humanrights.asia/wp-content/uploads/2023/02/TortureV3-N1_2_LowRes.pdf

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | அடுத்து 2006 ஜனவரியில் இவ்வழக்கு முடிவுக்கு வந்தது.[229]<br><br>அதனையடுத்து, இவ்வழக்கின் முக்கிய சந்தேக நபர்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன. கப்டன் சி.ஜே.ரி.கே. லலித் கேவா மூத்த லெப்ரினன்ட் கேணலாகப் பதவி உயர்வு பெற்று பானந்துறையிலுள்ள இராணுவ விருந்தினர் விடுதியொன்றுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டார். கப்டன் ரி.டி. சிசிகா பெரேரா மூத்த லெப்ரினன்ட் கேணலாகப் பதவி உயர்வுபெற்று மன்னார் இராணுவ முகாமிற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டு, பின்னர், கலவெவ இராணுவ முகாமிற்கு மாற்றப்பட்டார். லெப்ரினன்ட் சசிந்திர விஜெசிறிவர்த்தனா இளநிலை லெப்ரினன்ட் கேணலாகப் பதவி உயர்வுபெற்று முல்லைத்தீவு இராணுவ முகாமிற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டார். பின்னர், இவர் பனகொடவிலுள்ள இராணுவத் தலைமையகத்திற்கு மாற்றப்பட்டார். லெப்ரினன்ட் ஏ ஜட்ரகம இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.[230] இதில் ஈடுபட்டதாக சோமரட்னெ ராஜபக்சவால் பெயரிடப்பட்ட மற்றையவர்கள் மீது ஒருபோதும் குற்றச்சாட்டுப் பதியப்படவில்லை. இவர்களில், ஜயதிலகெ, நசீர், சமரவிக்கிரம, தகுதிகாண்நிலை சிப்பாய் பெரேரா, படைவீரர் ஜே.எம். ஜயசிங்க, லெப்ரினன்ட் துடுகல[231] லெப்ரினன்ட் உதயகுமார, மேஜர் கருணாசேகர, கப்டன் ஜயவர்த்தன, கோப்ரல் பண்டார, தகுதிகாண் நிலை சிப்பாய் நிசாந்த, தகுதிகாண்நிலை சிப்பாய் அல்விஸ் (இறந்துவிட்டார்) தகுதிகாண்நிலை சிப்பாய் முதுபண்டா, சார்ஜன்ட் சில்வா, மற்றும் மூன்று காவல்துறை அதிகாரிகள் (கான்ஸ்டபிள் பிரியதர்சனா, ஓவ்பிசர் அப்துல் கமிட், ஓவ்பிசர் சமரசிங்க) ஆகியோர் உள்ளடங்குவர்.[232] கிருசாந்தி குமாரசாமியின் பாலியல் வல்லுறவு மற்றும் கொலைக்காக சோமரட்ண ராஜபக்ச தொடர்ந்தும் ஆயுள்தண்டனை அனுபவித்துக்கொண்டிருக்கின்றார். |

[229] '"No instructions on Chemmani" – CID', BBC Sinhala News, 4 Jan 2006, as quoted in International Crisis Group, Sri Lanka's Human Rights Crisis, Asia Report No135, 14 Jun 2007, https://icg-prod.s3.amazonaws.com/135-sri-lanka-s-human-rights-crisis.pdf

[230] Lionel Bopage, Mass graves everywhere, but where are the killers?, 30 Sep 2017, https://www.researchgate.net/publication/323772087_Mass_graves_everywhere_but_where_are_the_killers

[231] UTHR, Special Report, https://uthr.org/SpecialReports/spreport12.htm#_Toc515700082 and https://www.wsws.org/en/articles/1999/06/sri-j26.html

[232] Names obtained from five separate statements provided by Somaratne Rajapaksa to the HRCSL on 20, 22 and 27 Jul 1998.

| | | | | |
|---|---|---|---|---|
| 2000 | மிருசுவில், யாழ்ப்பாண மாவட்டம். | பாதிக்கப்பட்டவர்கள் காணாமற்போய் ஒரு வாரத்தின் பின்னர், அதாவது 2000 டிசம்பர் 25 அன்று மனித உடல்கள் தோண்டி எடுக்கப்பட்டன. | மூன்று சிறுவர்கள் உட்பட உள்ளூரில் இடம்பெயர்ந்த எட்டுப்பேரது சடலங்கள். 5 வயது நிரம்பிய சிறுவர் ஒருவரது உடலில் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டதற்கான அடையாளங்கள் இருந்தன. | 15 வருடங்களின் பின்னர் இவ்வழக்கு முடிவுக்கு வந்தது. இவ்வழக்கு சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்திலேயே ஆரம்பத்தில் தாக்கல் செய்யப் பட்டது. அதனைத் தொடர்ந்து 14 இராணுவத்தினர் தடுத்து வைக்கப்பட்டார்கள். தங்களுக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்படலாம் என்று பயப்படுவதாக சந்தேக நபர்கள் சட்டமா அதிபர் அலுவலகத்திடம் கேட்டுக் கொண்டதால், இவ்வழக்கு அனுராதபுரத்திற்கு பின்னர் மாற்றப்பட்டது. பின்னதாக, கொழும்பு நீதிமன்றத்தில் யூரிகள் இல்லாத நீதிமன்றம் (trial-at-bar) ஒன்றினை தலைமை நீதிபதி நியமித்தார். வழக்கு பல தடவைகள் ஒத்திவைக்கப்பட்டது. [233] நீண்ட இழுபறி நீதிமன்ற நடவடிக்கைகளின் பின்னர், 2015 ஆம் ஆண்டில், இராணுவத்தின் நீண்டதூர ஆழ ஊடுருவும் படைப்பிரிவைச் சேர்ந்த சுனில் ரட்ணநாயக்காவிற்கு மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டதுடன், குற்றஞ் சாட்டப்பட்ட மற்றைய நால்வர் மீதான குற்றச் சாட்டுக்களிலிருந்தும் அவர்கள் விடுவிக்கப் பட்டார்கள். எனினும், சுனில் ரட்ணநாயக்கா, வெறும் ஐந்து வருடங்கள் சிறையில் இருந்த பின்னர், 2020 ஆம் ஆண்டு, அப்போதைய ஜனாதிபதி கோத்தபாய ராஜபச்சவினால் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலைப் செய்யப்பட்டார். [234] 2021 அமெரிக்காவுக்கான பயணத்தடை அவர் மீது விதிக்கப்பட்டது. [235] 2023 ஆரம்பத்தில் கனடாவும் அவர் தம் நாட்டுக்கு விஜயம் செய்யமுடியாது என அவர் மீது தடை கொண்டுவந்தது. [236] |
| 2010 | கணேசபுரம், கிளிநொச்சி மாவட்டம் | பழைய மலசல குழி ஒன்றினைத் துப்பரவு செய்த போது கறுப்பு பொலித்தீன் பையில் சுற்றப்பட்டிருந்த நிலையில் சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. | 06 | https://www.dailymirror.lk/article/mass-grave-in-kilinochchi-4058.html?fbrefresh=1505404589 |

[233] https://srilankachrd.org/la-mirusuvil.php and BBC News, 'New panel to probe Mirusuvil massacre', 6 Mar 2005, https://www.bbc.com/sinhala/news/story/2005/03/050306_mirusuvil

[234] https://www.amnesty.org/en/latest/news/2020/03/justice-reversed-for-victims-of-the-mirusuvil-massacre-from-sri-lanka/

[235] https://www.thehindu.com/news/international/us-sanctions-2-sri-lankan-military-officers-over-human-rights-violations/article37937480.ece

[236] http://www.adaderana.lk/news.php?nid=87485

| | | | | |
|---|---|---|---|---|
| 2012 | மாத்தளை,<br><br>மாத்தளை மாவட்டம் | மாத்தளை பொது வைத்திய சாலையிலுள்ள கட்டுமானத்தளம் ஒன்றில் உயிரியல் வாயு நிலையத்தினை அமைத்துக் கொண்டிருந்த தொழிலாளர்கள் மனித எச்சங்களைக் கண்டார்கள். மாத்தளை நீதவான் நீதிமன்ற வழக்கு எண் B1810/12. | 2013 பெப்ரவரியளவில் 155 உடல்கள் தோண்டி எடுக்கப் பட்டன. | நீதவான் சதுரிக சல்வாவின் தலைமையின் கீழ் தோண்டும் பணி நடைபெற்றது. மேலும் பல காணாமற்போனவர்களது குடும்பங்களையும் சாட்சிகளையும் முன்வந்து தகவல் தரும்படி அவர்களை ஊக்கம் செய்யும் எந்தவொரு அறிவிப்புக்களையும் ஊடகங்களிக்கு வழங்கும் நடவடிக்கையினை சி.ஐ.டி. மேற்கொள்ளவில்லை. கண்டு பிடிக்கப்பட்ட எச்சங்களில் துப்பாக்கிச் சன்னங்கள் பாய்ந்தமைக்கும், அவர்களது மண்டை ஓடுகளில் இரும்பு ஆணிகள் செலுத்தப்பட்டது உட்பட கூர்மங்கிய கருவிகள் பயன்படுத்தப்பட்டதற்கும், தலை துண்டிக்கப் பட்டதற்குமான அடையாளங்கள் காணப்பட்டதாக தடயவியல் தொல்லியல் ஆய்வாளர் சோமதேவவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அப்புதைகுழிகளின் காணப்பட்ட சில கலைப படைப்புக்களை ஆதாரமாகக் கொண்டு, அவ் எச்சங்கள் 1980களின் காலப் பகுதியைச் சேர்ந்தவை அவருடைய அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. எலும்புக் கூடுகளின் மாதிரிகளை பரிசோதனைக்கான வெளிநாடுகளுக்கு அனுப்புமாறு நீதிபதி வழங்கிய ஆணையினை ஆறு வாரங்களாக சிஐடி உதாசீனம் செய்தது. ஏற்கனவே நீதிமன்ற விசாரணை நடை பெற்றுக் கொண்டிருப்பதால் ஜனாதிபதி விசாரணைக் குழு தேவையில்லை என வழக்கறிஞர்கள் சங்கத்தினதும் பல சட்டவாளர்களதும் எதிர்ப்பினையும் மீறி, மூன்று பேர் கொண்ட ஜனாதிபதி விசாரணைக் குழுவினை முன்னாள் ஜனாதிபதி நியமித்தார். வழக்கினை விசாரணை செய்து கொண்டிருந்த நீதிபதி உடனடியாகவே அவ் வழக்கிலிருந்து நீக்கப்பட்டு, அவருக்குப் பதிலாக வேறொருவர் நியமிக்கப்பட்டார். மேலதிகமாக வாக்குமூலங்களை ஏற்றுக்கொள்ள மறுத்த புதிய நீதிபதி, அவற்றை ஜனாதிபதி விசாரணைக் குழுவிடம் சமர்ப்பிப்பதையும் தாமதப்படுத்தினார். ஆணைக்குழு 156 சாட்சிகளிடமிருந்து ஆதாரங்களைப் பெற்றதுடன், அமெரிக்காவின் புளோறிடாவின், China and Beta Analytic உள்ள ஒரு பரிசோதனைக் கூடத்திடமிருந்து ஒரு தடயவியல் அறிக்கை யினையும் பெற்றுக் கொண்டது.[237] (அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு நிபுணத்துவம் பெற்ற நிறுவனமான) Beta Analyticஇன் விசேட வழிகாட்டல்களைப் பின்பற்றி, இவற்றின் மாதிரிகளை சேகரித்த சட்ட மருத்துவ |

[237] Bopage

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | அதிகாரி, அவற்றை சீல் செய்து, அவற்றுடன் அனுப்பப்பட்ட ஆவணங்களின் பிரதிகளை மாத்தளை நீதவான் நீதிமன்றத்திற்கும், மூலப்பிரதிகளை பரிசோதனைக் கூடத்திற்கும் அனுப்பி வைத்தார். இம்மாதிரிகள் சிஐடியின் பாதுகாப்பில் வைக்கப் படுவதற்காக அனுப்பி வைக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து, எந்தவித வல்லுனர்களின் பாதுகாப்பும் இல்லாமல், அம்மாதிரிகள் பீற்றா அனலிற்றிக் நிறுவனத்தின் (Beta Analytic) கார்பன்–திகதிப் பரிசோதனைக்கான அனுப்பி வைக்கப்பட்டன. அவை 1950களிற்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்தவை என அந்நிறுவனம் தெரிவித்தது. [238] எனினும் பீற்றா அனலிற்றிக் நிறுவனத்தின் கண்டு பிடிப்புக்கள் தவறானவை என தடயவியல் தொல்லியல் ஆய்வாளர் ராஜ சோமதேவா கூறினார். பரிசோதனைக்கு அனுப்பபட்ட மாதிரிகளில் கலப்படங்கள் இருந்திருக்கலாம் என்றும், அதனால் தான் அவர்களது அறிக்கையில் கூறப்பட்டுள்ள காலப்பகுதி தொல்லியல் ஆய்வின் நிறுவனம் கண்டறிந்த காலத்திலிருந்து முரண்படுவதாகவும் கருத்தினை தெரிவிக்கின்றார். 2015இல் புதிய அரசாங்கம் பதவிக்கு வந்தபோது, ஆணைக்குழு அதன் விசாரணையை மீளவும் ஆரம்பித்தது. எனினும் அவை 1950களைச் சேர்ந்த புதைகுழியே என்றும் இருக்கலாம் என்றும், மாறாக அவை குற்றச்செயல் நடந்த இடம் இல்லை என்ற நிலைப்பாட்டையே கொண்டிருந்தனர். ஜனாதிபதி மகிந்த மைத்திரிபால சிறிசேனவிடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை ஒரு போதுமே வெளியிடப்படவில்லை. நீதவான் நீதிமன்ற வழக்கும் 2015 இல் முடிக்கப்பட்டது. அம்முடிவுக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்போவதாக சில தரப்பினர் தெரிவித்த போதிலும், 2023 ஆரம்பம் வரை எந்தவிதமான மேன்முறையீடும் செய்யப்பட வில்லை. [239] |
| 2013 | திருக்கேதீஸ்வரம்,<br><br>மன்னார் மாவட்டம் | மன்னார் நீதவான் நீதிமன்ற வழக்கு இலக்கம் B768/13.<br><br>மனித எச்சங்களின் அடையாளங்கள் | 80 இற்கும் மேல்.[240] இன்னமும் பல வெளிப்படலாம் என்று எண்ணப்படுகின்றது. | மன்னார் நீதவான் நீதிமன்ற நீதிபதி ஆனந்தி கனகரட்ணம் அவர்கள் 2013 டிசம்பர் 22இல் விசாரணையை ஆரம்பித்தார். அவர் அப் பிரதேசத்திற்கு ஆரம்ப விஜயம் ஒன்றினை மேற் கொண்டார். இவருடன் 1999 செம்மணி விசாரணையில் ஈடுபட்ட சட்ட மருத்துவ |

[238] https://www.radiocarbon.com/

[239] https://www.dailymirror.lk/80919/matale-mass-grave-jvp-to-appeal-to-higher-court

[240] See video: https://www.youtube.com/watch?v=NKauiYWxqWA&ab_channel=TheTamilDiplomat

| | | | | |
|---|---|---|---|---|
| | | இன்னனும் உறுதிப்படுத்தப் படவில்லை.<br><br>விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்ட படை வீரர்களது சடலங்கள் என அரச வட்டாரங்கள் குற்றஞ் சாட்டுகின்றன. ஏனைய தரப்பினரோ பாதுகாப்புப் படைகளால் காணாமல் ஆக்கப்பட்டவர்களது சடலங்களே அவையென குற்றஞ்சாட்டுகின்றனர். | | அதிகாரிகளில் ஒருவரான DL வையரட்ணவும் கூடவே சென்றிருந்தார்.[241] 2014 ஜனவரியில், கருத்து வெளியிட்ட சட்ட மருத்துவ அதிகாரி, உடைகள் அல்லது மனிதனால் செய்யப்பட்ட ஆபரணங்களோ புதைகுழியில் காணப்பட்டதற்கான எந்தத் தடயங்களும் இல்லை என்று கூறினார். மனித எலுப்புக் கூடுகள் அடங்கிய எண்பதற்கு மேற்பட்ட பெட்டிகளை சீல் செய்து, முத்திரை பதித்து, நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் அனுராதபுர போதனா வைத்தியசாலையின் சட்ட–மருத்துவப் பிண அறைக்கு பாதுகாப்பிற்காகவும், மேலதிக பரிசோதனைக்காகவும் அனுப்பி வைத்தார். சில எனும்புக்கூட்டு எச்சங்களின் மண்டையோடுகளில் துப்பாக்கிச் சன்னத்தால் ஏற்படுத்தப்பட்ட துளைகள் இருந்தாகவும் ஏனையவற்றின் கைகள் பின்னால் கட்டப்பட்டிருந்ததாகவும் சொல்லப்படுகின்றது.<br><br>2014 ஏப்ரலில் இதுபற்றிக் கருத்துத் தெரிவித்த தொல்பொருள் ஆராட்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் 1930 களிலிருந்து பயன் படுத்தப்பட்டுவந்த ஒரு சாதாரண கல்லறையே அது என்றும், பாரிய மனிதப் புதைகுழி அல்ல என்றும் கூறினார். உறவினர்களிடமிருந்து வந்த முறைப் பாடுகளின் மத்தியில், 2016 ஓகஸ்ற்றில் அகழ்வுப் பணிகள் தொடர்ந்தன. மேலும் இரு எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. வழமைக்கு மாறாக, ஒரு தடயவில் ஆய்வாளர் கல்லறையினை ஆய்வு செய்து, அதன் காலப் பகுதியினைக் கண்டறிவதற்கு முன்னதாக, ஒரு புவியியலாளர் மற்றும் ஒரு அனுவியல் நிபுணர் தங்களது சொந்த அறிக்கையைச் சமர்ப்பித்தார்கள்.<br><br>நீதிமன்றத்தின் அனுமதியின்றி, அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள எச்சங்களை அகற்றுவதற்கு 2015 ஒக்ரோபரில் நீதிமன்றம் தடைவிதித்தது. மாதிரிகளை ஆயந்தீனா, பேரு, மற்றும் குவாட்டமாலா ஆகிய நாடுகளின் தடயவியல் ஆய்வு அணிகளுக்கு அனுப்புவதற்கு 2015 டிசம்பரில் சி.ஐ.டி உடன்பட்டது. எனினும், அவ்வாறு நடக்கவேயில்லை. இறுதியாக குவாட்டமாலன் தடயவியல் ஆய்வுஅமைப்பினை சிஐடி தொடர்பு கொண்டது, ஏனையவர்களைத் தொடர்பு கொள்ள வில்லை. குவாட்டமாலன் தடயவியல் ஆய்வு அணி ஒன்று சிறிலங்காவிற்கு பிரயாணம் செய்து, சில |

[241] Dr D L Waidyaratne, Report on the Excavation of the Suspected Mass Grave in Manthei, Mannar, Case No B 768/2013, 23 Oct 2014

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | பயிற்சிகளை வழங்கியது. எனினும், அவர்கள் மன்னார் புதைகுழிப் பிரதேசத்திற்கு விஜயம் செய்யவோ, அல்லது அகழ்வுப் பணிகளில் பங்கெடுக்கவோ இல்லை.<br><br>2023 இன் தொடக்கத்தில், நீதிமன்ற உத்தரவின் பேரில், சில எச்சங்கள் எலும்புப் பரிசோதனைக்காக கொழும்பு பல்கலைக்கழகத்தின் தடயவியல் மற்றும் ஆய்வுத் திணைக்களத்திற்குக் கொண்டு செல்லப் பட்டன. இறுதியாக அமெரிக்காவின் புளோறிடாவிலுள்ள பீற்றா அனலிற்றிக் ஆய்வு மையத்திற்கு அனுப்பி வைப்பதற்காக 2023 ஜனவரி 3ஆம் திகதி அன்று, சட்ட மருத்துவ அதிகாரி வைத்தியரட்ண சில மாதிரிகளை எடுத்தார். எனினும், இன்றுவரை, அதற்கான அறிவுறுத்தல் வழங்கப் படாமையாலும், அதற்கான நிதி இன்னமும் ஒதுக்கப்படாமையாலும் அவை நீதவான் நீதிமன்றத்தின் பாதுகாப்பிலேயே உள்ளன. |
| 2014 | களுவாஞ்சிக்குடி,<br><br>மட்டக்களப்பு மாவட்டம் | காத்தான்குடி நீதிவான் நீதிமன்றம் வழக்கு இலக்கம் B172/14.<br><br>விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டவர்களது, குறிப்பாக 1990 ஆம் ஆண்டு யூலை 12ஆம் திகதி கருக்கல்மடத்தில் வைத்துக் கடத்திக் கொல்லப்பட்ட முஸ்லீம் மக்களுடையதாக இருக்கலாம் என்று எண்ணப்படுகின்றது. | 160 இற்கும் அதிகமாக இருப்பதற்கான சாத்தியம் உள்ளது.[242] இன்றைய திகதி வரை எதுவுமே வெளியில் எடுக்கப்படவில்லை. | விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டவர்களது ஒருவருடைய மகன் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிற்கும் (LLRC) காணாமற் போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கும் வாக்குமூலம் வழங்கினார். 1990 யூலையில் விடுதலைப் புலிகளால் கொல்லப் பட்ட முஸ்லீம் மக்கள் புதைக்கப்பட்ட இடத்தைத் தம்மால் காட்டமுடியும் என உள்ளூர் முஸ்லீம் மக்கள் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னர் சாட்சியம் வழங்கினார்கள். ஏனைய இடங்களைக் காட்டினும் இவ்விடத்தினை அதிவேகமான விசாரணையினை ஆரம்பித்தது. அத்துடன் இவ்விடத்திற்கு பாதுகாப்புப் படையினரையும் பாதுகாப்புக்கு பணியமர்த்தியது.[243] இருந்தபோதிலும், கொழும்பில் தங்கியிருந்த தலைமை சட்ட மருத்துவ அதிகாரி மற்றும் அரசாங்க ஆய்வாளர் வருகை தராமையினால் ஆய்வுகள் பல பிற்போடப்பட்டன.<br><br>அதன்பின்னர், விசாரணை இடைநிறுத்தப்பட்டதுடன், எந்தவொரு அகழ்வாராய்வும் மேற்கொள்ளப்பட வில்லை. இப் புதைகுழி தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுமாக இருந்தால் அது 2004ஆம் ஆண்டில் தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து |

[242] http://www.right2lifelanka.org/newsview.php?id=1446

[243] https://www.newsfirst.lk/2014/06/24/mass-grave-kurukkalmadam-dug/

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | பிரிந்து, சிறிலங்கா பாதுகாப்புப் படைகளுடன் இணைந்து செயற்பட்டு, 2018 இல் மகிந்த ராஜபச்சவின் அரசாங்கத்தில் உத்தியோகபூர்வமாக இணைந்து கொண்ட, விநாயகமூர்த்தி முரளிதரனை (கேணல் கருணா) குற்றச்சாட்டுக்கு ஆளாக்கவேண்டி வரும் என்ற உண்மையின் அடிப்படையிலேயே இது நடந்தது அப்பட்டமாகத் தெரிகின்றது.[244]<br><br>சட்ட மருத்துவ அதிகாரிகள் அலுவலகத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளுடன் சந்தேக இடத்திற்கு விஜயம் செய்தவதற்கு அனுமதி தரவேண்டும் என்று காணாமற்போன ஆட்கள் தொடர்பான அலுவலகம் 2019 இல் காத்தான்குடி நீதவான் நீதிமன்றத்தில் விண்ணப்பம் ஒன்றைத் தாக்கல் செய்தது. [245] இதற்கான அனுமதி வழங்கப்பட்டதா என்பது தெளிவாகத் தெரியவில்லை. |
| 2018 | மன்னார்,<br><br>மன்னார் மாவட்டம் | மன்னார் நீதவான் நீதிமன்ற வழக்கு இலக்கம் B232/18.<br><br>எலும்புக்கூடுகள் எங்கிருந்து வந்தன என்பது இன்னமும் தெளிவுபடுத்தப் படவில்லை. | 2018 டிசம்பர் அளவில், 28 சிறுவர்களது உட்பட, 318 எலும்புக்கூடுகள் மீட்கப் பட்டிருந்தன. | சத்தோச கூட்டுறவுக் கடையில் நடந்த கட்டட வேலையின்போது இப்புதைகுழி கண்டு பிடிக்கப்பட்டது. உரிமையாளர்கள் காவல்துறைக்குத் தெரிவித்தார்கள். 2018 நவம்பரில், திருக்கேதீஸ்வரம், மன்னாரில் இருந்த சந்தேகத்திற்கிடமான புதைகுழி அமைவிடம் தொடர்பான விசாரணையின் கண்காணிப்பாளர்களாக செயற்படுவதற்கு காணாமல் போன ஆட்கள் தொடர்பான அலுவலகம் விண்ணப்பித்தது. அங்கிருந்து எடுக்கப்பட்ட பொருட்களில் கால்களைச் சேர்த்துக் கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்ட கட்டுக்கம்பிகளும் அடங்கும். [246] காணாமல் போன ஆட்கள் தொடர்பான அலுவலகம் 2019 இல் இவ்வழக்கினைத் தொடர்ந்து கண்காணித்தது. தடயவியல் வல்லுனர்களின் உதவியுடன், அது வரையான விசாரணையின் செயற்பாட்டினை மீளாய்வுக்கு உட்படுத்தியது. அத்துடன் தனது ஆய்வு முடிவுகளையும் குடும்ப உறுப்பினர்களின் பிரதிநிதிகள் உட்பட சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடியது.<br><br>(அமெரிக்காவின் புளோறிடா மியாமியிலுள்ள) பீற்றா அனலிற்றிக் ஆய்வு மையத்திடம் எலும்பு மற்றும் பற்களின் மாதிரிகளை சட்ட மருத்துவ அதிகாரி ஒப்படைக்கும் செயற்பாட்டில் காணாமல் |

[244] Lionel Bopage, op cit

[245] OMP, 2019 Annual Report, para 3.30, http://www.omp.gov.lk/storage/app/uploads/public/601/142/db5/601142db52d27533751009.pdf

[246] https://www.independent.co.uk/news/world/asia/sri-lanka-children-torture-remains-found-colombo-qadijah-irshad-a8681871.html

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | போன ஆட்கள் தொடர்பான அலுவலகத்தின் ஆணையாளரும், குடும்பங்களின் இரண்டு சட்டப் பிரதி நிதிகளும் (CHRD) பார்வையாளர்களாக இருந்தனர். இந்த மாதிரிகள் 15–18 ஆவது நூற்றாண்டுகளைச் சேர்ந்தவைகளாக இருக்கலாம் என்று 2019 பெப்ரவரியில் மேற்கொள்ளப்பட்ட கார்பன் திகதிப் பரிசோதனையில் தெரியவந்தது. இம்முடிவுகள் கிடைக்கப் பெற்றதும், அகழ்வுப் பணிகளைத் தற்காலிகமாக நிறுத்திவிட்டு, முழுமையான அறிக்கையினைச் சமர்ப்பிக்கும்படி விசாரணைக் குழுவிற்கு மன்னார் நீதிபதி ஆணையிட்டார். இவ்வறிக்கை 2023 மே இறுதிவரை சமர்ப்பிக்கப்படவில்லை.<br><br>இப்புதைகுழிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்துக்கும் தொடர்பு இல்லையென சிறிலங்கா இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அட்டபட்டு தெரிவித்தார்: “இப்புதைகுழியில் இராணுவத்துக்குத் தொடர்பில்லை. எமக்கும் அதற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது”.[247] |
| 2019 | புதுக்குடியிருப்பு,<br><br>முல்லைத்தீவு மாவட்டம் | முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற வழக்கு இலக்கம் AR/808/19 | 09 | 2009 ஒக்ரோபரில் மனித எச்சங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. அவ்விடத்தினைப் பாதுகாக்குமாறு உள்ளூர் காவல்துறையினருக்கு உத்தரவிட்ட நீதவான் அவ் எச்சங்களை சட்ட மருத்துவ அதிகாரி ஆய்வு செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். அவ்விடத்திற்கு நீதிபதி வந்ததையும், மேலதிக விசாரணைக்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை அவர் பரிந்துரை செய்ததையும் காணாமற்போன ஆட்கள் தொடர்பான அலுவலகத்தின் ஆணையாளர் ஒருவரும் பணியாளர் ஒருவரும் அவதானித்தனர்.[248] |
| 2020 | முல்லைத்தீவு,<br><br>முல்லைத்தீவு மாவட்டம் | முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற வழக்கு இலக்கம் AR/503/20 | தெரியவில்லை | காணாமல் போன ஆட்கள் தொடர்பான அலுவலகத்தின் 2020 வருடாந்த அறிக்கையில் தமது அமைப்பு நீதிமன்றத்தின் நடந்த இவ்வழக்கு விசாரணையை அவதானிப்பதாகக் கூறியிருந்தது.[249] ஆனால் 2021 வருடாந்த அறிக்கையில் அவ்வழக்குப் பற்றிய எந்த விதமான மேலதிக தகவல்களும் இல்லை. ITJP, FoD, ITJP மற்றும் CHRD ஆகிய |

[247] https://www.independent.co.uk/news/world/asia/sri-lanka-children-torture-remains-found-colombo-qadijah-irshad-a8681871.html

[248] OMP, 2019 Annual Report, para 3.31, http://www.omp.gov.lk/storage/app/uploads/public/601/142/db5/601142db52d27533751009.pdf

[249] 2020 Annual Report, para 2.33 and 3.5, http://www.omp.gov.lk/storage/app/uploads/public/604/847/009/604847009edfb770550416.pdf and Annex

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | அமைப்புக்களால் இது தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. |
| 2020 | கிளிநொச்சி, கிளிநொச்சி மாவட்டம் | கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற வழக்கு இலக்கம் B/542/20 | பெண் ஒருவரது எலும்புக் கூடும், ஒரு மண்டை ஓடும், சில பற்களும் மீட்கப்பட்டன. | நீதிமன்றில் நடந்த விசாரணையினை காணாமல் போன ஆட்கள் தொடர்பான அலுவலகம் அவதானித்தது. [250] ஆனால் 2021 வருடாந்த அறிக்கையில் அவ்வழக்குப் பற்றிய எந்தவிதமான மேலதிக தகவல்களும் இல்லை. ITJP, FoD, ITJP மற்றும் CHRD ஆகிய அமைப்புக்களால் இது தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிய வில்லை. |

[250] 2020 Annual Report, para 2.33 and 3.5, http://www.omp.gov.lk/storage/app/uploads/public/604/847/009/604847009edfb770550416.pdf and Annex

"மன்னாரில் 2013 ஆம் ஆண்டு முதலாவது பாரிய மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டதுடன், 83 எலும்புக்கூடுகளின் எச்சங்களும் மீட்கப்பட்டன. இரண்டாவது பாரிய மனிதப் புதைகுழி 2018 இல் கண்டுபிடிக்கப்பட்டதுடன், அங்கிருந்து 350 இற்கும் மேற்பட்ட எலும்புக்கூடுகளின் எச்சங்களும் மீட்கப்பட்டன. 2013இலிருந்து இன்று 10 ஆண்டுகள் கடந்துபோயின: நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்ந்தும் நடந்துகொண்டிருக்கின்றன. ஆயினும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு இன்னமும் நீதி கிடைக்கவில்லை.

நாளுக்கு நாள், எங்கள் இயக்கத்திலிருந்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தாய்மார்கள் வயது முதிர்வு அல்லது சுகவீனம் காரணமாக மரணமடைந்து வருகின்றனர். இன்றுவரை 178 அன்னையர்களை நாங்கள் இழந்துள்ளோம். இவ்வாறாக இக்குற்றச்செயல்களின் வாழும் சாட்சிகள் எங்கள் மத்தியிலிருந்து படிப்படியாக மறைந்துகொண்டு வருகின்றன. நாமும் இறந்துபோனால், ஆதாரங்களும் அழிக்கப்பட்டுவிடும். நீதி எப்போது கிடைக்கும் என்று தெரியாமல், வீதிகளில் இறங்கித் தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்களில் நாங்கள் ஈடுபட்டு நீதிக்காகப் போராடி வருகின்றோம்.

நீதிகோரி நீதிமன்றங்களையும், ஏன் சர்வதேச அரங்குகளையும்கூட நாம் அணுகியுள்ளோம், ஆனால் அவர்கள் இன்னமும் எங்களைக் கண்டுகொள்ளவேயில்லை. நாம் தற்போது விரக்தியடைந்துள்ளதுடன் களைப்படைந்தும் போய்விட்டோம். இப்பிரச்சினையைத் திசைதிருப்பவும் அரசாங்கத்தைப் பாதுகாப்பதற்காகவுமே காணாமற்போன ஆட்கள் தொடர்பான அலுவலகம் அமைக்கப்பட்டது. இவ்விரு மனிதப்புதைகுழிகள் தொடர்பான வழக்குகளில் காணாமற்போன ஆட்கள் தொடர்பான அலுவலகமும் பங்கெடுத்துக்கொண்டது, எனினும் அதனால் பெரிய பயன்கள் ஏதும் இல்லை.

நாங்கள் நீதிமன்றங்களிடம் கேட்கின்றோம்: சிறிலங்காப் படைகளிடம் சரணடைந்த எங்கள் பிள்ளைகள் எங்கே? எங்கள் பிள்ளைகள் இன்னமும் உயிருடன் இருந்தால், இப் புதைகுழிகளில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்கள் யாருடையவை? எங்களுக்கு நீதி தாருங்கள்: வழக்கு விசாரணைகளைப் பிற்போட்டு நீதியைத் தாமதிக்காதீர்கள். இனிமேல், யாரிடம் தான் நாம் நீதி கேட்பது?"

**திருமதி. மனுவேல் உதயச்சந்திரா,**

**வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களின் மன்னார் மாவட்டத் தலைவர்,**

**30 மே 2023 இல் நடந்த நேர்காணல்.**

2013 இல் ஆரம்பிக்கப்பட்ட ITJP யானது சிறிலங்காவில் நடைபெறும் சட்டவிரோதமான தடுத்துவைப்புக்கள், சித்திரவதைகள், பாலியல் வன்முறைகள் ஆகியவற்றை விரிவாக விசாரணைசெய்து, ஆவணப்படுத்தும் பிரதான அமைப்பாகத் திகழ்கின்றது. தென்னாபிரிக்க நிலைமாற்று நீதி நிபுணர், யஸ்மின் சூக்கா அவர்களால் இவ்வமைப்புத் தலைமை தாங்கப்படுவதுடன், நீதிமன்றங்கள், ஐ.நா. சபை, பிரித்தானியாவின் Preventing Sexual Violence Initiative ஆகிய அமைப்புக்களில் பணியாற்றிய அனுபவம் வாய்ந்தவர்களையும் கொண்டுள்ளது.
↖ itjpsl.com

சிறிலங்காவின் ஜனநாயகத்திற்கான ஊடகவியலாளர்கள் அமைப்பு (JDS) வெளிநாடுகளில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்ட ஊடகவியலாளர்கள். எழுத்தாளர்கள், மனித உரிமைக் காப்பாளர்கள் ஆகியோரால் 2009 இல் கூட்டாக உருவாக்கப்பட்டது. 2009 இறுதிப்போரில் சிறிலங்காவில் நடந்த மிகமோசமான கொடுமைகள் சில வெளியில் தெரியவருவதற்கு இவ்வமைப்பு காரணமாக இருந்தது மட்டுமன்றி, அத்தீவின் மனித உரிமைகள் நிலைமையினை கண்காணித்து அறிக்கைகளையும் வெளியிட்டுவருகின்றது. எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பின் சிறிலங்காவிற்கான பங்காளியாகவும் இவ்வமைப்பு செயற்படுகின்றது.
↖ jdslanka.org

1997 ஆம் ஆண்டு மனித உரிமைகள் வழக்கறிஞர்களாலும், செயற்பாட்டாளர்களாலும் ஆரம்பிக்கப்பட்ட மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையம் (CHRD) சிறிலங்காவில் சிறுபான்மையினருக்கான சட்ட ஆதரவையும் மூலோபாய வழிகாட்டல்களையும் வழங்கும் ஒரு முன்னணி மனித உரிமைகள் அமைப்பாகத் திகழ்கின்றது. அடிநிலை மக்கள் வரை சென்றுள்ள அதன் மனித உரிமைகள் பாதுகாப்பாளர்களின் வலையமைப்பும், புதைகுழி அகழ்வுப்பணிகள் உள்ளிட்ட, பாதிக்கப்பட்டவர்களுடனும் அவர்களது குடும்பங்களுடன் முழுமையாக இணைந்து செயற்படும் அணுகுமுறையுமே அவர்களது பலமாகும்.
↖ srilankachrd.org

காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள் (FoD) அமைப்பானது 1980 முதல் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக பணியாற்றி வருவதுடன், ஒக்ரோபர் 27ஆம் திகதியினை காணாமல் போனவர்களிற்கான வருடாந்த நினைவு நாளாகவும் அறிவித்து, 'காணாமல் போனவர்களுக்கான நினைவுச்சின்னம்' இனையும் அமைத்துள்ளார்கள். இவர்கள் காணாமல்போதல்களுக்கு எதிரான ஆசிய கூட்டமைப்பிலும் (AFAD), வலிந்து காணாமல் ஆக்கப்படுதல்களுக்கு எதிரான சர்வதேச கூட்டணியிலும் (ICAED) உறுப்பினர்களாக இருக்கின்றார்கள்.